விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 002 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 12, சனிக்கிழமை 28.11.2015






# தாயகமெங்கும் நேற்று வெளிப்படையாகவே மாவீரர்களுக்கு அஞ்சலி

## மாலை 6.05 இக்கு நினைவுச் சுடரேற்றி உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், நவம்பர் 28

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் நேற்று வெளிப்படையாகவும் உணர்வுபூர்வமாகவும் மாவீரர் நாள் மக்களால் நினைவுச் சுடர் ஏற்றி அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப் போர் மௌனித்து 6 ஆண்டுகளின் பின், இராணுவக் கெடுபிடிகளின்றி, வெளிப்படையாகவும் அமைதியாகவும் மாவீரர்களுக்குத் தமது இடங்களிலே மக்கள் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை 6.05 மணியளவில் மாவீரர்கள் நினைவாக மணி ஒலி எழுப்பப்பட்டதையடுத்து, 6.06 மணியளவில் ஒரு நிமிட மௌன வணக்கம் செலுத்தப்பட்டது.

இதையடுத்து, மாலை 6.07 மணியளவில், ஒழுங்கமைக்கப்பட்ட பொது இடங்களிலும், வீடுகளிலும், தமிழ் மக்கள் மாவீரர் நினைவுச் சுடர்களை ஏற்றி வணக்கம் செலுத்தினர். இதையடுத்து, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் மாவீரர் துயிலும் பக். 22



"2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவக் கெடுபிடிகள், அடக்குமுறைகள், நெருக்குவாரங்கள் இன்றி தமிழர் தாயகப் பகுதியில் இம்முறை சுதந்திரமாக – வெளிப்படையாக மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வுகள் பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்று."

## புலம்பெயர் நாடுகளிலும் பெரும் எழுச்சி

*மாவீரர்களுக்கு தீபமேற்றி அகவணக்கம்*

யாழ்ப்பாணம், நவ. 28

ஈழதேசத்தின் விடிவுக்காக – தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களை – மாவீரர்களை நினைவுகூர்ந்து புலம்பெயர் தேசங்களில் மாவீரர்



நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. இதில் மக்கள் பெரும் எடுப்பில் பங்கெடுத்து, வீரகாவியமான தங்கள் உறவுகளை – மலர்தூவி – கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தினர். அத்துடன், மாவீரர் தினப் பாடலும் ஒலிக்க விடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் பக். 22

## ஆற்றில் மூழ்கி இளைஞர் சாவு

வடமராட்சி, நவ.28

வடமராட்சி தொண்டமானாறு ஆற்றில் மூழ்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்தபோதே ஆற்றில் அடித்து செல்லப்பட்ட குறித்த இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்த பக். 22

ஞாயிறு வெளியீடான **சூரியகாந்தி** நாளைய உதயனில் இணைக்கப்படாது. எனவே நாளைய உதயனின் விலை வழக்கம் போல் 20 ரூபாவாகும்.

முச்சந்தி முரளி



நேற்றையோட நானும் வந்திட்டன் பாருங்கோ...

## இனியாவது அரசின் மனக் கதவு திறக்கட்டும்

ரயில் முன் பாய்ந்து சாவடைந்த கொக்குவில் இந்து மாணவன் செந்தூரனின் இறுதி ஊர்வலத்தில் நேற்றுப் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு அஞ்சலி செய்தனர்.

விரிவு - பக். 7

## மீள்குடியேற்றத்துக்காக 6.6 மில்லியன் பவுண்ட்ஸ்

### இலங்கைக்கு வழங்குகிறது பிரிட்டன்

மோல்டோ, நவ. 28

போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்காக பிரிட்டன் அரசு 6.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் நிதியை இலங்கைக்கு வழங்குவதாகப் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார்.

போரினால் சின்னாபின்னமாகிய பகுதிகளை மீளக்கட்டியெழுப்பி –மக்களை மீளக்குடியமர்த்துவதற்காகவே குறித்த நிதியுதவி வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்காகமோல்டா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்த நிதியுதவி தொடர்பில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உறுதி



வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பிரிட்டன் பிரதமர், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பக். 22

## கடவையில் முதியவரை மோதித் தள்ளியது ரயில்

சாவகச்சேரி நவ.28

பத்திரிகை வாசித்துக் கொண்டு ரயில் கடவையைக் கடந்த முதியவரை ரயில் மோதித் தூக்கி வீசியது. காயங்களுக்கு இலக்கான இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி சங்கத்தானை ரயில் நிலையத்துக்கு அருகில் பக். 22

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அவசியம்

### கல்முனை மாநகர சபையில் தீர்மானம்

அம்பாறை, நவ. 28

நாட்டுக்கு வருமானம் ஈட்டித் தருவதில் உயிர் நாடியாகத் திகழும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வாக்குரிமையைப் பயன்படுத்தும் வகையில், வாக்களிக்கும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று, கல்முனை மாநகர சபையின் மாதாந் தக் கூட்டத்தில் ஏகமனதாக பக். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமறவர்களுக்காகத் தாயகமெங்கும் நேற்று கொழுந்து விட்டெரிந்தது சுடர்

யாழ்ப்பாணம், நவ. 28
தமிழர்களின் உரிமைக்காக அமைதியான வாழ்வை நோக்கிய தாயக மண் மீட்புக்காகக் களமாடிமடிந்தவீரமறவர்களான மாவீரர்களுக்கு தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் பல இடங்களிலும் பலராலும் வெளிப்படையாகவேசுடரேற்றிமாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களால் என்றுமே மறக்க முடியாத நேற்றைய மாவீரர் தினத்தில் யாழ்.பல்கலையில் மாவீரர்களை நினைவுகூரும் பாடலும் ஒலிபரப்பப்பட்டே சுடரேற்றிஅஞ்சலிசெலுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம், நல்லூர் கந்தசுவாமி கோவில், முல்லைத்தீவு கடற்கரை, முல்லைத்தீவு துயிலும் இல்லம் உள்ளிட்ட பல இடங்களிலும் நேற்றுப் பிற்பகல் 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் நேற்று மதியம் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் கோயில் முன்பாக ஒன்றுகூடினர். அங்கு கோயில் மணி ஒலிக்கச் சுடரேற்றப்பட்டன. பின்னர் மாவீரர்களை நினைவு கூரும் பாடல் ஒலிபரப்பப்பட்டது. பாடல் முடியும் வரையிலும் அந்த இடத்தில் நின்று அனைவரும் அஞ்சலி செலுத்தினர். இதுவரை ஆகுதியான வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். என்று கூறி அங்கு அஞ்சலி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்திலுள்ள மாவீரர் நினைவிடத்தில் மாவீரர் புகைப்படம் வைக்கப்பட்டு அந்த இடத்திலும் மாணவர்களால் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதற்கு முன்னதாக யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாகவும் யாழ்.மரியன்னை போராலயம் முன்பாகவும் வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். இவை தவிர மாவீரர்களின் குடும்பத்தினரும், நண்பர்களும் தத்தமது வீடுகள் மற்றும் பிரத்தியேக இடங்களில் ஈகச் சுடரேற்றி உணர்வுபூர்வமாகத் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.




வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்றையதினம் மாலை 6.05 மணிக்கு தீபமேற்றி மாவீரர்களுக்கு வீர வணக்கங்கள் செலுத்தப்பட்டன.

## முல்லைத்தீவில் சுடரேற்றல்



முல்லைத்தீவு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரால் நேற்று மாலை 6.05 மணிக்கு அவர்களுடைய இல்லங்களில் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டார்கள்.

அதில் உரை நிகழ்த்திய ரவிகரன், தமிழ் இனத்துக்காகத் தமது வாழ்வின் சுகங்களைத் தியாகம் செய்து இந்த மண்ணில் விதையானவர்களே மாவீரர்கள். அவர்கள் எங்கள் மக்களின் பிள்ளைகள். இந்த நாளில் காலத்தால் சாகாத அந்த காவிய நாயகர்களைப் பூசித்து எம் நியாயமான உணர்வுகளை உலகின் முன் எங்கள் மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவது மனித நாகரீகம். அந்த உலக பொது நாகரீகத்தையே எங்கள் மக்கள் இன்று நிலை நிறுத்துகிறார்கள். இனியும் நிலை நிறுத்துவார்கள்-என்றார்.

இதேவேளை, முல்லைக் கடற்கரையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் தீபம் ஏற்றி மாவீரர்களை நினைவு கூர்ந்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களில் மாவீரர்களின் பெற்றோர்களாலும் உரித்துடையோராலும் வர்த்தகர்களினாலும் அவரவர் இல்லங்களிலும் வர்த்தக நிலையங்களின் முன்பாகவும் ஆலயங்களிலும் சுடரேற்றி மாவீரர்களுக்கு உணர்வு பூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது.



அதனால் நேற்றுக்காலை தொடக்கம் இராணுவப் புலனாய்வாளர்களின் நடமாட்டமும் கண்காணிப்பும் அதிகமாக இருந்தது. உள் வீதிகளிலுள்ள மக்களிடம் மாவீரர் தின ஏற்பாடுகள் ஏதும் இருக்கின்றதா எனவும் இராணுவத்தினர் விசாரித்திருந்ததாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் அருகே நேற்று மாலை 6 மணி முதல் போக்குவரத்துப் பொலிஸார் மறைந்து நின்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.



## கிளிநொச்சியில் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பினரால் பிரத்தியேகமான இடம் ஒன்றில் நேற்று மாலை 6.05 மணிக்கு சுடரேற்றி மாவீரர் தூபியை உள்ளடக்கிய புகைப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து வீரமறவர்களை நினைவுகூர்ந்தனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தலைமையில் பொதுமக்களால் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் தீபங்களும் ஏற்றப்பட்டது. நேற்று மாலை கிளிநொச்சி பரந்தன் உள்ளிட்ட பல பகுதிகளில் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினருடைய நடமாட்டம் அதிகமாக இருந்தது. பரந்தன் சந்தியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர்.

## வீர மறவர்களுக்கு வவுனியாவிலும் மணி ஒலிக்க சுடர் விட்டன தீபங்கள்

வவுனியா மாவட்டத்தில் மணி ஓசை எழுப்பப்பட்டு மண்ணின் விடுதலைக்கு வித்திட்ட வீர மறவர்கள் நினைவு கூரப்பட்டார்கள். வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கி.தேவராஜன் தலைமையில் மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் உணவு பூர்வமாக இடம்பெற்றன.



இந்த நிகழ்வுகளில் வட மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, எம்.பி. நடராஜ் மற்றும் வீர மறவர்களின் உறவுகளும் கலந்து கொண்டனர். மணி ஓசை எழுப்பப்பட்டு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் சொல்லி வணக்குகின்றோம் எனும் பாடல் ஒலிக்கப்பட்டு உணர்வு பூர்வமாக வணக்கம் செலுத்தப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் மற்றுமொரு நிகழ்வு வவுனியா வயிரவபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

## கிழக்கிலும் நினைவெழுச்சி

கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களிலும் பொதுமக்கள் தத்தமது வீடுகள் மற்றும் பொது இடங்களில் ஈகச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். நேற்றுப் பிற்பகல் மற்றும் பகல் வேளைகளில் அவர்கள் இவ்வாறு சுடரேற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் முயற்சிக்குக்கூட தடை விதிக்கப்பட்டு சகலரதும் மீதும் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. பொலிஸார், பொலிஸ் புலனாய்வாளர்கள், இராணுவ புலனாய்வாளர்களால் இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வந்த போதும் அதனையும் முறியடித்து எங்காவது சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது. ஆனால் கடந்த முறையைப் போன்று இம்முறை அதிக அழுத் தம் இல்லை என்று கூறினாலும் இம்முறை பல்கலைக்கழகத்தில் அனைவரும் வெளிப்படையாகவே சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

## மன்னார் மாதா ஆலயத்தில் பொதுச் சுடரேற்றி அஞ்சலி



மன்னாரில் மாவீரர்கள் நினைவு நேற்று மாலை மன்னார் எழுத்தூர் அடைக்கலமாதா ஆலயத்தில் பிரார்த்தனைகளுடன் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் வி.எஸ்.சிவகரன் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் இ.செபமாலை அடிகளார், அதன் செயலாளர் பி.ஏ.அந்தோனி மார்க், வட மாகாண சபையின் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், அதன் உறுப்பினர் பிறிமூஸ் சிராய்வா, மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் ஞானப்பிரகாசம், அதன் உறுப்பினர்களான ரெட்ணசிங்கம் குமரேஸ், மேறினஸ் மற்றும் அருட் தந்தையர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த- 4-21-101-402-102-106-ரி7-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கவரிமா' பயிற்றை விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ். குடாநாட்டு விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் 'கவரிமா' என்ற பயிற்றை இன விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது. மிகவும் நீளம் கூடியதாகவும் அதாவது குரங்கு வால் பயிற்றங்காய் போன்று காய்க்கும் இந்தப் பயிற்றை விதைகளை விவசாயிகள் தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதனைவிட பாகல் விதைகளையும் சங்கம் விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

(ஐ-17)

# விதி மீறிய சாரதிகளுக்கு அபராதம் 52, 000 ரூபா

போக்குவரத்து விதிமுறை களை மீறிய வாகனச் சாரதிகள் 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 24 ஆம் திகதி 52 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தனித் தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து அபராதம் விதிக்கப்பட்டன. மது போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 5 ஆயிரத்து 500 ரூபா வீதமும், மது போதையில் தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியநபரை, வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காட்டியபோதிலும் நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 11 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தி சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், மோட்டார் சைக் கிளோட் டிக்கு 8 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி செலுத்திய வாகனச் சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், பதிவு செய்யப்படாத வாக னம் செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)


## Sun Travels

U.K, பிரான்ஸ், ஜேர்மன், அமெரிக்கா போன்ற சகல நாடுகளுக்குமான விசிற் பொன்சர் விசாக்கள் Online மூலம் விண்ணப்பங்கள் செய்து கொடுக்கப்படும். மேலும் இந்தியா விசா சிலமணி நேரத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் விமான பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக் கொண்டால் விசா விண்ணப்பப் படிவங்கள் இலவசமாகத் நிரப்பித்தரப்படும்.

கோயில்வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம். (66370)(11,15,17)

077 936 1427,
077 225 9030

## 1 to 1 Free

30.11.2015 வரை மட்டுமே

Village Style Restuarant




ஒரு லார்ஜ் பீற்சாவிற்கு ஒரு சிறிய பீற்சா இலவசம்

Take away
Dining
Delevery
Available

நாகரீகமான சூழலில் குடும்பத்துடன் உண்டு மகிழ

பிறைட் ரைஸ் 20% விலைக்கழிவு

Open 11 am to 11 pm

11 to eleven

128, Palaly Rd, Thirunelveli.

021 22 16 700

### அறைகள் நாள் வாடகைக்கு

600.00- 3950.00 - A/C இணைந்த குளியலறை கோட்டையிலிருந்து HOTEL VILLA வரை போக்குவரத்து இலவசம். 422/1,Galle Road வெள்ளவத்தை.
072 255 2222 011 499 9944 Mohamed

## வெளிநாட்டில் வருவாயுடன் கல்வி
## Hotel Management-in Malaysia

A/L Pass/Fail-வருவாய் வருத்தம் எதற்கு மலேசியா இருக்கு

கவர்ச்சிகரமான மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவுகளுடன் உங்கள் இனிய வாழ்க்கையை ஆரம்பியுங்கள்

கற்கைநெறி கட்டணம் இலவசம்* *Conditions Apply

Limited seats only



iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
077-3013060,021-4926222
107, B 1/1,Galle Rd, Wellawatte, Colombo 6

## சர்வதேச தமிழ் தொலைக்காட்சிக்கு
# ஒளிபரப்பாளர்கள் தேவை




லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் IBC தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாளராக பணிபுரிவதற்கு ஏற்ற முகவெட்டு, குரல்வளம், பொது அறிவு உள்ளவரா நீங்கள்?

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1) ஒளிபரப்பாளர் - இலங்கை நிகழ்வுகள்
2) ஒளிபரப்பாளர் - சர்வதேச நிகழ்வுகள்

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
077 965 5636
076 865 4852

### வீடு வாடகைக்கு

அரச பணிபுரியும் பெண்களுக்கு சமையல் அறை வசதியுடன் நல்லூர் பகுதியில் பாதுகாப்பான அறை வாடகைக்கு உண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

தொடர்புக்கு : 071 4620 806

### தேவை

நல்ல நிலையில் உள்ள பாவித்த மோட்டார் சைக்கிள்கள் தேவை. உரிமையாளர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்

077 9086737

### Room for Rent

பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையில் உள்ள புதிதாக கட்டப்பட்ட கட்டடத் தொகுதியில் அறைகள் வாடகைக்கு விடப்படும். (பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு:
077 9738214, 077 2198642

### பெயர் மாற்றம்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சபாரத்தினம் விக்னேஸ்வரன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சபாரத்தினம் விக்னேஸ் என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(66353)(13.16) சபாரத்தினம் விக்னேஸ்.

### மணமகள் தேவை

யாழ்.இந்து 1978இல் பிறந்த பூச நட்சத்திரம் 37½ கிரக பாவமுடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை.
தொடர்பு:
077 593 5758, 077 844 9890
(66309)(11,16)

### விற்பனை பிரதிநிதி தேவை (Sales Rep)

எமது நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. முன் அனுபவம் உடையவர்களும், தகுதியுடையவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

பிள்ளையார் இன்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (66368)(11,15,17)

### விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல மின் சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. எதிர்வரும் (30.11.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

jaffna Electricals
No:94 (3) Stanly Road, Jaffna.
T.P.No: 021 222 2353
Fax No : 021 222 4302

### விற்பனைக்கு

2மாத, 1 மாத, 3 கிழமை, 2 கிழமை, 1 கிழமை, 1 நாள் கிரிராஜ் ராக ஊர்க் குஞ்சுகள் விற்பனைக்கு உள்ளன. 077 999 4655 (66366)(11,15,17)

### ஓட்டோ விற்பனைக்கு

QJ XXXX இலக்கமுடைய முற்றிலும் சீர் செய்யப்பட்ட ஓட்டோ விற்பனைக்கு உண்டு.
077 225 9030 (66371)(11,15,17)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Bajah Wind 125 C.C. மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 614 6434 (66325)(11,15)

### வீட்டுடன் கூடிய கடை வாடகைக்கு

இல.73, பிறவுண்வீதி, நீராவியடியில் சிறிய வீட்டுடன் கடையும் சேர்த்து வாடகைக்கு கொடுக்கப்படும்.
077 967 2055 (66365)(11,15,17)

### பெயர் மாற்றம்

மாணிக்கம் செல்வமணி ஆகிய நான் இன்று தொடக்கம் மாணிக்கம் செல்வராணி என பெயர் மாற்றம் செய்துள்ளதுடன் இன்று முதல் செல்வராணி என்ற பெயரினையே பாவிப்பதுடன் சகல ஆவணங்களிலும் செல்வராணி எனவே ஒப்பமிடுவேன். என சகலருக்கும் அறியத்தருகின்றேன். செல்வராணி.
(66352)(13.15)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

### வேலையாள்கள் தேவை

பிரபல்யமான சைவ உணவகத்துக்கு
- தலைமைச் சமையலாளர் - 1
- தோசை, வடை தயாரிப்பவர் - 1

உடன் தொடர்பு கொள்ளவும்.
077 363 8149,
077 919 7619 (66367)(11,15,17)

### மலிவு விற்பனை

காலம் 28, 29 சனி, ஞாயிறு
காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 9.00 மணிவரை

ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டாம் தர
ரில்லர்கள், கிறைண்டர்கள், தச்சுவேலை மற்றும் இரும்பு வேலைகளுக்கான கருவிகள்

VARSAANAS HARDWARE
No.210, Navalar Road, Jaffna.
077 - 974 9343, 021 - 222 2588

LANKA DEEP WELLS (PVT) LTD
C.R.I. PUMPS

## தண்ணீர் மோட்டர்கள்

கிணற்றின் மேற்புறத்தில் பொருத்திவிடக் கூடிய 100 அடி ஆழத்திலிருந்து உறிஞ்சியெடுக்கும் ஜெற் (Jet) தண்ணீர் மோட்டர்கள் 1 மற்றும் 1.5 குதிரைவலுக் கொண்டவைகளாக இருவகையான தண்ணீர் மோட்டர்களை எமது நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

3மற்றும் 4 அங்குல விட்டத்தைக் கொண்டுள்ள குழாய்க்கிணறு மோட்டர்கள் (Submersble Pumps) ஓயில் மற்றும் நீரினால் குளிரடையும் இருவகை தண்ணீர் பம்பிகளையும் கூட எமது நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து நீர் இறைக்கும் பம்பிகளும் இந்தியாவின் CRI நிறுவனத்தின் உற்பத்திகளாகும்.



இறக்குமதி செய்து விநியோகிப்போர்:
லங்கா டீப்வெல்ஸ் (தனியார்) நிறுவனம்
இல. 312, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
தொ.பே.
037 567 3488, 037 222 9906
அழையுங்கள்: 077 261 9500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக உயிர்த் தியாகத்தை ஒருபோதும் விரும்பவில்லை

## அரசியல் கைதிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28

எமது விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்வதை ஒரு போதும் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலைக்காக சாத்வீக வழியிலான – அறவழிப் போராட்டங்களை முன்னெடுப்பதே சாலச் சிறந்தது என்று தெரிவித்துள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் இ.செந்தூ ரனின் சாவு தொடர்பில், கொழும்பு மகசின் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது சட்டத்தரணிகள் ஊடாக அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளாகிய எமது விடுதலையைக்கோரி தன்னுயிரை தியாகம் செய்த மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனுக்கு நாடு முழுவதும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சகல அரசியல் கைதிகளும் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் செலுத்துவதோடு, கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக குடும்பங்கள் மற்றும் உறவுகளையும் பிரிந்து சிறைகளில் வேதனையில் வாடும் எங்களுக்கு இந்த மாணவனது திடீர் உயிர்த் தியாகம் மிகுந்த சோகத்தினையும் வேதனையையும் தந்துள்ளது.

இவரது இழப்பு தொடர்பான எமது உணர்வுகளை எழுத்தில் சொல்லி மட்டுப்படுத்த முடியாது. எனவே நாங்கள் மிகவும் ஆழ்ந்த வேதனையுடன் எமது அஞ்சலிகளை அந்த மாணவனது குடும்பத்திற்கும் அவருக்கும் செலுத்துவதோடு இனிமேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாரும் உயிர்த்தியாகம் செய்வதை ஒரு காலமும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் விரும்பவில்லை என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன், மாறாக சாத்வீக வழியிலான அறவழிப் போராட்டங்களை முன்னெடுப்பதே சாலச் சிறந்தது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்படியான சம்பவங் களை இனிமேல் தவிர்த்துக் கொள்ளுமாறு எங்களை நேசிக்கும் மக்களாகிய உங்களைஅரசியல் கைதிகளாகிய நாம் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம் – என்றுள்ளது. (த-5)

## ஆடுகள் கடத்தியோர் கைது

மாங்குளம். நவ.28

கடந்த சில நாட்களாக ஏ9 மாங்குள வீதியில் வெள்ளை வானில் இருந்து நல்லின ஆடுகளை கடத்திய 5 பேரையும் , வாகனத்தையும் வவுனியாவில் வைத்து மாங்குளப் பொலிஸார் கைது செய்தனர்.

மாங்குளம் பகுதியில் பொதுமக்கள் வாழ்வாதார உதவிக்காக வழங்கப்பட்ட நல்லின ஆடுகளே கடந்த சில நாள்களாக வெள்ளை வானில் கடத்தப்பட்டன.

மாங்குளம்-முல்லைத்தீவு வீதியில் உள்ள கருப்பட்டமுறிப்பு, மணவாளன்பட்டமுறிப்பு பகுதியில் கடந்த 23 ஆம் திகதி மாற்றுத்திறனாளி ஒருவர் 32 ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருந்த வேளை வெள்ளை வானில் வந்த சிலர் மதுசாரத்தைப் பலக்காரமாக குடிக்க வைத்து அவர் மயக்க முற்ற நிலையில் நடுகாட்டில் தூக்கி எறிந்து விட்டு ஆடுகள் பலவற்றையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்றையதினம் பாடசாலை மாணவன் ஒருவரினால் மாங்குளப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து வவுனியாவில் வைத்து 5 சந்தேக நபர்களையும், 2 ஆடுகளுடன் வெள்ளை வானையும் கைப்பற்றிய பொலிஸார், வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது ஒருவர் அதில் தொடர்பு அல்லாதவர் என்றும், மற்றைய 4 பேரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த 4 பேரில் ஒருவர் தனியார் வங்கியில் லீசிங் பணத்தைச் செலுத்தாதவர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரி எனக் கூறப்படுகின்றது. (த-422)

## அடையாள அட்டை, லைசென்ஸ் யாழ்.பிரதம தபாலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஜி.சி.ஈ சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகமின்றி யாழ். பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளன.

இவற்றின் முகவரிக்கு அமைய உரியவர்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணத்தினால் குறிப்பாக ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து கிடைக்காவிடின் சம்பந்தப்பட்ட தபாலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோன்று சாரதி அனுமதிப் பத்திரங்களும் இவ்வாறே உரிய முகவரிக்கு விநியோகிக்க முடியாது தபாலகத்தில் உள்ளன. இதற்கு விண்ணப்பித்துக் கிடைக்காதவர்கள் உரிய அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தபாலக அதிகாரி ஒருவர் கூறினார். (த-17)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.28

மருத்துவர் எஸ்.சிவதாஸ் எழுதிய 'சிறுவர்களுடன்' எனும் நூல் வெளியீடு நேற்று முன்தினம் உள வளவாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நூலின் வெளியீட்டுரையை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வழங்கினார். நூலின் முதற் பிரதியை வைஸ்ணவி சுரேஸ்குமார் நூலாசிரியரிடம் பெற்று செல்வி சி.விசாகியிடம் கையளித்தார். ஏற்பு ரையை நூலாசிரியர் மருத்துவர் எஸ்.சிவதாஸும், நூலின் ஆய்வுரையை வடமாகாண உளவள சமூக நிலைய உதவி முகாமையாளர் செல்வி.உதயகலா சிவபாதசுந்தரமும் வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் சான்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஜ-402)

### பகிரங்க அறிவித்தல்
### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 35இன் கீழான விண்ணப்பம்

வழ.இல: 18/2015
நம்பிக்கைச் சொத்து

குகதாசன் விமலதாஸ்
உசன் 'காட்டு வளவு' என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் கந்தசுவாமி கோயிலின் முகாமையாளரும் தர்மகர்த்தாவும்.
உசன், மிருசுவில்.

மனுதாரர்

மேற்படி மனுதாரர் இம்மன்றுக்கு மனு சத்தியக்கூற்று மற்றும் ம1-ம5 வரையான ஆவணங்கள் அனைத்தும் உசன் கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமானதும் கீழே ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுவதுமான ஆதனத்தைக் குறித்த கந்தசாமி கோயிலின் நயமுருத்துக்காகவும் கோயிலுக்குச் சொந்தமான பெரிய தோட்டங்களை தென்னை பயிர் மீள் நடுகை செய்து அபிவிருத்தி செய்வதற்காகவும் பயனுள்ள வகையில் கையுதிர்க்க மன்றின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

ஆகையால் மனுதாரரின் மனுவுக்கு எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் தமது ஆட்சேபனையை இத்திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் இம்மன்றுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் விடப்படுகின்றது.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப்பகுதி கச்சாய்க் கோயிற் பற்று விடத்தற்பளை இறையில் ஜே 331 விடத்தற்பளை கிராம சேவையாளர் பிரிவில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் 'சங்கடக் கடவையும் குடியிருப்பும்' நி.பர. 10 பத்து இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நடராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 21.01.2014 திகதிய 962ஆம் இலக்க நில அளவைப் படத்தின் படி இதன் விசாலம் நி.பர 11 குளி 16.56 உம் சிறிய வீடு கிணறும் இவைக்கு எல்லைகள் கிழக்கு: கிருஷ்ணன் சிவராசாவின் ஆதனம் வடக்கு: தற்போது றோட்டு மேற்கு: விநாயகமூர்த்தி ஆறுமுகத்தின் ஆதனம் தெற்கு: கே.ஜெயசோதியின் ஆதனம் இதனடங்கலும்.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.

(66361)(11,15,17)

### பெயரும், பதிவிலக்கமும் மாற்றம் செய்தமை தொடர்பானது

மேற்படி மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் பதிவு இலக்கம் 7147 எனப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்த நிறுவனம் 27.05.2015 ஆம் திகதி தொடக்கம் பதிவு இலக்கத்தினையும், பெயரினையும் கீழ்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

பெயர் :- மன்னார் மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கம்
பதிவு இல :- 8635

R.S.கொடியன்
தலைவர்
மன்னார் மாவட்ட பேருந்து
உரிமையாளர் சங்கம்

(66350)(11,15)

### பகிரங்க அறிவித்தல்
### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 35இன் கீழான விண்ணப்பம்

வழ.இல: 17/2015
நம்பிக்கைச் சொத்து

குகதாசன் விமலதாஸ்
உசன் 'காட்டு வளவு' என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் கந்த சுவாமி கோயிலின் முகாமையாளரும் தர்மகர்த்தாவும்.
உசன், மிருசுவில்.

மனுதாரர்

மேற்படி மனுதாரர் இம்மன்றுக்கு மனு சத்தியக்கூற்று மற்றும் ம1-ம5 வரையான ஆவணங்கள் அனைத்தும் உசன் கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமானதும் கீழே ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுவதுமான ஆதனத்தைக் குறித்த கந்தசாமி கோயிலின் நயமுருத்துக்காகவும் கோயிலுக்குச் சொந்தமான பெரிய தோட்டங்களை தென்னை பயிர் மீள் நடுகை செய்து அபிவிருத்தி செய்வதற்காகவும் பயனுள்ள வகையில் கையுதிர்க்க மன்றின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

ஆகையால் மனுதாரரின் மனுவுக்கு எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் தமது ஆட்சேபனையை இத்திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் இம்மன்றுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் விடப்படுகின்றது.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப்பகுதி கச்சாய்க் கோயிற் பற்று விடத்தற்பளை இறையில் ஜே 331 விடத்தற்பளை கிராம சேவையாளர் பிரிவில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் "நாவிதன் சாட்டி" நி.பர. 21,¾ இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நடராசா அவர் களால் அளந்து வரையப்பட்ட 21.01.2014 திகதிய 963 ஆம் இலக்க நில அளவைப் படத்தின் படி இதன் விசாலம் நி.பர 21 குளி 17.52 உம் சிறிய கட்டடமும் கிணறும் இவைக்கு எல்லைகள் கிழக்கு: றோட்டு ஆதனம் வடக்கும் மேற்கும்: றோட்டு தெற்கு: கயிலாயபிள்ளை சிவநேசனின் ஆதனமும் ஒழுங்கையும் இதனடங்கலும்.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.

(66360)(11,15,17)

### பகிரங்க அறிவித்தல்
### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 35இன் கீழான விண்ணப்பம்

வழ.இல: 19/2015
நம்பிக்கைச் சொத்து

குகதாசன் விமலதாஸ்
உசன் 'காட்டு வளவு' என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் கந்த சுவாமி கோயிலின் முகாமையாளரும் தர்மகர்த்தாவும்.
உசன், மிருசுவில்.

மனுதாரர்

மேற்படி மனுதாரர் இம்மன்றுக்கு மனு சத்தியக்கூற்று மற்றும் ம1-ம5 வரையான ஆவணங்கள் அனைத்தும் உசன் கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமானதும் கீழே ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுவதுமான ஆதனத்தைக் குறித்த கந்தசாமி கோயிலின் நயமுருத்துக்காகவும் கோயிலுக்குச் சொந்தமான பெரிய தோட்டங்களை தென்னை பயிர் மீள் நடுகை செய்து அபிவிருத்தி செய்வதற்காகவும் பயனுள்ள வகையில் கையுதிர்க்க மன்றின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

ஆகையால் மனுதாரரின் மனுவுக்கு எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் தமது ஆட்சேபனையை இத்திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் இம்மன்றுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் விடப்படுகின்றது.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப்பகுதி கச்சாய் கோயிற்பற்று உசன் இறையில் ஜே 329 உசன் கிராம சேவையாளர் பிரிவில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் 'குடியிருப்பு வளவு' நி.பர. 10 பத்து இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நடராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 22.01.2014 திகதிய 956 ஆம் இலக்க நில அளவைப் படத்தின் படி இதன் விசாலம் நி.பர 05 குளி 08.13 உம் பயிர்களும் இதற்கு எல்லைகள் கிழக்கு, கந்தையா பெண் பாக்கியத்தின் ஆதனம் வடக்கு: தனியார் ஆதனம் மேற்கு: றோட்டு தெற்கு: சரவணமுத்து பாலச்சந்திரனின் ஆதனம் இதனடங்கலும்.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரவிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு, நவ.28

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தில் கூட்டு எதிர்க்கட்சிகளிலுள்ள 44 பேர் கையொப்பமிட்டுள்ளதாகவும், பிரசன்ன ரணதுங்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் வெளிநாட்டில் உள்ளதால் கையொப்பமிடாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ)


### யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயரை நெஞ்சம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



Best Wishes

யாழ். மறைமாவட்டத்தின் புதிய
ஆயராக மேதகு
**ஜஸ்ரின் பேனாட்
ஞானப்பிரகாசம் ஆண்டகை**
திருநிலைப் படுத்தப்படும் இந்நன்நாளில் இறை
மக்களாகிய மாதகல் பங்கு மக்கள் இவரது பணிகள்
சிறக்க நெஞ்சம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
ஆயரின் பணி ஏற்பு யாழ். மறை மாவட்டத்தின் புதிய
சகாப்தத்தைத் தோற்றுவிக்க இறை ஆசீரையும்
இன்றைய நாளில் சிறப்பாக வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**பங்குத்தந்தை, பங்குமக்கள்.
மாதகல்.**



### புலமைப் பரிசில் சித்தியும் பத்தாவது அகவை வாழ்த்தும்



யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப
பாடசாலையின் புகழ் மிக்க மாணவனும்
உடுவில் கிழக்கைச் சேர்ந்த
**பரரூபசிங்கம் (ரூபன்) - மேனகா (மீரா)**
தம்பதிகளின் தலைமகன்
**பரரூபசிங்கம் ஜித்தேஷ்
(ஜித், ஜித்தன்) (158 புள்ளி)**



Congratulations

பத்து வயதினிலே பெற்றிட்ட வெற்றிதனில் பரவசமடைந்தோம் நாம்
சுற்றம் பல வாழ்த்தவும், சுகமாய் நீ வாழ்ந்திடவும்
சூடிடுவாய் பல பதக்கங்கள், சந்தோஷமும் பெற்றிடுவாய்
நல்ல பெயரெடுத்து நலமாக வாழ்ந்திடுவாய்
நன்றியுடன் எந்நாளும் ஆசிரியரை நினைத்திடுவாய்
பின் நாளில் பல வெற்றிகளை நீ பெற்றுவிட பிரியமுடன்

வாழ்த்துவோர்: உன்
அம்மா, அப்பா, தாத்தா, அம்மம்மா, மாமாமார்கள், அத்தைமார்கள், தங்கச்சி,
மச்சான்மார்கள் மற்றும் அக்கா, அன்ரி, சித்திமார், உற்றார்,
உறவினர்கள் அனைவரும்
**தொம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**
**021 224 0560**



### உளமார வாழ்த்துகின்றோம்



Congratulations

ஞான நீதியின் பிரகாசமான பெயர் சூட்டி,
இறை நல்லாயனாக யாழ். மறைக்கு
முடி சூட்டி, மந்தைகள் எமக்கு இறைவழிகாட்ட
இறைவன் சித்தம் கொண்டதால்
மேய்ப்பராகக் கோலம் கொண்ட
எமது ஆயர்
**அதி வணக்கத்துக்குரிய
பேரருட் திரு. ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
ஆண்டகையை** உளமார வாழ்த்தி நிற்கும்
**புதுக்குடியிருப்பு பங்கு திருச்சபை
பங்குத்தந்தையும், அருட்சகோதரிகளும், மக்களும்.**


## விசேட கல்வி அபிவிருத்தி வலயங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாற்றப்படும்

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.28

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் பிரதமரின் ஆலோசனைக்கமைய விசேட கல்வி அபிவிருத்தி வலயமாக மாற்றப்பட்டு கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றபோது கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலங்கையில் அனுமதி பெற்ற இந்தியப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதியாக சென்ற சுமார் 3 ஆயிரம் பட்டதாரிகள் தொழிலின்றி இருப்பதாக அறியப்பட்டுள்ளது. அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவிலும் இரண்டு பாடசாலைகள் வீதம் அருகிலுள்ள சிறந்த பாடசாலை என்ற திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பாடசாலை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

(த-வ)

## பனை, தென்னைச் சங்கங்களின் பணியாளர்களுக்கு நிவாரணம்

### இதுவரை 26 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். மாவட்டத்தில் இதுவரை 26 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை 9 பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விநியோகித்துள்ளன.

சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கோண்டாவில், அச்சுவேலி, கோப்பாய், சுன்னாகம், தெல்லிப்பழை, மானிப்பாய் மற்றும் சமாசம் உட்பட 9 பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்கள், பணியாளருக்கு உதவிப் பொருள்களை வழங்கியுள்ளன என்று வடக்கு மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்தின் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தென்மராட்சி கொத்தணி, வலிகாமம் கொத்தணி உட்பட மற்றும் 13 பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

குறிப்பாக இந்த வாரத்தில் மேலும் அநேகமான சங்கங்கள் இந்த இடர் நிவாரணத்தை வழங்கவுள்ளன. இதுவரை 26 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொருள்களை சங்கங்கள் வழங்கியுள்ளன.

ஒவ்வொரு சங்கமும் தமது நிதியில் இருந்தே இந்த உலர் உணவுப் பொருள்களை பணியாளர்ளுக்கு வழங்குகின்றன.

அநேகமான அங்கத்தவர்கள் அண்மைய மழையினால் தொழில் இன்றி பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-17)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.திருச்சபையை வழிநடத்துவதற்காக
இறைவன் தாமே தேர்ந்தெடுத்து இன்று
ஆயராக அபிஷேகம் செய்யப்படும்
அருட்கலாநிதி
**ஜஸ்ரின் பேனாட்
ஞானப்பிரகாசம்
ஆண்டகை**
அவர்களின் பணி வாழ்வு சிறக்க வாழ்க
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



பங்குத் தந்தையர்களுடன்
பங்குமக்கள்.
நெடுந்தீவு.



### Our heartiest Congratulations
**VIGNARAJAH SHAVINDRA**



on your outstanding
achievement at the
LL.B examination being the
only graduate from Jaffna.
We are very proud of you for
believing in yourself and
working hard towards
your goal.
May this be the beginning
of a successful journey. It will
lead you to the fulfillment of your dreams.
May God continue to bless you with future success and
abundant Happiness.

**Family Members in Vaddukkoddai.**



### உமது 'ஞானம்' என்றும் 'பிரகாசிக்க' வாழ்த்துகின்றோம்

எமது தமிழ் மக்களின்
விடியலுக்காய் இறைவனால் தெரிவு
செய்யப்பட்ட மேன்மைமிகு ஆயர்
**ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம்**
ஆண்டகை அவர்கள், தமது
பணியை சிறப்புடன் ஆற்றவும்,
உடல் உளநலம் பெற்று பல்லாண்டு
வாழவும், மறைந்த எமது பெற்றோர்
செபஸ்ரியாம்பிள்ளை-றெஜீனம்மா
ஆகியோரின் சார்பில் அவர்களது
பிள்ளைகளாகிய நாம்
வாழ்த்துகின்றோம்.



Best Wishes

**போயிட்டி, இளவாலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய அமைப்புக்கு பொதுச் செயலாளராக பட்ரிசியா

## கமலேஷ் சர்மா விடைபெற்றார்

மோல்டோ, நவ. 28
பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளராக பிரிட்டனைச் சேர்ந்த பரோநீஸ் பட்ரிசியாஸ்கொட்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



தற்போதைய பொதுச்செயலாளர் இந்தியாவின் கமலேஷ் சர்மாவின் இடத்திற்கே, பரோநீஸ் பட்ரிசியா பொதுநலவாய அமைப்பால் நியமிக்கப்பட்டுள்ளார்.
டொமினிக்காவில் 1955 ஆம் ஆண்டு பிறந்த, பரோநீஸ் பட்ரிசியா குடும்பத்துடன் பிரிட்டனில் குடியேறியுள்ளார்.
இந்த நிலையில் 1976 ஆம் ஆண்டு வழக்கறிஞராகப் பட்டம்பெற்ற பரோநீஸ் பட்ரிசியா அடுத்த ஆண்டே பிரிட்டன் இளவரசியின் வழக்கறிஞராக நியமனம் பெற்றார்.
அத்துடன் பிரிட்டன் சட்டமா அதிபராக 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் சட்டமறுசீரமைப்பு அமைச்சராகவும் பிரிட்டன் நாடாளுமன்ற செயலாளராகவும் உயர் பதவிகளை வகித்துள்ள பரோநீஸ் பட்ரிசியா ஸ்கொட்லாந்து தற்போது பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளராக தெரிவாகியுள்ளார்.
இதேவேளை, கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வந்த இந்தியாவைச் சேர்ந்த கமலேஷ் சர்மா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருக்கமான தோழராக விளங்கியவர். இதனால் பல விடயங்களில் பொதுநலவாய அமைப்பில் இலங்கைக்குச் சார்பாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.
தற்போது இலங்கையில் நிறைவேற்றப்பட வேண்டுமென ஐ.நா தீர்மானத்தில் கூறப்பட்ட பொறுப்புக்கூறும் உள்நாட்டுப் பொறி முறையில் பொதுநலவாய அலுவலக நீதிபதிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நடுநிலையாக பொதுச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டு மென தமிழ் மக்கள் சார்பு பிரிட்டன் இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
(த-வ)

# ஐரோப்பாவில் குடியேற அகதிகளுக்கு இடமில்லை

## பிரான்ஸ் பிரதமர் அறிவிப்பு

பேர்லின், நவ. 28
ஐரோப்பிய நாடுகளில் குடியேற, இனி அகதிகளுக்கு இடமில்லை என பிரான்ஸ் பிரதமர் மேனுவல் வால்ஸ் அறிவித்துள்ளார்.



ஜேர்மனி ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது பிரான்ஸ் பிரதமர் மேனுவல் வால்ஸ் மேலும் கூறியுள்ளதாவது:-
அகதிகளுக்கு புகலிடம் கொடுப்பது தொடர்பாக ஏற்கனவே ஐரோப்பிய நாடுகள்பலபிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. அகதிகளுக்கு புகலிடம் அளிப்பதன் மூலம் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அதிக அளவிலான பிரச்சினைகளை ஐரோப்பிய நாடுகள் சந்தித்து வருகின்றன.
இனிமேலும் இதனை அனுமதிக்க முடியாது. ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை கட்டுப்படுத்தினால் மட்டுமே அவற்றின் தலைவிதியை தீர்மானிக்கும். -என்றார்.
இதேவேளை, அதிக அளவிலான அகதிகளுக்கு புகலிடம் அளித்து வரும் ஜேர்மனி அரசை அவர் நேரடியாக விமர்சனம் செய்யவில்லை. அகதிகளுக்கு புகலிடம் அளிப்பது தொடர்பான விவகாரங்களில் ஜேர்மனி சான்சலர் நேர்மையான முடிவுகளை எடுத்து வருவதாக அவர் குறித்த செவ்வியில் சுட்டிக்காட்டியுள்ளார்.
(த-வ)

# குருநகர்ப் பிரதேசத்தில் டெங்கு தொற்று அதிகம்

வலிதென்மேற்கு, நவ 28
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கடற்கரையை அண்டியுள்ள குருநகர்ப் பகுதியில் ஒரேயொரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் ஒக்ரோபர் மாதம் இறுதிக் காலப் பகுதியிலிருந்து நவம்பர் மாத முற்பகுதிக்குள் ஒரு மாத காலத்துக்குள் சிறுவர் உட்பட 30இக்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.
மக்கள் நெருக்கமாக வாழும் சிறிய நிலப்பரப்புக்குள் டெங்கு நோயின் பரம்பல் 30 தினங்களுக்குள் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இந்தநோய் மேலும் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் கட்டுப்படுத்த முன்வந்துள்ள சுகாதாரப் பகுதியினர், அந்தப் பகுதியைச் சுற்றி முழுவீச்சி லான தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
வீடு வீடாகச் சென்ற சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன், டெங்கு நோயை ஏற்படுத் தக்கூடிய நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய தடயப் பொருள்களைக் கண் டறிந்து அழிப்பதிலும் ஈடுபட்டனர்.
மேலும், அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளில் குடம்பிகள் இருப்பதை அவதானித்த சுகாதாரப் பகுதியினர் அவற்றை அழிக்கும் வகையில் மீன் குஞ்சுகளைக்கிணற்றில் விட்டதுடன் புகையூட்டல் நடவடிக்கையையும் மேற் கொண்டனர்.
டெங்கு நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பூச்சியியல் ஆய்வும் இடம்பெற்றது. (த-115)

# வாகனங்களுக்கு 70 வீதமே லீசிங்காக வழங்க முடியும்

## நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி அறிவிப்பு


கொழும்பு, நவ.28
புதிதாகக் கொள்வனவு செய்யும் மோட்டார் வாகனங்களுக்கு வழங்க வேண்டிய லீசிங் வசதி, வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் நூற்றுக்கு 90 வீதத்தில் இருந்து 70 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.



இந்த நடைமுறை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
இதன்படி வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வோர் 30 வீதப் பணத்தைக் கட்டாயம் ஆரம்பக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.ஏற்கனவே 70 வீதமாக இருந்த லீசிங் வசதி 90 வீதம் வரை அண்மையில் நிதி அமைச்சினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-வ)

## மரண அறிவித்தல்கள்

### Rev.G.A அரியநாயகம்



"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் ஜீவகிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது"

Rev.G.A அரியநாயகம் அவர் கள் 24.11.2015 அன்று கர்த் தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் இயேசு நிலையம் திருச்சபையின் ஸ்தாபகரும், யாழ். மாவட்டத்தின் மூத்த கிறிஸ்தவ போத கருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.11.2015) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுப்பிட்டி "இயேசு நிலையம்" திருச்சபையில் நடை பெற்று, பழைய வேதக் கோயிலடி அல்வாய் வடக்கு, அல்வாய் புதிய ஏற்பாடு திருச்சபை கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

குறிப்பு : ஆராதனை
www.vanavilstudio.com
இணையத்தளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

தகவல்:
இயேசு நிலைய குடும்பத்தினர்.

(சி/20377)(11,15)

### திருமதி கண்ணகி தெய்வேந்திரம்



சோதி வீதி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகி தெய்வேந்திரம் 26.11.2015 வியாழக் கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (கனடா), விமலா (கனடா), கௌரி (ஜேர்மனி), குமரன் (லண் டன்) , தமிழினி (யா/ கோண்டாவில் சீ.சீ.த.க பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகம்மா, தவராசா, தங்கராஜா, மோகனராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும் அமுதா, சோதிலிங்கம், சந்திரபாலன், அனித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரமிளா, டிலோசனா, அஜித்திரன் , தீபக், தீபனா, கௌதம், கௌசன், சர்மிதா, சுஸ்மிதா,றிபேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தங்கம்மா மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு
077 923 2438 தமிழினி
077 610 0312 மோகன்

தகவல்
மகள் : தமிழினி

(66355)

### திருமதி தேவமணி வசந்தன்



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 43, மானிப்பாய் றோட், ஜின்னா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவமணி (கிளி) வசந்தன் நேற்று (27.11.2015) வெள்ளிக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அருமை மருமகளும், வசந்தனின் அன்பு மனைவியும், பிரகலாதன் (விவசாய அமைச்சு - வடமாகாணம்), பிரதீபன் (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), அனுஷா (கனடா), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், றாகினி, சுஜாதா (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை -கோப்பாய்), றாஜேஸ்வரன் (கனடா), நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், நிசங்கன், அபிநயன், தஸ்வின், சுருதி, சேந், வைஸ்ணவி, அகல்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 444 0300
இல.43 மானிப்பாய் றோட்,
ஜின்னா வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(66362)(11,15,17)

நியத்த ஜய
வெற்றி வாரம் : 414
திகதி : 2015-11-27
18 20 31 48 R
17,121,300/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015-11-27
வெற்றி வாரம் 1908
வர்ணம் சிவப்பு
இடபம்
வெற்றி இலக்கங்கள்
02 25 40 50
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ.2,428,660

பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 500804129- 9- 19 | - [illegible] | 500810602- 1- 21 | - [illegible] |
| 500804385- 6- 00 | - [illegible] | 500810887- 1- 01 | - அம்பாறை |
| 500804966- 2- 22 | - கண்டி | 500812251- 0- 40 | - [illegible] |
| 500813585- 9- 29 | - [illegible] | 500813427- 9- 39 | - மன்னார் |
| 500821015- 3- 03 | - கொழும்பு | 500814954- 0- 00 | - யாழ்ப்பாணம் |
| 500821128- 4- 44 | - [illegible] | 500820900- 5- 05 | - வவுனியா |
| 500801034- 4- 24 | - மாத்தறை | 500821813- 5- 35 | - நுவரெலியா |
| 500801449- 3- 33 | - [illegible] | | |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நாகராசா (சிற்பாச்சாரியார்)

(ஈஸ்வரன் சிற்பஸ்தாபன ஸ்தாபகர் தவில் கொட்டு தயாரிப்பாளர், சோதிடர், பேரீ வாத்ய விஸ்வ பிரம்மன் கலாபூசணம்-தாவடி)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஆசாரி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகராசா நேற்று (27.11. 2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077114 0234,
021 222 3626.

(66388) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்கு பிரதேச சபை கட்டவுள்ளது ரூ.35 லட்சம் வட்டி

## இழுத்தடித்துக் கொடுத்த கொடுப்பனவுக்காக

பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தைக் கட்டி முடித்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட வேண்டிய இறுதிக் கொடுப்பனவு காலம் தாழ்த்தி வழங்கப்பட்டதை அடுத்து அதற்கு வட்டியாக 35 லட்சம் ரூபாவை வழங்க வேண்டிய நிலை வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது. மத்தியஸ்தரால் வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் பட்டின சபையின் சிறிய கட்டடத்தில் எந்தவித வசதியுமின்றி வலி. தென் மேற்கு பிரதேச சபை இயங்கி வந்தது. இந்தநிலையில் முன்னாள் செயலாளர் திருமதி சிவலிங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக பொதுமக்களின் நிதியுதவியுடன் வாங்கிய சிவன் கோயில் காணியில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் சுமார் 400 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் நவீனமான முறையில் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டது.

குறித்த கட்டடத்தை ஒப்பந்தக்காரரிடமிருந்து முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் பொறுப்பேற்றுக் கொண்டார். சில மாதங்களுக்குப் பின் இந்தக் கட்டடத்தில் ஏற்பட்ட வெடிப்புத் தொடர்பில் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டிய உறுப்பினர்கள் பல காரணங்களை முன் வைத்து கட்டடத்துக்குரிய இறுதிக்கொடுப்பனவை ஒப்பந் தகாரருக்கு வழங்க வேண்டாமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தனர்.

கட்டடத்துக்குரிய பணத்தை அரசு வழங்கியிருந்த நிலையில் ஒப்பந்தகாரர் தனக்குரிய பணத்தை செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் விரைவாக வழங்குமாறு பல தடவைகள் அறிவித்திருந்ததுடன், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்பொழுது செயலாளராகக் கடமையாற்றுபவர் ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டடத்துக்கான இறுதிக் கொடுப்பனவைத் தாமதிக் காமல் வழங்க வேண்டுமென்றும் அதற்குரிய காரணங்களையும் விரிவாக உறுப்பினர்களுக்கு விளக்கியிருந்தார். அதையடுத்து இறுதிக் கொடுப்பனவை வழங்குவதற்கு உறுப்பினர்கள் உடன்பாட்டுக்கு வந்ததுடன், அதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

இறுதிக்கொடுப்பனவைவழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட ஒப்பந்தகாரர் அதற்குரிய வட்டிப் பணத்தை பிரதேச சபையிடமிருந்து அறவிட்டுத் தருமாறு கொழும்பிலுள்ள மத்தியஸ்தர் சபையில் முறையிட்டிருந்தார்.

இது பற்றி விசாரணை செய்த மத்தியஸ்தர் சபையினர் கால தாமதம் செய்யப்பட்ட இறுதிக் கொடுப்பனவுக்குரிய வட்டிப் பணம் 35 லட்சம் ரூபாவை ஒரு மாத காலத்துக்குள் வழங்குமாறு பிரதேச சபைக்கு உத்தரவிட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நிதியின்மை காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில், வட்டிப் பணமாக பெருந் தொகைப் பணம் கட்டுவது குறித்து விசனம் தெரிவித்துள்ள வரியிறுப்பாளர்கள், இந்த நிலைக்குக் காரணமானவர்களிடமிருந்து பணத்தை அறவிட வேண்டுமென்றும் கோரியுள்ளனர். (ற-115)

# உயிர்களைத் துறக்காமலும் போராட்டம் நடத்த முடியும்

## மாணவனின் இறுதி அஞ்சலியில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

மக்களது உரிமைக்காகப் போராட வேண்டியது எமது கடமை. ஆனால் உயிரைத் துறந்துதான் போராட்டம் நடத்த வேண்டும் என்றில்லை. இவ்வாறான உயிரிழப்புக்களைத் தவிர்க்க வேண்டும் – என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

ரயில் ஏறிச் சாவடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான உறவுகளை இழந்துள்ள நிலையில், இவ்வாறான உயிரிழப்புக்களை இனித் தவிர்க்க வேண்டும் என்று அதன் போது அவர் குறிப்பிட்டார்.

இளம் வயதில் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் நிலையில் தனது சமூகத் துக்காக தனது இனத்துக் காக, போரால் சிறையில் வாடுகிறவர்களுக்காக எல்லாவற்றையும் மறந்து தனது உயிரைக் கொடுத்தேனும் அவர்களை விடுவிக்க வேண்டும் என்பது பெருமைப்படக்கூடியது. ஆனால் இத்தகைய சம்பவங்கள் இனி இடம்பெறக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

அதில் அஞ்சலி உரையாற்றிய வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாணவனின் உயிர்துறப்பு பெரிய தொரு கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

மாணவனின் அந்தத் தியாகம் தலை வணங்கி ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையாக இருந்தாலும் இவ்வாறான செயல்கள் இடம் பெறக்கூடாது. செந்தூரனின் உயிர்துறப்பு இறுதி உயிர்துறப்பாக இருக்க வேண்டும். ஆனால் அந்த உயிர் துறப்பின் மூலமாக அவர் மிக உறுதியான செய்தியைக்கூறிச் சென்றுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-4)

# இனிமேலாவது அரசின் மனக் கதவு திறக்கட்டும்

## உயிரிழந்த மாணவனுக்குப் பல அமைப்புகள் அஞ்சலி













யாழ்ப்பாணம், நவ. 28

ரயில் ஏறி சாவடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனுக்குப் பல தரப்பினரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சாவின் பின்னராவது, அரசின் மனக் கதவு திறந்து, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அந்த அனுதாபச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் குறித்த 18 வயது மாணவன் சிந்தித்து வேதனைப்படும் அளவிற்கு இந்த அரசு கல் நெஞ்சம் கொண்டு செயற்படுகின்றது. ஈழ விடுதலைக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கு தலை வணங்கும் இன்றைய தினத்தில் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தனது உயிரைத் தியாகம் செய்த மாணவன் செந்தூரனுக்கும் தலை வணங்குகின்றோம்.

எனவே அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்தி உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். இதன் மூலமே இவ்வாறான தியாகங்கள் இனியும் இடம் பெறாமல் பாதுகாக்க முடியும் - என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ஆளும்தரப்பும், அரசியல் தலைவர்களும் செந்தூரனின் உயிருக்குப் பதில் சொல்லியாக வேண்டும். தொடர் ஏமாற்றங்களும், விரக்திகளும் வஞ்சிப்புகளும் எஞ்சியிருக்கும் எமது இளைய தலைமுறையை மீண்டும் வன்முறைப் பாதையை நோக்கி உந்துகிறது என்பதைச் சகல தரப்புகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

செந்தூரன் எடுத்த முடிவு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்த போதும், அந்தத் தியாக சீலனுடைய இலட்சியம் நிறைவேற நாங்கள் ஒன்றிணைந்து போராடுவதே அவனுக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலியாக அமையும். அவனது குடும்பத்தாரின் ஆற்றொணாத்துயரில் நாமும் பங்கு கொள்கிறோம் – என்று தெரிவித்துள்ளார்.

ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இவ்வாறான செயல்களில் எந்த தன்மானத் தமிழனும் தங்கள் விலை மதிப்பற்ற உயிரை மாய்த்து விடவேண்டாம். உங்கள் உணர்வுகளை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவாறு அகிம்சை வழியில் மேற்கொள்ளுங்கள்.

இந்தச் சாவானது சிங்கள அரசுக்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியை நிச்சயம் கொண்டு சென்றுள்ளது. புதிய தலைமுறை இளைஞர்களின் எண்ணங்களில் இலட்சிய நெருப்பு நீறு பூத்த நெருப்பாக எரிந்து கொண்டுள்ளது என்பதுவும், தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை சர்வதேசமோ சிங்கள அரசாங்கமோ சரியாக கையாளாமல் போனால் அதன் பாதிப்பு மிக மோசமான எதிர்வினையை ஏற்படுத்தும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும் – என்று தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி செந்தூரன் உயிர்நீத்த செய்தி எம்மை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது என இந்து சமயப் பேரவையினர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கைதிகள் விடயத்தில் தீர்க்கமான முடிவை அரசு மேற்கொள்ளாத காரணத்தினாலேயே இத்தகைய உயிரிழப்பு ஏற்பட்டது என்பதை எவராலும் மறுக்கமுடியாது என்றும் அதில் சுட்டிக் காட்டியுள்ளனர். அனைவரும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரை மாலை 6 மணி முதல் 7 மணி வரை ஆலயங்களில் அல்லது தத்தமது வீடுகளில் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5-56-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் 27 உதயனின் குருதிக் கொடை









நவம்பர் 27 ஆம் திகதி உதயன் பத்திரிகையாளர்களும் ஊழியர்களும் குருதிக் கொடை வழங்கினர். நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினரர்களான ஆனோல்ட், வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளரர் சுகிர்தன் ஆகியோர் குருதிக் கொடை வழங்குவதையும் மாகாண சபை உறுப்பினரர்களான ப.கஜதீபன், அஸ்வின் ஆகியோரும் குருதிக் கொடை வழங்கினர். நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமாகிய ஈ.சரவணபவனுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

(20,21)

## சாவடைந்த மாணவனுக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, நவ 28

ரயில் முன் பாய்ந்து சவடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனின் தியாகத்தைக் கௌரவிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போது அவர், மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யுமாறு கோரி உருக்கமான கடிதமொன்றை எழுதிவைத்துவிட்டு யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் ரயில் முன் பாய்ந்து சாவடைந்தார். அந்த மாணவனுக்கு இந்த உயரிய சபையில் எனது அஞ்சலியையும், கௌரவத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதேவேளை, அந்த மாணவனின் உயிர்த்தியாகத்துக்கு மதிப்பளித்தாவது அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றேன். இதுபோன்ற உயிர்த்தியாகங்கள் இனியும் நடைபெறாதிருக்க அரசு விரைந்து செயற்படவேண்டும்– என்றார்.

(த–சி)

## மாணவன் சாவினால் மாறிவிடாதாம் அரசு

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் சந்திம வீரக்கொடி

கொழும்பு, நவ 28

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கொக்குவில் மாணவன் தற்கொலை செய்து கொண்டமைக்காக அரசு பலவீனமான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று பெற்றோலிய மற்றும் கனிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அதேவேளை, இம்மாணவ னின் செயல் மிகவும் வருத்தமாக உள்ளதாகவும் அவரது குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

தமிழ் அரசியல் கைதிகளை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கொக்குவில் மாணவன் ஒருவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டமை மிகவும் வருத்தமான செயலாகும். எனினும், ஒருவர் தற்கொலை செய்து கொண்டார் என்பதற்காக அரசு தமது நிலைப்பாட்டை மாற்றி பலவீனமான தீர்மானங்களை



எடுக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

நாங்கள் தேசிய அரசில் இணைந்து அமைச்சுகளைப் பெற்றுள்ளமைக்காக எமது கொள்கைகளை மாற்றிக்கொள்ள முடியாது – என்றார்.

(த–சி)

## 'கோப்' தலைவரானார் ஹந்துன்நெத்தி எம்.பி.

கொழும்பு, நவ 28

அரச பொறுப்பு முயற்சிகள் குழுவின் (கோப்) தலைவராக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும், அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர் வசந்த அழகிய வன்னவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டத்தின்போதே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான அரச பொறுப்பு முயற்சிகள் குழுவில் (கோப்) அநுர பிரியதர்சன யாப்பா, தயாசிறி ஜயசேகர, வசந்த அலுவிகார, ஹர்ச டிசில்வா, அஜித் பி.பெரேரா, ரஞ்சன் ராமநாயக்க, அசோக அபேசிங்க, சந்திரசிறி கஜதீர, பிமல் ரத்நாயக்க, எம்.ஏ. சுமந்திரன், ஞானமுத்து ஸ்ரீநேசன் ஆகியோரும்,

பிரதி அமைச்சர் லசந்த அழகிய வன்ன தலைமையிலான அரச கணக்குகள் பற்றிய குழுவில், மகிந்த சமரசிங்க, பீ.ஹரிசன், பாலித ரங்கே பண்டார, நிரோன் பெரேரா, சுஜீவ சேனசிங்க, இரான் விக்கிரமரட்ண, விஜித ஹேரத், வாசுதேவ நாணயக்கார, நளிந்த [illegible] திஸ்ஸ, வியாழேந்திரன், சிறிதரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(த)

## சீரோ பட்ஜெட் 2016 முதல் வருகின்றது நடைமுறைக்கு

### அமைச்சர் ரவி தெரிவிப்பு

கொழும்பு, நவ 28

அரச சொத்துகளையும், அரச நிதிகளையும் கட்டுப்படுத்தி, கணக்கெடுத்து முகாமைத்துவம் செய்யும் சீரோ பட்ஜெட் 2016ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சீரோ பட்ஜெட் தொடர்பான [illegible] மேலும் தெரிவிக்கை யில்,

சீரோ பட்ஜெட் ஒன்றை புதிய நிதிக் கட்டுப்பாட்டு, அரச சொத்துகள் கணக்கெடுப்பு முறை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையானது சர்வதேச நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு செயற்பாடாகும். இதனை எமது நாட்டில் அறிமுகப் படுத்தவுள்ளோம். இது 2016ஆம் ஆண்டுமுதல் 2019 ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

அரச சொத்துகளை முகாமைத்துவப்படுத்தல் மற்றும் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதிகளின் பெறுமானத்தை அளவீடு செய்தல் என்பன முதலாவது விடயம். இரண்டாவதாக, ஏதேனும் ஒரு விடயத்துக்கு இரண்டு தடவைகள் நிதி ஒதுக்கீடு செய்வதைத் தடுத்தலும், மூன்றாவதாக, நிதி, சொத்து ஆகியவற்றின் வீண் விரயங்களை இல்லாது செய்தலும், நான்காவதாக, பொருளாதார விருத்தி சாராத செலவினங்களை இல்லாது ஒழித்தலும், ஐந்தாவதாக, நிதியைக் கட்டுப்படுத்துதல் என்ற ரீதியிலும் இந்த பட்ஜட் முன்னெடுக்கப்படும்–என்றார்.

(த–சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவன் சாவு தொடர்பில் விசேட விசாரணை ஆரம்பம்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

யாழ்.கோண்டாவிலில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட பாடசாலை மாணவனின் விவகாரம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ்அத்தியட்சர்ருவண் குணசேகர தெரிவித்துள்ளார்.

18 வயதான ராஜேஸ்வரன் செந்தூரன் என்ற மாணவன் ரயில் முன் பாய்ந்து சாவடைந்துள்ள நிலையில் அவரது சடலத்துடன் காணப்பட்ட கடிதம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அப்பியாசக் கொப்பியில் இருந்த அந்தக் கடிதமானது உண்மையில் சாவடைந்த மாணவனினாலேயே எழுதப்பட்டதா? அல்லது சம்பவத்தின் பின்னர் எவரேனும் அதனை அங்கு கொண்டுவந்து போட்டனரா என்பது குறித்து விசேடமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த)

# பற்றைக்குள் இளைஞன் மயங்கிய நிலையில் மீட்பு

சாவகச்சேரி நவ.28

கொழும்புக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற கோவிலாக்கண்டியைச் சேர்ந்த இளைஞர் மூன்று தினங்களின் பின்னர் நேற்று முன்தினம் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள பற்றைக்குள் இருந்து மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பணிபுரியும் இந்த இளைஞர் கடந்த வாரம் மன்னார்ப் பகுதியில் மர்மமான முறையில் சாவடைந்த உறவினரின் சாவுச் சடங்குக்குச் சென்றுவிட்டு நாவற்குழி தெற்கில் உள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார். பின்னர் அங்கிருந்து கொழும்பு செல்லக் கடந்த 24ஆம் திகதி மாலை புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், சாவகச்சேரி-தனங்களப்பு வீதியில் உள்ள பற்றைப் பகுதியில் மயங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் காணப்படுவதாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நகரப் பகுதியில் நின்றவர்கள் ஓடிச் சென்ற மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இவரிடமிருந்த தொலைபேசி இலக்கங்களுக்குத் தகவல் அனுப்பியதையடுத்து உறவினர் வந்து நாவற்குழி தெற்கு, கோவிலாக் கண்டியைச் சேர்ந்த ஜெயக்குமார் கோகுலன் (வயது26 ) என்பவரே இவ்வாறு மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார். (த-9)

# யாழ். நகரில் திருடப்பட்ட சைக்கிள்கள் நாவற்குழியில்

## சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டனர்

சாவகச்சேரி நவ. 28

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் திருடி நாவற்குழிப் பகுதியில் விற்பனை செய்யப்பட்ட சைக்கிள்களைச் சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

இவற்றைத் தொலைத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றக்கொள்ளுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த 19, 20 ஆகிய திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக விடப்பட்டிருந்த இரு சைக்கிள்களை ஒருவர் திருடிச் சென்று நாவற்குழிப் பகுதியில் விற்பனை செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவற்குழிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான ம்றையில் நடமாடிய ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது இரு சைக்கிள்களைத் திருடியதை ஒப்புக் கொண்டார். இதனையடுத்துச் சைக்கிள் விற்பனை செய்த இடங்களையும் அவர் காண்பித்துள்ளார். அவற்றைப் பொலிஸார் மீட்டுப் பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த நபரைக் கடந்த திங்கட்கிழமை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது டிசெம்பர் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவரால் திருடப்பட்ட சைக்கிள்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும், தொலைத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# எந்தப் பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வாகாது

## பாடசாலை மாணவர்களுக்கு இதனை அறிவுறுத்தவேண்டும் என்கிறார் நீதிபதி

> உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காது அதேயளவு அறிவுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த மாணவன் தற்கொலை செய்யாதிருந்தால் எதிர் காலத்தில் இந்த நாட்டுக்கும் - சமூகத்துக்கும் எந்தளவு உதவியாக இருந்திருப்பான்.



யாழ்ப்பாணம், நவ. 28

தற்கொலை எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ள சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பாடசாலை மாணவர்கள் ஊர்வலங்கள் - ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துமாறும் சாவகச்சேரி உதவி வலயக் கல்விப் பணிப்பாளருக்குப் பணித்துள்ளார்.

சாவகச்சேரிநீதிமன்றில்நேற்றைய தினம், கொடிகாமம் பொலிஸார் வழக்கு ஒன்றுக்கு மன்றில் முன்னிலையாகவில்லை. கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனின் தற்கொலையடுத்து, யாழ். நகரில் ரயர் கொளுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளதாக, தகவல் கிடைத்துள்ளதாகவும் அதனால் மேலதிக பொலிஸார் யாழ். நகரில் பாதுகாப்புக் கடமைக்குத் தேவை என்பதால், கொடிகாமம் பொலிஸார் அங்கு சென்றுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளும் பொதுநலன் கருதி, மாணவனின் தற்கொலை தொடர்பில் கவலையுற்றிருப்பதாகத் தெரிவித்தனர். ஊடகங்களில் இவ்வாறான தற்கொலை நிகழ்வுகளை அவர்களது வீரதீரச் செயல் என விவரணப்படுத்தி மாணவர்களை இந்த நிலைமைக்குத் தூண்டுவதை தவிர்க்கவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த மாவட்ட நீதிபதி, பிள்ளைகள் அனைவருக்கும் மேலான பாதுகாவலன் மாவட்ட நீதிபதி. தற்கொலை செய்து சாவடைந்த மாணவனையும் என்னுடைய ஒரு பிள்ளையாகவே கருதுகின்றேன். அந்த பிள்ளையின் உணர்ச்சிவசமே இந்தத் தற்கொலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது. குறித்த மாணவன் உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளான்.

உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காது அதேயளவு அறிவுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிறர் நலனில் அக்கறை கொண்ட இந்த மாணவன் தற்கொலை செய்யாதிருந்தால் எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கும் - சமூகத்துக்கும் எந்தளவு உதவியாக இருந்திருப்பான். பாடசாலை மாணவர்கள் அநாவசியமான முறையில் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டு அசௌகரியங்கள் ஏதாவது ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால்தான் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்றைய தினம் (நேற்று) விடுமுறை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரைமாய்த்துக்கொண்டால், தற்போது சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகள் வெளியில் வருகின்றபோது அந்த உறவுகளை நினைத்து அவர்கள் மேலும் வேதனை அடைவார்கள். தற்கொலை தான் முடிவாக இருக்குமாக இருந்தால், சகல அரசியல்வாதிகளும் தற் கொலை செய்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் தமது செயற்பாட்டில் உணர்ச்சிக்கும் - அறிவுக்கும் சமத்துவமான முறையில் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

தற்கொலை எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது என்பதை உங்களுடைய பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறவேண்டும். மாணவர்கள் கல்வி கற்பதையே வலியுறுத்திக் கூறவேண்டும். ரயில் முன் பாய்ந்து சாவதற்காகவா அவனை அவனது பெற்றோர் வளர்த்தார்கள். இதனால் பெற்றோருக்குத் தாங்க முடியாத கவலை ஏற்படும் என்பதை மாணவன் உணர்ந்திருக்கமாட்டான். அவன் உயிரோடு இருந்தால் நாட்டு மக்களுக்குச் சேவையாற்றியிருக்க முடியும். அவரின் சாவால் தன்ன லமற்ற சேவை உள்ளம்படைத்த ஒருவரின் சேவையை இந்த மக் கள் இழந்துவிட்டார்கள் என்று தெரிவித்தார்.

மேலும் வழக்கு முடிவடைந்த பின்னர், சாவகச்சேரி உதவி வலயக் கல்விப் பணிப்பாளரை நீதி மன்றுக்கு அழைத்த நீதிபதி, சகல பாடசாலை அதிபர்களுக்கும், அதிபர்கள் ஊடாகப் பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் இவ்வாறான தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் வகையில் அறிவுரை வழங்கப்படவேண்டும் என்றும், பாடசாலை மாணவர்கள் ஊர்வலங்கள் - ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், இதுபற்றி விழிப்பூட்டுமாறும் தெரிவித்தார். (த-5-9)

# வடமாகாண சபையின் விசேட அமர்வு இன்று

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக, அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதிக் கூற்றை, வடக்கு மாகாண நிதி அமைச்சரும், முதலமைச்சருமாகிய க.வி.விக்னேஸ்வரன் இன்று சபையில் சமர்ப்பிப்பார். இதற்காகவே இன்றைய விசேட அமர்வு கூடவுள்ளதாக அவைத் தலைவர் தெரிவித்தார். இந்த அமர்வில் பங்கெடுக்குமாறு சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில், மாகாண சபை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# முதியோர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடமாகாண அமைப்பின் முதியோர் மாதாந்த ஒன்று கூடல் இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் க. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வின் வரவேற்புரையை பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் வி.சக்திவேல் நிகழ்த்துவார். மருத்துவர் புவனேஸ்வரி ஜீவானந்தன் பயனுள்ள முதுமை எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார்.

முதுமையை வெல்வோம் எனும் தலைப்பில் நீரிழிவு சம்பந்தமான குறிப்புகள் அடங்கிய சஞ்சிகை வெளியீடும் நடைபெறும்.

சிறப்பு நிகழ்வாக கலாபூசணம் திரு சக்தி தியாகராஜாவின் ஓரங்க நாடகமும் நடைபெறும். (கு-122)

# 2ஆவது பெரிய தொழில்நுட்பக் கல்லூரி கிளிநொச்சியில் விரைவில் திறக்கப்படும்

கிளிநொச்சி, நவ. 28

ஜேர்மன் நாட்டு நிதி உதவியில் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இலங்கையின் இரண்டாவது பெரிய தொழில்நுட்பக் கல்லூரி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான வர்த்தக அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகர் டாரினி டலுவற்றா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஊடகவியலாளர்களுக்கு ஜேர்மன் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிகழ்ச்சித் திட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தெற்கில் உள்ள மாணவர்கள் பயன் பெறக்கூடியதாக உள்ள கொழும்பு ஜேர்மன் - மொறட்டுவ தொழில் நுட்பக் கல்லூரியைப் போன்று வடக்கு - கிழக்கில் உள்ள மாணவர்களின் தொழில்நுட்பத்தை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் கிளிநொச்சி அறிவியல் நகரில் 8 மில்லியன் யூரோ செலவில் இந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 500 மாணவர்கள் தங்கி நின்று கற்கக் கூடிய வகையில் விடுதி வசதிகளைக் கொண்டதாகவும் இந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படுகின்றது.

இலங்கையில் தொழில் நுட்பம் சார் திறன்களையும், வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே மாணவர்களுக்கு இத்தகைய கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரி 2016 ஏப்ரல் மாதமளவில் திறந்து வைக்கப்பட உள்ளது -என்றார். (த-21-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிக்கு அனுமதி மறுப்பது பயங்கரவாதத்துக்கே வித்திடும்

## சுட்டிக்காட்டுகின்றார் விக்கிரமபாகு கருணாரட்ண

கொழும்பு, நவ.28
உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அரசு அனுமதிக்காவிட்டால் அது பயங்கரவாதத்துக்கு வித்திடும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்தப்படுவதை அரசு தடை செய்யக்கூடாது. ஜே.வி.பி.யின் தலைவரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்படுவது போன்று பிரபாகரனுக்கும் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

**“ சிங்கள மக்கள் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த முடியுமாயின் ஏன் தமிழ் மக்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகின்றது.? உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதனால், அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுவது என்று அர்த்தமாகாது. ”**

நாட்டின் அனைத்து மக்களுக்கும் சட்டம் ஒரே விதமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அவசியமானதென்பதுடன், எந்தவொரு இன சமூகமும் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படக் கூடாது.

சிங்கள மக்கள் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த முடியுமாயின், ஏன் தமிழ் மக்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகின்றது.? உயிரிழந்தர்களுக்கு அஞ்சலி செலுத்துவதனால், அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுவது என்று அர்த்தமாகாது.

இவ்வாறான ஒரு நிலையில், உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்காமை அவர்களைப் பயங்கரவாதம் நோக்கியே நகர்த்தும். - என்றார். (ற)



# அரசை ஆட்டம் காணச் செய்ய ராஜபக்சமாரால் முடியாது

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.28
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச கூட்டத்தினரால் இந்த அரசை அசைக்க முடியாது என்று கூறியுள்ளார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன.

எனினும் தான் உள்ளிட்ட சிலர் அவர்களுடன் இருந்திருந்தால் அரசை ஆட்டம் காணச் செய்திருக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசை ஆட்டம் காணச் செய்ய தம்மால் முடியாமால் போனதால் ராஜபக்சமார் தங்களது அடியாள்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதுமாத்திரமன்றி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அதிகளவு கெடுதல் செய்துள்ளார் என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவன்ட் கார்ட்டைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஐ.தே.க.வுடன் மோதாது சுதந்திரக் கட்சி!

கொழும்பு, நவ.28
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதில்லை என்று சுதந்திரக் கட்சி உத்தரவாதமளித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர்களான சந்திம வீரக்கொடி மற்றும் விஜித முனி சொய்சா ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கவும் தனித்தனியாகப் போட்டியிடவுள்ளன.



எனினும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மோதலில் ஈடுபடப் போவதில்லை என்று சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதனை மீறித் தனிப்பட்ட ரீதியில் வேட்பாளர்கள் எவரும் மோதல் போக்கில் ஈடுபட்டால் அதற்குக் கட்சி பொறுப்பாக மாட்டாது.

அதுகுறித்து பொலிஸாரும், நீதிமன்றமும் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அமைச்சர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.(ற)

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கிடைக்காமல் போகலாம்

## எச்சரிக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, நவ.28
இலங்கை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை உடனடியாகக் கிடைக்காமல் போகலாம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை தூதுவர் டேவிட் டெலி எச்சரித்துள்ளார்.



இலங்கை அரசால் அண்மைக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமை மீறல்களே இதற்கான காரணம் என சுட்டிக்காட்டிய அவர், மனித உரிமைகள் விடயத்தில் தனியார் வர்த்தகத்துறையினர் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஆடை உற்பத்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் வதை முகாம் பற்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறான குற்றச்சாட்டை மறுத்திருந்தார். ஆனால் திருகோணமலையில் இலங்கைக் கடற்படையினரின் இரகசிய வதை முகாம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், மாணவர்கள் மீது பொலிஸார் அண்மையில் நடத்திய தாக்குதல் பற்றியும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் என்பது ஏற்றுமதிப் பொருள்களைப் பற்றியது என இலங்கை அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை, ஜி.எஸ்.பி. பிளஸ் சித்திரவதை, ஊடக சுதந்திரம், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் ஏனைய சூழல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டது என்றும் டெலி குறிப்பிட்டுள்ளார். (ற)

# கல்விக்கான நிதி ஒதுக்கீடு நடைமுறை சாத்தியமற்றது

## அனுரகுமார கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீடு நடைமுறைச்சாத்தியமற்றது என்று அனுரகுமார திசாநாயக்க விமர்சனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் நடைபெற்ற வரவுசெலவுத்திட்டம்மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 5.41 வீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது நடைமுறைச் சாத்தியமற்றது. எனினும் கல்விக்காக முன்னுரிமை கொடுக்கப்படுவது அத்தியாவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பந்துல குணவர்த்தன, இவ்வாறானதொரு பெரும் தொகையைக் கல்விக்காக ஒதுக்கினால் எந்தவொரு அரசாலும் அதனை நடைமுறைப் படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் ஏனைய அபிவிருத்தித்திட்டங்களும் பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மைத்திரி காலத்தில் நல்ல திட்டங்கள் முன்னெடுப்பு

## பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
பொதுநலவாய அமைப்பின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்ட காலப்பகுதியில் பல நல்ல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றபோதே, கமலேஷ் சர்மா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டைத் தொடர்ந்து அதன் தலைவர் பதவி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குக் கிடைத்தது. ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து அந்தத் தலைமைப் பதவி ஜனாதிபதி மைத்திரிக்குக் கிடைத்தது.**



குறித்த மாநாட்டில் பங்கேற்பதற்குச் சென்ற பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா, இலங்கை ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது பொதுநலவாய அமைப்பின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டைத் தொடர்ந்து அதன் தலைவர் பதவி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குக் கிடைத்திருந்தது. ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து அந்தத் தலைமைப் பதவி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்தது. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கையை தூக்குவதன் மூலம் பதவியை தக்க வையுங்கள்

## ஜோன் அமரதுங்க அறிவுரை

கொழும்பு, நவ.28
அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினர் பத விகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் ஜோன் அமரதுங்க.
நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக 15 மில்லியன் ரூபாவை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது குறித்து சிந்தித்தாவது வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக கை உயர்த்துங்கள்.
வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டாம். கையை உயர்த்துங்கள். அப்படி உயர்த்தினால் தான் உறுப்பினர் பதவியையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லையென்றால் அதுவும் இல்லாமல் போய்விடும். - என்றார். (ற)

## பேருவளையில் மீனவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.28
சிறு மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் நேற்றுக் காலை பேருவளை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சில மீனவர்கள் பெருமளவில் மீன்பிடியில் ஈடுபடுவதால் மீன் இனங்கள் அழிகின்றன என்றும் அத னால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக, தண்டனைகளை அரசு வழங்க வேண்டும் என்பதோடு தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் இந்தச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## கூட்டு எதிர்க்கட்சி எம்.பிக்கள் பத்துப் பேரின் ஆதரவு உண்டு

### லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கூட்டு எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முறை வரவு செலவுத்திட்டத்தை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றனர் என்று சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
அத்துடன் தற்போதைய அரசுடன் இணைந்து கொள்ளுமாறும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
அரச பொதுக் கணக்கு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவை பரிந்துரைத்த போதிலும் அவர் அதனை நிராகரித்து விட்டார் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஒளிப் படச் செய்தி



## கவனிக்கப்படாதிருக்கும் தச்சன்தோப்பு வீதி




கண்டி வீதியையும் கேரதீவு ஏ 32 வீதியையும் இணைக்கும் தச்சன் தோப்பு வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாது உள்ளது. அந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இது தொடர்பில் பல அதிகாரிகளைத் தொடர்பு கொண்டபோதும் யாரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தார் தச்சன்தோப்பு சிறீ முருகன் சனசமூக நிலையத்தின் தலைவர் இதயகுமார்.



சேதமடைந்திருந்த வீதி கடந்த வாரம் பெய்தகனமழை காரணமாக இரண்டாகப் பிளவடைந்துள்ளது. மக்கள் முற்றாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கடந்த நவம்பர்மாதம் 07 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்.



அதிகாரிகள் விரைவில் வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இந்த வீதியூடாக பயணம் செய்யும் மாணவர்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் வெள்ளைச் சீருடையுடன் செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
வீதியூடாக வாகனங்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் பயணிக்கும் வாகனங்கள் சேற்றில் சிக்கிக் கொள்கின்றன என்றும் மக்கள் கூறுகின்றனர். (ற-ரி2)

# தமிழக மீனவர் தொடர் கைதால் தமிழ் சமூகம் மத்தியில் அச்சம்

## மோடிக்கு எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா சுட்டிக்காட்டு

சென்னை, நவ.28
இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவது தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளதுடன், பெரும் உணர்வலைகளையும் ஏற்படுத்துகின் றது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் தமிழக மீனவர்கள் 15 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஜெயலலிதா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
இந்த 15 மீனவர்களும் தமது பாரம்பரிய கடற்பிரதேசத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஜெயலலிதா தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைக்கு கச்சதீவைத் தாரை வார்த்தமையாலேயே இவ்வாறான கைதுகள் இடம்பெறுகின்றன என்றும் தற்போதைய நிலையில், 29 மீனவர்கள், 53 படகுகளுடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் ஊடாக மீனவர் விடயத்தில் தலையிட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா மோடியிடம் கோரியுள்ளார். (ற)

# ஐ.நா. குழுவை முகாமுக்குள் அனுமதித்தது தவறு

## மகிந்த ராஜபக்ச எம்.பி. சாடுகின்றார்

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஐ.நா. செயற்குழுவின் பிரதிநிதிகளை கடற் படை முகாமுக்குள் அனுமதித்தது தவறு என்று முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் மாலை அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராமை விகாரைக்குச்சென்ற அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
பொதுவாக இலங்கையில் மட்டுமன்றி எந்தவொரு நாட்டிலும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு ராணுவ முகாம்களுக்குள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்படுவதில்லை எனக் குறிப் பிட்டார்.
அவ்வாறான நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் போனோர் தொடர்பான செயற்குழு உறுப்பினர்களுக்குத்திருகோணமலை கடற்படை முகாமுக்குள் நுழைய



அனுமதித்தது தவறு என்றும் சுட்டிக் காட்டினார். அதுமாத்திரமன்றி அவர்கள் அங்கு விசாரணைகளை மேற்கொள்ள இடமளித்தது அதனைவிடவும் கடுமையான குற்றமாகும் என்றும் கூறினார்.
நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் இவ்வாறான ஒரு விடயத்தை மேற்கொள்வதாயின் குறைந்தபட்சம் நாடாளுமன்றத்திலாவது அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ச இதன்போது குறிப்பிட்டார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் ஹெலிகொப்டர் விபத்து

## 15 பேர் உயிரிழப்பு



சைபிரியா,நவ.28
ரஷ்யாவைச்சேர்ந்தஹெலிகொப்டர்ஒன்றுசைபீரியாவில் நேற்று விழுந்து நொறுங்கியதில் 15 பொதுமக்கள் உயிரிழந்தனர். இது தொடர்பில் உள்நாட்டுப் போக்குவரத்து அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில், 22 பயணிகள் மற்றும் 4 ஊழியர்களுடன் சென்ற எம்.ஐ. 8 ஹெலிகொப்டர் மேற்கு சைபீரியாவின் ஐகர்கா நகரம் அருகே விழுந்து விபத்துக்குள்ளானது. அதில் 15 பேர் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த இடம் தலைநகர் மொஸ்கோவில் இருந்து 2ஆயிரத்து800 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் ஹெலிகொப்டர் பறக்கத் தொடங்கிய 15 நிமிடத்திலேயே கட்டுப்பாட்டை இழந்துவிட்டதாகவும், இதனால்ஹெலிகொப்டரை அவசரமாக தரையிறக்க முயன்றபோது விபத்து நடந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களில் மட்டும் ஒரு பயணிகள் விமானம் (224 பேர் சாவு), ஒரு போர் விமானம், தற்போது ஹெலிகொப்டர் விபத்து என அடுத்தடுத்து நடந்த மூன்று சம்பவங்களால் ரஷ்ய மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். (ஐ-ரி4)

# ஈரான் மக்களை ஏமாற்றுகிறது அமெரிக்கா?

தெஹ்ரான்,நவ.28
மேற்கத்திய கலாசாரம் மூலம் ஈரானைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா முயற்சி செய்துவருவதாக ஈரான் மதத்தலைவர் அயத்துல்லா அலி காமேனி குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஈரானில் நாட்டில் அதிகாரத்தில் உயர் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களைத் தங்கள் பக்கம் இழுப்பதன் மூலம் ஈரான் நாட்டு மக்களைத் தங்கள் கட்டுக்குள் கொண்டு வரமுடியும் என அமெரிக்கா முயற்சி செய்கிறது.

மேலும், தங்களுடையபணபலத்தாலும், பாலியல் கவர்ச்சிகளாலும், மேற்கத்திய கலாசாரத்தாலும் மக்களின் மனதை மாற்றி அவர்களை ஏமாற்றுகின்றனர்.

மக்கள் மத்தியில் மதநம்பிக்கைகளை மாற்றி, அவர்களைத் தங்கள் நாட்டின் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள், இது ஈரான் நாட்டுக்கு மிகவும் ஆபத்தான ஒன்றா கும் எனக்கூறியுள்ளார்.

ஈரானில் கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் தொடர்ந்து கைதாகி வருகின்றனர். இந்தச் சம்பவத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் இவர்கள் செயற்படுவதாகக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)




மெக்ஸிக்கோவின் தென் மேற்கு
நூற்றுக்கணக்கான மக்கள் மெக்
மற்றும் போஸ்டர்களைக் கைகள
ஸிக்கோவில் 25 ஆயிரத்து 700



## சுவிட்சர்லாந்தில் பெண்கள் பர்தா அணியத் தடை

சூரிஜ்,நவ.28,
முஸ்லிம் நாடுகளில் பெண்கள் முகத்தை மூடும் வகையில் 'பர்தா' உடை அணிகின்றனர். இதற்கு சுவிட்சர்லாந்தில் 'டிசினோ' மாகாணத்தில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில், மூன்றில் 2 மடங்கினர் பர்தா அணியத் தடை விதிக்க வலியுறுத்தி இருந்தனர். அதைத் தொடர்ந்து தற்போது தன்னாட்சி அதிகாரம் பெற்ற டிசினோ நாடளுமன்றத்தில் அதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. எனவே, டிசினோ பகுதியில் பொது இடங்களில் பெண்கள் முகத்தை மறைக்கும் வகையில் 'பர்தா' உடை அணியத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடைகள், உணவு விடுதிகள், பொதுமக்கள் கூடும் பகுதிகள், கார் ஓட்டும் போதும் பர்தா அணியக்கூடாது. இந்த உத்தரவு சுற்றுலாப் பயணிகளுக்கும் பொருந்தும். அதே நேரத்தில் முகமூடிகள், கம்பளிக் குல்லாக்கள் மற்றும் ஹெல்மெட்டுகள் அணிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(ஐ-ரி4)


# பிரான்ஸை தகர்

## ஐ.எஸ். மிரட்டல்

பாரிஸ்,நவ.28
பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தைத் தகர்த்து வீழ்த்துவது போல் வீடியோ வெளியிட்டு அந்த நாட்டில் மீண்டும் கொடூரமான தாக்குதல் நடத்தவுள்ளதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளியேறி ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கத்தில் இணைந்த தீவிரவாதிகள் இந்த வீடியோவை வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. வீடியோவில் தோன்றும் தீவிரவாதி ஒருவர் பிரான்ஸ் ஜனாதிபதியான பிராங்கோயிஸ் ஹாலண்டோவுக்கு மிரட்டல் விடுத்துள்ளார். அதில், பிராங்கோயிஸ், "எங்கள் மீது நீங்கள் போரைத் தொடங்கியுள்ளீர்கள். இந்தப் போரில் வெற்றி பெறப் போவதாக உங்கள் நாட்டு மக்களுக்கு உறுதி அளித்துள்ளீர்கள். ஆனால், உண்மையில் இந்தப் போரில் நாங்கள்தான் வெற்றி பெறுவோம். விரைவில் பிரான்ஸ் நாட்டுக்கு வருவோம். பரிஸில் தாக்குதல் நடத்தியது போல் கொடூரமான தாக்குதலை நடத்தி உங்கள் நாட்டையே தகர்ப்போம். இந்தப் போரின் முடிவில் எங்களுக்குத் தான் வெற்றி கிடைக்கும் என்பது தான் எங்களுடைய கடவுளின் விருப்பம்" என மிரட்டியுள்ளார். இந்த வீடியோ வெளியிடுவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னதாக, பரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தைக் குண்டு வைத்து

> இந்தப் போரில் நாங்கள் தான் வெற்றி பெறுவோம். விரைவில் பிரான்ஸ் நாட்டுக்கு வருவோம். பரிஸில் தாக்குதல் நடத்தியது போல் கொடூரமான தாக்குதலை நடத்தி உங்கள் நாட்டையே தகர்ப்போம்.

வீழ்த்துவது போன்ற ஒரு வீடியோவை வெளியிட்டனர். ஆனால், கடந்த 2009 ஆம் ஆண்டு வெளியான ஆங்கிலப்படத்தில் வெளி யான அந்தக் காட்சியைத் திருடி, அதுபோன்ற ஒரு தாக்குதலை நடத்துவோம் என மிரட்டியுள்ளனர். அமெ




# ஐரோப்பாவில் இனி அகதி

பாரிஸ்,நவ.28
ஐரோப்பிய நாடுகளில் குடியேற இனி அகதிகளுக்கு இடமில்லை எனப் பிரான்ஸ் நாட்டு பிரதமரான மேனுவல் வா[illegible] ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியில் பிரபல பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த பிரான்ஸ் பிரதமர், இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'அகதிகளுக்கு புகலிடம் கொடுப்பது தொடர்பாக ஏற்கனவே ஐரோப்பிய நாடுகள் பல பிரச்சினைகளைச் சந்தித்து வரு கின்றன. அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பதன் மூலம் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் அதிக அளவிலான பிரச்சினைகளை ஐரோப்பிய நாடுகள் சந்தித்து வருகின்றன. இனிமேலும் இதனை அனுமதிக்
ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை
தினால்மட்டுமே அவற்றின் தலை வி
னிக்கும்' எனப்பிரதமர் கருத்துத் தெரி
ஜேர்மனி சான்சிலரான ஏஞ்சிலா
பிரான்ஸ் ஜனாதிபதியைச் சந்தி
மணி நேரங்களுக்கு முன்னர் பிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென் மேற்கு மாநிலமான குய்ரெரோவில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் காணாமல் போன 43 மாணவர்களுக்கு நீதி கோரி, மக்கள் மெக் ஸிக்கோ நகரில் ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்றுள்ளனர். காணாமல் போன மாணவர்களது புகைப்படங்களைக் கைகளில் ஏந்தியவாறு மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர். கடந்த சில ஆண்டுகளில் மெக் ...யிரத்து 700க்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது.


# கட்டாரில் கனமழை

டோகா, நவ.28

கட்டாரில் ஓர் ஆண்டு முழுதும் பெய்யும் மழை ஒரு சில மணி நேரங்களில் கொட்டித் தீர்த்ததை அடுத்து நாடே ஏறக்குறைய ஸ்தம்பித நிலைக்கு வந்தது. கடந்த ஆண்டு தான் திறக்கப்பட்ட ஹமாத் சர்வதேச விமான நிலையத்தின் கூரையினூடாக தண்ணீர் அருவி போல வழிந்தது. விமான நிலையக் கட்டுமானத்தின் தரம் குறித்து பிரதமர் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த விமான நிலையம், 2022 உலகக்கோப்பை உதைபந்துப் போட்டிகள் நடத்தப்படுவதற்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்ட கட்டட வேலைகளில் ஒன்றாகும். அண்டை நாடான சவுதி அரேபியாவிலும் பெய்த மழையில், வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. தலைநகர் ரியாத்தில் கார்கள் மழை நீரில் மூழ்கின. கிழக்குப் பகுதி நகரான அல் ருமய்லாவில், மழை நீர் சாலையில் ஒன்பது மீற்றர் அகலமுள்ள ஒரு படுகுழியை உருவாக்கி, ஒரு காரையே விழுங்கி விட்டது. காரில் பயணித்த இருவர் நீந்தி உயிர் தப்பியுள்ளனர். (ஐ-ரி



# துருக்கிய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் மீது உக்கிரத் தாக்குதலை ஆரம்பித்த ரஷ்யா




மொஸ்கோ,நவ.28

துருக்கி ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் பகுதியில் பதிலடி கொடுக்கும் விதமாக ரஷ்யா தனது உக்கிரத் தாக்குதலை ஆரம்பித்துள்ளது. துருக்கியின் 'எப்16' ரக போர் விமானங்கள், ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த ரஷ்யாவின் போர் விமானம் ஒன்றை சிரியா எல்லையில் சுட்டு வீழ்த்தின. அந்த விமானத்தை இயக்கிய 2 விமானிகளும் பரசூட்டின் உதவியுடன் கீழே குதித்தனர், இதில் ஒரு விமானி காயங்களுடன் வனப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டார். கீழே விழுந்த மற்றொரு விமானியை அமெரிக்கா– துருக்கி ஆதரவுக் கிளர்ச்சியாளர்களான ப்ரீ சிரியா ஆர்மி இயக்கம் சுட்டுக்கொலை செய்தது. மேலும் அந்த விமானியின் உடலை வைத்துக்கொண்டு, அல்லாஹ் அக்பர் என்று முழக்கங்களை எழுப்பிய வீடியோ வெளியாகி, ரஷ்யாவைப் பெரும் கொந்தளிப்புக்கு ஆளாக்கியது. இந்தப் படுகொலைக்கு பழிவாங்கும் வகையில் ரஷ்ய நாடு, சிரியாவில் கூடுதல் இராணுவத் தளபாடங்களைக் களமிறக்கியுள்ளது. 250 மைல் தொலைவில் 60 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கக் கூடிய விமானங்களை வீழ்த்தும் அதிநவீன ஏவுகணைகளையும் ரஷ்யா களத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இந்தத் தாக்குதலைப் பயன்படுத்தி சிரியா இராணுவமும் தீவிரவாதிகள் நிலைகள் மீது பயங்கரத் தாக்குதலை நடத்தி வருகிறது. கஸ்பியன் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டு போர்க் கப்பல்களில் இருந்தும் அலெப்போ, இட்லிப், ரக்கா நகரங்கள் மீதும் உக்கிரமான ஏவுகணைத் தாக்குதலை ரஷ்யா நடத்தி வருகிறது. இதற்கிடையில் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள துருக்கி தூதரகம் மீது, அழுகிய முட்டைகளை வீசி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-ரி4)

# ...கர்ப்போம்

## ...டடல்

...ரிக்காவையும், வெள்ளை மாளிகையையும் குண்டு வைத்துத் தகர்ப்போம் எனக் கூறி வெளியிட்ட வீடியோவுக்குப் பிறகு ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்தப் புதிய மிரட்டல் வீடியோவை வெளியிட்டுருப்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-ரி4)







# ருவிற்றரில் பெண்கள் போராட்டம்

## பொது இடங்களில் ஆண்கள் தம்மை உரசுவதற்கு எதிராக

லண்டன்,நவ.28

பிரிட்டனைச் சேர்ந்த 5 பெண்கள், பொது இடங்களில் பெண்களை உரசும் ஆண்களுக்கு எதிராக போராட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளனர். பொது இடங்களில் பெண்கள், ஆண்கள் மூலம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர், ஆனால் இதனை வெளியில் கூற இயலாமல் தங்களுக்குள்ளேயே மறைத்து விடுகின்றனர். இவ்வாறு, இன்னல்களுக்கு ஆளாகும் பெண்களுக்கு குரல் கொடுப்பதற்காகவும், வரம்புமீறி நடந்துகொள்ளும் ஆண்களுக்கு எதிராகவும் ருவிற்றர் மூலம், மகளிர் அமைப்பு என்ற இயக்கத்தை இந்தப் பெண்மணிகள் தொடங்கியுள்ளனர். தற்போது இந்தப் பெண்களுக்குப் பலரும் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ...கதிகளுக்கு இடமில்லை

...னை அனுமதிக்க முடியாது. ...ன் எல்லைகளை கட்டுப்படுத் ...றின் தலை விதியை தீர்மா ...கருத்துத் தெரிவித்துள்ளார். ...ான ஏஞ்சிலா மெர்க்கல், ...யைச் சந்திப்பதற்கு சில ...முன்னர் பிரான்ஸ் பிரதமர்

இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. எனினும், அதிக அளவிலான அகதிகளுக்குப் புகலிடம் அளித்து வரும் ஜேர்மன் அரசை அவர் நேரடியாக விமர்சனம் [illegible] வில்லை. அகதிகளுக்கு புகலிடம் அ[illegible] தொடர்பான விவகாரங்களில் ஜேர்மன் சான்சிலர் நேர்மையான முடிவுகளை எடுத்துவருவதாக

அவர் செவ்வியில் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் நாடுகளின் பொருளாதார அமைச்சர்கள் ஐரோப்பிய எல்லைகளைக் கட்டுப் [illegible] திட்ட உதவி [illegible] பில்லியன் யூரோ ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தூரனின் அவலச் சாவில் மறைந்துள்ள மர்மம் என்ன?

**தர்சன்**



அரசியல் கைதிகளை விடுவிக்ககோரி அவர்களது உறவினர்கள், அரசியல் தலைவர்கள் பல போராட்டங்களையும், உணவுத் தவிர்ப்புக்களையும் மேற்கொண்டு வரும் இன்றைய சூழ்நிலையில் கோப்பாய் மாணவனுடைய சாவு வடக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட ரயில் கோண்டாவில் உப்புமடம் கடவையை அண்மித்தவேளை, கடவைக்கு அருகில் சைக்கிளில் நின்ற 18 வயது நிரம்பிய இராஜேஸ்வரன் செந்தூரன் என்ற மாணவன் திடீர் எனக் கடவையைத் தாண்டிச் சென்று தண்டவாளத்தில் படுத்த போதே ரயின் மோதி உடல் இரு துண்டாக்கப்பட்ட நிலையில் சாவடைந்தான். இவ்வாறு சாவடைந்த மாணவனுடைய புத்தகப்பை ரயில் கடவையில் நின்றசிலரால்திறந்துபார்க்கப்பட்டதாகவும், இதன் போது குறித்த புத்தகபையினுள் கடிதம் ஒன்று இருந்து எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. அந்தக் கடிதம் தான் குறித்த மாணவனுடைய சாவை பரபரப்புக்கு உள்ளாக்கியுள்ளது.



**கடிதம் சொல்லும் செய்தி**

'தமிழீழ விடுதலையைக் கொடு, ஒளியையூட்டு, அதிமேதகு ஜனாதிபதி மைத்திரியின் நல்லாட்சி அரசு, அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வை அளித்து உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். மேலும் ஒரு தமிழ் அரசியல் கைதியேனும் சிறையில் இருக்கமுடியாது. இந்த அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டியதன் அவசியம் எனக்குப் புரிந்தும்கூட இந்த நல்லாட்சி அரசுக்கு இன்னமும் புரியவில்லையே என்பது எனக்கு மிகவும் வருத்தமளிக்கின்றது. என்றும் - தமிழ் உறவுகளை உயிராய் நேசிக்கும், உண்மையுள்ள, ஆர்.செந்தூரன்.' எனவும் குறித்த கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.

இங்கே அரசியல் விடயங்களில் குறித்த மாணவனுக்கு உள்ள ஈடுபாடு என்ன? மாணவனுடைய உறவினர்கள் எவராவது அரசியல் கைதிகளா? மற்றும் ஈழம் சார்ந்த ஈர்ப்பு, போன்ற விடயங்கள் எல்லோர் மனங்களிலும் எழும் கேள்விகளாக இருக்கின்றன. இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தபோது, மாணவனுக்கு 5 சகோதரர்கள் உள்ளனர். இந்த மாணவன் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவன், பாடசாலையில் எவருடனும் சேர்ந்து திரிவதில்லை. அமைதியையே விரும்புவான், உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்கின்றான். ஊடகத்தையும் ஒரு பாடமாகக் கற்கின்றான் போன்ற பதில்களே கிடைத்தன. இதை வைத்துப் பார்க்கும்போது அந்தக் கடிதத்துக்கும், மாணவனுடைய சாவுக்கும் உள்ள தொடர்பைப் புரிவது கடினமாகவே உள்ளது.

**மாணவனது இயல்பு குறித்த கருத்து**

'இது என்ன புதுக்கதை? எவர் இதைச் சொன்னது? இப்படி ஒரு கடிதமும் எழுதவில்லை. காலையில் சாப்பிட்டு விட்டு நல்ல மாதிரித் தான் பரீட்சை எழுதச் சென்றவன் என்று மாணவனுடைய சாவுகுறித்து மாணவனுடைய தந்தை கூறியிருந்தார். பாடசாலை நண்பர்கள், வெளி நண்பர்களிடத்திலும் மாணவன் தொடர்பான அரசியல் சார்ந்த விவரங்கள் எதுவும் வெளிப்படவில்லை. இவ்வாறு இருக்கும் போது மாணவன் எப்படி அவ்வாறான ஒரு கடிதத்தை எழுதினான், அரசியல் கைதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உணவு தவிர்ப்பை அதைத் தற்காலிகமாக நிறுத்தி, ஒருமுடிவுக்கு கொண்டு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில் அரசியல் கைதிகள் தொடர்பில் உயிரையே விடுமளவுக்கு உணர்வு பீறிட்ட காரணத்தின் தாற்பரியம்தான் என்ன என்பன போன்ற விடயங்கள் இங்கே மீண்டும் கேள்வியாக்கப்படுகின்றன.

> ‘தமிழீழ விடுதலையைக் கொடு, ஒளியையூட்டு, அதிமேதகு ஜனாதிபதி மைத்திரியின் நல்லாட்சி அரசு, அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வை அளித்து உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

**இனப்பற்று உணர்வு நிலை உத்வேகம் அடைகிறதா?**

இது இவ்வாறு இருக்கையில், தமிழர்களுடைய பாரம்பரியத்தில் கல்வியைத் தமது மூலதனமாக கருதும் அதே வேளை, தங்களுடைய உரிமைகளுக்காகவும் போராடுபவர்களாக தமிழர்கள் காணப்பட்டனர். அவ்வாறே மாணவர்களுடைய எழுச்சிப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. கடந்த 2009 ஆம் ஆண்டுக் குப் பின்னர் தற்போது இருக்கும் சூழ் நிலையைக் கருத்திற் கொண்டு, அதற்கு ஒரு முடிவு வேண்டும் என்று கோரி ஒரு மாணவனுக்கு உணர்வு பீறிடுகின்றது என்றால், அது எமது போராட்டங்கள் அடுத்த சந்ததிக்கும் கடத்தப்படுகின்றன என்பதும் மாணவர்கள் தனியே கல்வியை மட்டுமல்ல எமது இனத்தைப் பற்றியும் சிந்திக்கும் திறன் கொண்டவர்கள் என்பதையும் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

ஆனால் இப்பொழுதெல்லாம் ஒருவனின் இறப்பென்பது ஒன்றிரண்டு நாள் கவலைகளோடும் ஆரவாரங்களோடும் மறைந்துவிடுகின்றது. மாணவன் செந்தூரனின் இறப்பும் இதற்கு விதிவிலக்காகாது என்பதை அண்மைய சம்பவங்களை வைத்து உறுதியாகக் கூற முடியும். எனவே இறப்பு என்பதும், தன்னைத் தானே அழித்து கொள்ளுதல் என்பதும் எவராலும் ஏற்றுகொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது,
என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகைகொள்கின்றது
லூக்கா - 1:47

புதிய ஆயரே!
வாழ்க நீர்!
வளர்க உம் நலம்!
தொடர்க உம் பணி!

Best Wishes



எமது கல்லூரியில்
கால்நூற்றாண்டுகளாக
கல்விப் பணிபுரிந்து,
இன்றைய தினம்
யாழ். மறைமாவட்ட
ஆயராக திருநிலைப்
படுத்தப்படுகின்ற

அருட்கலாநிதி. ஜஸ்ரின் பேணார்ட் ஞானப்பிரகாசம்

அடிகளாரை
ஹென்றீசியன் குடும்பம் சார்பில் வாழ்த்திநிற்பதோடு,
அவரை இறைவன் தாமேகாத்து வழிநடத்திச் செல்ல
வேண்டுமென்று இறைவனை இரந்து மன்றாடுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

ES Printers

Stamps
ID.Card
T.Shirt Print
Mug+Plate
Banner
Sticker
Bill Books
Book Print
Leaflets



Email :- esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பதவி ஏற்கிறார் யாழ்.புதிய ஆயர்



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திரு நிலைப்படுத்தல் சடங்கு இன்று யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிர காசம் ஆண்டகை யாழ்.ஆயர் நிய மனத்தைப் பெறும்போது (2007-2015) 8 ஆண்டுகள் யாழ் மறைமாவட் டத்தின் குரு முதல்வராகவும் கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியவர்.

குருத்துவப்பணியில் 40 ஆண்டுகளை 2014ஆம் ஆண்டு நிறைவு செய்துள்ள மேதகு யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது குருத்துவப் பணிக்காலத்தின், 31ஆண்டுகளை கல்விப்பணியிலே குறிப்பாக இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆற்றி 2001ஆம் ஆண்டு கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தவர்.

இங்கிலாந்தில் 1986 ஆண்டு முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும் திரும்பவும் இங்கிலாந்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்ற இவர் 1991ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு - தரத்தை பெற்று 1990 முதல் 1994 காலப் பகுதியில் இளவாலை யின் 12 பாடசாலை களில் கொத்தணி அதிபரா னார். யாழ் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப் பினராக 1998 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் 1982 முதல் 1984 வரை யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

*இவர் தனது இறை யியல் கல்வியை 1972 - 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனேபாப்பிறைக் குருத்துவக் கல் லூரியில் கற்று இறை யியல்: இளங்கலைமாணிப் பட்டத்தை பெற்றவர்.*

யாழ்.மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக 1992 - 2002 ஆண்டு காலப் பகுதியில் பணியாற்றிய இவர் 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியற்துறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ் மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங் களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழவின் தலைவராக 1981 - 1986 ஆண்டு காலப் பகுதியில் பணியாற்றிய இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற் துறையில் 1984 - 1986 ஆண்டு காலப்பகுதியில் கிறிஸ் தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவு ரையாளராகப் பணியாற்றியவர். 1999ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடியவர்.

1974ஆம் ஆண்டு யாழ் புனித அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயத்தில் மறைந்த யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1980 - 1985 ஆண்டு காலப் பகுதியில் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாகவும் 1976 - 1979 ஆண்டு காலப்பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 - 1976 ஆண்டு காலப்பகுதியில் உருத்திரபுரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர் அன்று லோங் தொழில் நுட்பநிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர். இவரின் முதல் குருத்துவப் பணி நியமனம் 1974ஆம் ஆண்டில் கிளிநொச்சி- வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 - 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனே பாப்பிறைக் குருத்துவக் கல்லூரியில் கற்று, இறையியல்; இளங்கலைமாணிப் பட்டத்தை பெற்றவர். இவர் தனது மெய்யியல் கல்வியை 1966 - 1969 ஆண்டு காலப் பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் ஆரம்ப கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் மற்றும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர்.

யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 2015ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் 11ஆவது ஆயராக யாழ் புனித மரியன்னை போராலயத்தில் பொறுப்பேற்கிறார்.

*அருட் திரு.ரூபன் மரியாம்பிள்ளை*
*ஊடக விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்*

# வடக்கு மாகாணத்தின் நிர்மாணத் துறையில் மாற்றம் மிக அவசியம்

எந்திரி ந.நந்தரூபன்

பல நூற்றாண்டுகாலபழைமைவாய்ந்த இலங்கை நிர்மாணத் துறையானது, போருக்குப் பிந்திய நிலையில் புதிய தொழில்நுட்ப வளங்களுடனும் மிக வேகமாக முன்னேறி வளர்ந்து கொண்டு வருகின்றதோடு, மொத்த உள் நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் வடமாகாண நிர்மாணத்துறையை நோக்குவோமானால், போருக்குப் பின்னர் பல நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அதில் வடமாகாணத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்மாணிகளினது பங்களிப்பு மிகக் குறைவாக உள்ளது.

மூன்று தசாப்தகால போர் முடிவடைந்த பின்னர் பல நிதி நிறுவனங்களும் ஒப்பந்த நிறுவனங்களும் போட்டி போட்டு வடமாகாணத்தில் தமது கிளைகளை ஆரம்பித்து, தத்தம் வியாபாரங்களை விஸ்தரித்து இலாப நோக்கத்தை மட்டும் கொண்டதாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்தவேளையில், வடமாகாணத்தின் நிர்மாணத்துறை மிகவும் பல பின்னடைவுக ளைச் சந்தித்துக்கொண்டு வருகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது பிரதான காரணங்களாக,

**முதலீட்டாளர்கள் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒப்பந்தகாரர்களைக் கொண்டு வேலைகளைச் செய்வதோடு இந்த மாகாணத்திலுள்ள பொறியியலாளர்களினதும் கட்டடக் கலைஞர்களினதும் ஆலோசனைகளைப் பெற்று எமது பாரம்பரிய கட்டடக்கலை அம்சத்துடன் கூடிய கட்டடங்களை அமைப்பதற்கு முன்வரவேண்டும். மேலும் நிதி நிறுவனங்கள் ஒப்பந்தகாரர்களுக்கான பிணை முறிகள் என்பவற்றைக் குறைந்த வைப்புப் பணத்துடன் வழங்க முன்வருவதுடன் அவர்களின் கொடுப்பனவு தாமதத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய குறுகிய கால கடன் வசதி களைச் செய்து கொடுக்க முன்வரவேண்டும்.**

1. நிர்மாணத்துறையின் மிகமுக்கியவளங்களான மனிதவளம் (Man power) இயந்திரசாதனங்கள் (Machinaries) நிதி வளங்களை (Money) இழந்து நிற்பதோடு பொருள்கள் (Materials), சந்தைப்படுத்தல் (Marketing) போன்றவற்றில் போதிய அறிவு இல்லை.
2. மிகப்பெரிய வேலைகளைச் செய்வதற்குரிய அதே மாதிரியான அனுபவம் (similar experience) இல்லாமை (கடந்தகாலங்களில் அவ்வாறான வேலைகள் நடைபெறாமையால் அந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் அமையவில்லை.)
3. சிறியமற்றும்நடுத்தர ஒப்பந்தகாரர்களிடம் உள்ள விளக்கமற்ற போட்டித் தன்மை, பிற மாகாண ஒப்பந்தகாரர்களினுடைய போட்டி தன்மையாலும் மிக்க் குறைந்த தொகையில் வேலைகளை எடுத்து எதையும் சேமிக்க முடியாத தன்மையோடு தமது சொத்துக்களை இழந்து கடன்காரர்களாக மாறி இந்தத் துறையிலிருந்து விலகிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், புதிதாகவும் இந்தத் துறைக்கு அனுபவமற்ற நிர்மாணிகள் வந்து கொண்டிருந்தால் இந்த நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கிறது.
4. வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒப்பந்தகாரர்களுக்குரிய சங்கங்கள் சிறந்த முறையில் தொழிற்படாமையும் அந்தச் சங்கங்களில் சகல ஒப்பந்தகாரர்க ளும் அங்கத்தவர்களாக இல்லை.
5. அரச திணைக்களங்களிடமோ அல்லது வடமாகாண சபையிடமோ வடமாகாண நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான ஒருபொறிமுறையோ அல்லது குறைந்த பட்சவிருப்புத்தன்மையோ இல்லை.

அதுவே தற்போதுள்ள இந்த நிலைமையை நிவர்த்தி செய்து நிர்மாணத்துறையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது நிர்மாணத்துறையிலுள்ள சகல பங்குதாரர்களாகிய நிர்மாணிகள், பொறியியலாளர்கள், முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள், வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரினதும் கடமையாகும்.

நிர்மாணிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமக்குரிய சங்கங்களை வலுப்படுத்தி, அதன் மூலம் ஒருமித்துக் குரல் கொடுத்துத் தமக்குத் தேவையானதை ஒற்றுமையோடு பெற்றுக்கொள்வதோடு தமது நிலையை உயர்த்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அரச திணைக்களங்களின் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள்வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒப்பந்தகாரர்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு அவர்களின் தகுதிகளை ஆராய்ந்து மிகக் குறைந்த கேள்வி கோருவதற்கு மட்டும் வேலைகளைக் கொடுக்காமல் சகல தகுதிகளையும் ஆராய்ந்து வேலைகள் கொடுப்பதோடு கொடுப்பனவுகளை விரைவுபடுத்தி வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதலீட்டாளர்கள் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒப்பந்தகாரர்களைக் கொண்டு வேலைகளைச் செய்வதோடு இந்த மாகாணத்திலுள்ள பொறியியலாளர்களினதும் கட்டடக் கலைஞர்களினதும் ஆலோசனைகளைப் பெற்று எமது பாரம்பரியக் கட்டடக்கலை அம்சத்துடன் கூடிய கட்டடங்களை அமைப்ப தற்கு முன்வரவேண்டும்.

மேலும் நிதீ நிறுவனங்கள் ஒப்பந்தகாரர்களுக்கான பிணை முறிகள் என்பவற்றைக் குறைந்த வைப்புப் பணத்துடன் வழங்க முன்வருவதுடன் அவர்களின் கொடுப்பனவு தாமதத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய குறுகிய கால கடன் வசதிகளைச் செய்து கொடுக்க முன்வரவேண்டும்.

இறுதியாக வடமாகாணத்தின் அரசியலையும் நிர்மாணத்துறையையும் சிறந்த முறையில் ஒப்பேற்றித் தருவதற்காக வடமாகாண மக்கள் தமது பூரண ஆதரவுகளை நல்கி வடக்கு மாகாண சபை தெரிவு செய்துள்ளபடியால் அவர்கள் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நிர்மாணத்துறையின் வளர்ச்சியைக் கட்டி எழுப்புவதற்குரிய அவசரமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி விடயங்களில் மாற்றம் ஏற்பட்டு சகல பங்குதாரர்களும் இணைந்து செயற்பட்டால்தான், நிர்மாணத்துறை வளர்ச்சி அடைவதோடு இந்தப் பகுதி நிலைத்து நிற்கக்கூடிய சிறந்த பொருளாதார வளர்ச்சியும் அடையும்.

*கட்டுரையாளர்*
*பட்டப் பொறியியலாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசுக்கு மனிதநேய பண்பு முகிழ்ப்பது எப்போது.....?

பாடசாலை மாணவன் ஒருவன், ரயில் முன் பாய்ந்து உடல் சிதறிச் சாவடைந்த சம்பவம் -- தற்கொலை செய்த நிகழ்வு -- வடக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் புல்லரிக்க வைத்துள்ளது. அவனது சாவு தனிப்பட்ட மட்டத்திலான உயிர் துறப்பல்ல.

பதினெட்டே வயதான அந்த மாணவனின் உயிர்த் தியாகம் அவனது அபரிமிதமான மனிதாபிமானத்தின் குறியீடு. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அரசு ஏய்க்காட்டி, கீச்சுமாச்சுத் தம்பளம் விளையாடும் போக்கு, பதினெட்டு வயதான அந்த மாணவனது ஆழ் மனதை பாதித்ததன் விளைவே அது எனக் கொள்ளலாம்.

அரசின், அதன் எடுபிடிகளின், நேரத்துக்கு நேரம் மாறும், வெவ்வேறு நிலைப்பாடுகளை மேற்கொண்டு ஏய்க்காட்டும் போக்கு, அந்த மாணவனின் ஆழ்மனதைப் பாதித்ததன் விளைவாகவே இந்தச் சம்பவத்துக்கான முடிவு மேலெழுந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

நீண்டகாலமாகத் தடுத்து வைத்தல் என்ற மனிதாபிமானம் அற்ற அதிகாரத்தனத்தால், தமிழ் அரசியல் கைதிகள் தமது வாழ்க்கையின் கடைசி எல்லைக்குத் தள்ளிச் செல்லப்பட்டுள்ளனர்.

அத்தகைய நிலையை நினைந்து, மேற்குறிப்பிட்ட மாணவன் தனது மனதை ஈரமாக்கியே தனது உயிரை ஆகுதி ஆக்கினான் எனக் கொள்ளலாம்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்படுவோருக்கு மட்டு மன்றி, அவர்களது குடும்பங்களுக்கும் நித்தம் நித்தம், மணித்துளி ஒவ்வொன்றுக்கும் வாழ்க்கை கசந்து திக்கற்றவர்களாக மாறும் நிலை உயர்கிறது.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்க வேண்டும் என்ற குரல் மனிதநேயத்தின் பாற்பட்டு வெளிப்படுவதை உணராத நிலையிலேயே, முந்தைய அரசு போன்று, இப்போதைய அரசும் மனிதாபிமானம் சிறிதும் இன்றி அதனைக் காலால் உதைத்துத் தள்ளுகிறது. அது பால் வெள்ளை போன்று தெரிகிறது!

அதனாலேயே, மதத்தலைவர்கள், சிவில் பிரதிநிதிகள் அரசியல் தலைவர்கள் என்று மனிதநேயம் உள்ள அனைத்துத் தரப்புக்களும்அவர்களை விடுவிக்க வேண்டிக் குரல் கொடுக்கின்றன. அதற்காக இதுவரை தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்ற உணவுத் தவிர்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் பலப்பல.

ஆனால், அரசு மனிதநேயத்தின் பாற்பட்டேனும் அவர்களின் விடுதலைக்கு வழி கோலாமல் முப்பது பேர்களை மட்டும் பிணையில் விடுவித்துள்ளது.

வழக்கமான பேரினவாத நோக்கில் மனிதாபிமானத்தைக் காலால் மிதித்து தமிழ் மக்களின் உணர்வுகளை ஆழமான புண்ணாக்கிக் கீறிக் கிழித்துள்ளது.


அந்த நிலையில், குறித்த மாணவனின் உயிர்துறப்பு, கல்மனதையும் உருகச் செய்யும், மனிதாபிமானத்தைப் பிளந்தெறியும் ஒன்றாக உயர்ந்து நிற்கிறது.

மொத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்படும், உண்டாக்கப்படும், இத்தகைய அரசியல் வலிகளை, பல்கிப் பெருக விடாமல் தடுத்து நிறுத்துவது எப்போது?

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதில் வெற்றி கொண்டு விட்டதாக தம்பட்டம் அடித்துக் கொண்டிராமல் --

சட்டம் நீதி என்பவற்றுக்கு மேலாக, மனிதாபிமான, மனிதநேயப் பண்பின் பாற்பட்டு செயற்படுவதற்கு நல்லாட்சி அரசு மனதொன்றிச் செயற்படத் தயங்குவது ஏன்?

# தமிழர்களின் உணர்வுகளை அடக்கிவிட முடியாது



**வந்தியத் தேவர்**

நிலக்கீழ் மாளிகையில் பாதுகாப்பாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபடியே இலங்கையின் வளங்களைக் குடும்பச் சொத்தாகக் குவித்துக் கொண்டு காலம் முழுவதும் கவலைகளின்றி வாழலாம் என்ற கனவில் மிதந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த மக்களின் பலமான அடியில் வீழ்ச்சியுற்ற போதும் மீண்டும் எப்படியாவது ஆட்சியில் அமர வேண்டும் என்ற துடிப்பில்தான் உள்ளதுபோல் தெரிகின்றது. விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற நிலையில்தான் அவரது செயற்பாடுகள் காணப்படுகின்றன. எப்படியும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதில் உறுதியாகவே காணப்படுகிறார். அதற்காக எதையும் சொல்ல, செய்யத் தயாராகவே உள்ளேன் என்பது போலுள்ளது அவரது நடவடிக்கைகள்.

தமிழ் மக்கள் தமது விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் விடுதலைப்புலிகளின் தலைமையில் ஆயுதப்போரை முன்னெடுத்திருந்தது. இலங்கையில் அகிம்சை. வழியிலும் ஆயுதம் தூக்கியும் தமிழ் மக்களைப் போராட வற்புறுத்தியது சிங்கள அரசியல் தலைமைகளே இந்தியாவினதும் ஐ.நாவினதும் நடவடிக்கைகள் தமிழினத்தை அழிப்பதற்கு மகிந்தவுக்கு பலமான உந்து சக்தியாக விளங்கியதால் தமிழ் மக்களும் தமிழர்களது உரிமைகளை வென்றெடுக்க முனைப்புடன் செயற்பட்ட விடுதலைப்புலிகளும் பெருமளவில் உயிர் துறக்க வேண்டியதாயிற்று. எனினும் தமக்காக உயிரைஈந்த உறவுகளை நினைக்க அவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலையே தொடர்ந்து இருந்துள்ளது. எனினும் அவற்றையெல்லாம் மீறி தமிழ்மக்கள் தமக்காக ஆகுதியான உறவுகளுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தத் தவறவில்லை. பலதரப் பட்ட சவால்களுக்கும் முகம் கொடுத்து தமிழ் மக் கள் தமது கடமையை நிறைவேற்றியே வருகின்றனர்.

இந்த மாதம் இந்த வாரம் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியத்துவம் மிக்கது. தமிழர்கள் தம்து மாவீரர்களை, உறவுகளை நினைவில் நிறுத்தி அஞ்சலி செலுத்தும் கடமையை நிறைவேற்றுவார்கள் என்பதில் மறுப்பில்லை. எனினும் அதனைச் செய்யவிடாது தடுக்க வேண்டும் என்பதில் மகிந்த தீவிரமாகவே உள்ளார். நாடாளுமன்றத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளது. இந்த விடயத்தில் இன்றைய அரசு எதிர்ப்புக் கொள்ளவில்லைபோல் தெரிகின்றது. எனினும் மகிந்த ஈழத்தில் புலிக் கொடி ஏற்றப்பட்டுவிடும். பறக்கவிடப்படும். சிறையில் அடைக்கப்பட்ட தமிழர்களை அரசு விடுதலை செய்து விட்டது. தடை விதிக்கப்பட்ட அமைப்புக்களின் தடைகள் விலக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் தென்பகுதி மக்களிடத்தில் பீதியைக் கிளப்பி மீண்டும் ஒரு மோசமான நிலையைத் தோற்றுவிக்க மகிந்த கிளம்பியுள்ளார். தென்பகுதி மக்களும் சரி வடக்கில் உள்ள மக்களும் சரி நாட்டில் உரிமைகளுடனும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணமும் சிந்தனையும் அவருக்குக்கிடையாது. இணங்களுக்கு இடையில்மோதல்களை உருவாக்கி ஒரு கலவரத்தை உண்டுபண்ணி முடியுமானால் மீண்டும் ஆட்சியைப் பிடித்து பதுங்கு குழிக்குள்ளாவது பாது காப்பாக இருந்து கொண்டு சர்வாதிகாரியாக நாட்டின் சொத்துக்களுக்குச் சொந்தக்காரர் களுக்கு சொந்தக்காரராக ஆயுள் முழுதும் ஆள வேண்டும் என்பதே மகிந்தவின் சிந்தனை. பிரிவினைவாதத்தைத் தூண்டிய அமைப்புக் களுக்கு எமது ஆட்சியில் தடை செய்யப்பட்டிருந் ததால் நாட்டின் ஒட்டுமொத்தப் பாது காப்பும் பலப் படுத்தப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டவர் களுக்கு விசாரணைகூட இல்லை என்கிறார். என்ன குற்றச்சாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் எனக்கூறித் தமிழ் இளைஞர்களை சிறையிலிட்டார் என்பதைக் கூட வெளியிட முடியாத நிலை யில் இருந்த மகிந்த இப்போது வழக்குக்கூட இல்லாமல் விட்டுவிட்டதாகப் புலம்புகிறார். மாவீரர் நாளை நினைவுகூர தமிழ் மக்களை அனுமதிக்கக் கூடாது என்பது மகிந்தரின் விடாப்பிடி. இதற்காக விகாரைகளைக்கூட இனவாதிகளின் கூடாரமாக மாற்றிக் கொண்டு அலைகின் றார். வடக்குகிழக்குப் பிரச்சினையில் பதவிக்கு வருவதற்காகக் காட்டிய அக்கறை அரசுக்கு இப்போது இல்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு இன்றைய அரசு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இனவாதிகளின் கருத்துக்களைக் கண்டு அஞ்சும் நிலையில் அரசுஉள்ளது போலவும்.அதனாலேயே பேரினவாதிகளின் நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்கமுடியாத நிலையிலும் அது உள்ளதோ எனத் தமிழர்கள் உட்பட ஒட்டுமொத்த சிறு பான்மை இனமும் அரசைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டியுள்ளது. நாட்டில் ஆயிரம் பிரச்சினைகள் உண்டு. அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து ஒரு சுபீட்சமான நாட்டைக் கட்டி யெழுப்பக்கூடிய திராணியில்லாத நிலையில் தென்பகுதியில் உள்ள அரசியல் தலைமைகள் நாட்டை யார் ஆட்சி செய்வது என்பது தான் மக்களின் பிரச்சினை என்று கருதுகிறது. அதற்கு இப்போது மாவீரர் தினத்தைப் பயன் படுத்தத் தொடங்கியுள்ளனர். என்ன இருந்தாலும் தமிழ் மக்கள் தமது உறவுகளை மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவார் கள் என்பது மட்டும் திண்ணம்.

> என்ன குற்றச்சாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் எனக்கூறித் தமிழ் இளைஞர்களை சிறையிலிட்டார் என்பதைக்கூட வெளியிட முடியாத நிலையில் இருந்த மகிந்த இப்போது வழக்குக்கூட இல்லாமல் விட்டுவிட்டதாகப் புலம்புகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# இலங்கைத் தீவை சீரழிக்கும் இனவாதிகள்



மைத்திரி- ரணில் தலைமையிலான அரசின் கீழ் இனங்களுக்கிடையே நல்லுறவு தழைத்து வருவதை இனவாதிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இந்த நாட்டில் மீண்டுமொரு இரத்தக் களரி ஏற்பட்டாலும் பரவாயில்லை. தமது அரசியல் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலேயே இவர்கள் குறியாக உள்ளனர்.

இந்த நாட்டிலே கொடிய போர் ஒன்று இடம்பெற்று பல்லாயிரக் கணக்கான உயிர்கள் இழக்கப்படுவதற்கு இனவாதிகளின் இனவாதச் செயற்பாடுகளே பிரதான காரணமாக இருந்துள்ளது. சுமார் 70 சத வீதம் அளவுக்கு வாழ்கின்ற பெரும்பான்மையின மக்களுக்கு மட்டுமே இந்த நாடு சொந்த மானது என்றும் ஏனைய சிறுபான்மையின மக்களுக்கு இங்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லையெனவும் கூறிக்கொள்ளும் இனவாத அரசியல்வாதிகள் இதனையே பெரும்பான்மையின மக்கள் மத்தியில் பரப்பி விடுகின்ற பரப்புரைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சாதாரண பெரும்பான்மையின மக்களின் மனங்களில் சிறுபான்மையினர் தொடர்பான கசப்புணர்வு வளர்ந்து காணப்படுகின்றது.

சுமார் மூன்றில் ஒரு பகுதி அளவுக்கு சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டில் வசிப்பதால் அவர்களின் பலத்தை இலகுவாகக் குறைத்து மதிப்பிட முடியாது.

இதேவேளைஇலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் தமது உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கு ஒருபோதுமே விரும் பியதில்லை. தாமும் இந்த நாட்டின் மீது உரிமை கோருவதற்குப் பூரண தகுதி உடையவர்கள் என அவர்கள் எண்ணுவதால் தமது உரிமைகள் பறிபோவதை அவர்கள் எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்வதில்லை. இதுவே இனவாதிகளால் அவர்கள் அடிக்கடி பாதிப்புக் குள்ளாவதற்கான பிரதானமான காரணியாகும். ஏனைய சிறுபான்மையின மக்கள் தமது உரிமைகள் தொடர்பில் அதிகளவு அலட்டிக் கொள்வதாகத் தெரிய வில்லை. அவர்களின் தலைமைகள் ஆளும் வர்க்கத்துடன் இணைந்து செயற்படுவதையே விரும்புகின்றன. இதனால் இவர்கள் பெருமளவு அனுகூலங்களையும் பெற்று வரு கின்றமை அனைவரும் அறிந்தஒன்றுதான். ஆனால் இலங்கைத் தமிழர்களின் தலைமை தாம் சார்ந்த மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டங்களில் ஈடுபடுவதற்குத் தயங்கிய தில்லை. ஆரம்பத்தில் சாத்வீகப் போராட்டங் களில் ஈடுபட்டு அவை தோல்வியடைய ஆயுதங்களைத் தூக்க வேண்டிய நிலையும் உருவானது. இதன் காரண்மாக சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாடு இரத்தத்தின் வாடையை அனுப வித்தது. பின்னர் 2009 ஆம் ஆண்டு வெளி நாடுகளின் பூரண ஆதரவுடன் அந்தப் போராட்டமும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழர்கள் ஏதுமற்ற ஏதிலிகளாக மாற்றப்பட்டனர்.

தமிழர்கள் இந்த நிலைக்கு வந்ததன் பின்னரும் அவர்கள் மீதான காழ்ப்புணர்வு இன வாதிகளின் மனங்களிலிருந்து அகலவில்லை. தமிழர்களால் என்றோ ஒருநாள் இந்த நாடு பிளவைச் சந்திக்கப் போகின்றது என்ற பயம் அவர்களை ஆட்டிப் படைக்கின்றது.

தமிழர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டில் மட் டுமே ஆறு கோடிக்கும் மேலாக வாழ்ந்து கொண்டிருப்பதும், ஏனைய பல நாடுகளில் பரந்து வாழ்வதும் இனவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியாதவைகளாகி விட்டன.. ஆனால் தமக்கென இந்த ஒரு நாடு மட்டுமே உள்ளதென்பது அவர்களின் மனதை சதா காலமும் உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

**இந்த நாட்டு மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒற்றுமையுடன் வாழவே விரும்புகின்றனர். முறுகல் போக்கைக் கடைப்பிடிப்பதால் அழிவுகள் தான் ஏற்படுமென்பதை அவர்கள் அனுபவபூர்வமாகவே உணர்ந்துள்ளனர்.**

சமீபகால அரசியல் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம்சிறுபான்மையின மக்களைப் பொறுத்தவரையில் சோதனையும், வேதனையும் கலந்ததா கவே கழிந்து விட்டது. குறிப்பாகத் தமிழ்மக்கள் எதிர் கொண்ட அவ லங்களும், அழிவுகளும் எழுத்தில் வடிக்க முடியாதன. போரைக் காரணம் காட்டியே அவர்களை வேரோடு சாய்க்கும்செயற்பாடுகளில்முனைப்புடன் செயற்பட்டது வெற்றியும் பெற்றது. ஆனால் அரசியல் ரீதியில் மகிந்த தமிழர்களின் வாக்குப் பலத்தால் தோற்கடிக்கப்பட்டார். இதுவே மகிந்தவினதும் அவ ரைச் சார்ந்த இன வாதிகளினதும் மனங்களில் மோசமான இனவாத விசத்தை பரவச் செய்து விட்டது. இன்று மகிந்த முடியிழந்து, அதிகாரம் இழந்து ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக பரிதாபத் துக்கு உரிய வகை யில் நடமாடுவதற்கு தமிழர் களே பிரதான காரணம் என்பதை நினைக்கும் போதெல்லாம் இனவாதத் தீ அவர்களின் உள்ளங்களில் கொழுந்துவிட்டு எரிகின்றது. இதன் பிரதிபலிப்பை நாம் தற்போது வெளிப்படையாகவே காணமுடிகின்றது.

நல்லாட்சி அரசு தமிழர்களுக்கு ஒரு சிறு துரும்பைக் கிள்ளிப் போடுவ தைக்கூட இவர்கள் விரும்பு வதில்லை. மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், வெளிநாடுகளில் இயங்குகின்ற தமிழர் அமைப்புக்களுக் கும், தனிப்பட்டவர்களுக் கும் மகிந்த அர சால் விதிக் கப்பட்ட தடைகளை நீக்குதல், தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை விலக்குதல், பல ஆண்டுகளாக இடம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களில் ஒரு பகுதியினரை அவர்களின் சொந்த இடங் களில் குடியமர்த் தல், போர்க்குற்றங்கள் தொடர்பான நியாய மான விசாரணை ஆகிய விடயங்களில் தற் போதைய அரசு சாதகமாகச் சிந்திப்பதற் குக்கூட இடமளிக்காத வகையில் இனவாதிகள் அவற்றைக் குழப்புவதிலேயே குறியாகச் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

இந்த நாட்டு மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒற்றுமையுடன் வாழவே விரும்பு கின்றனர். முறுகல் போக்கைக் கடைப்பிடிப் பதால் அழிவுகள்தான் ஏற்படுமென்பதைஅவர்கள்அனுபவபூர்வமாகவே உணர்ந் துள்ளனர். மேலும் நாடு அபிவிருத்திப் பாதையில் பயணிக்க வேண்டுமாயின் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டும் என்பது தான் பொதுவான நியதியாகும். ஆனால் இதைச் சீர்குலைத்து தமது குறுகிய அரசியல் அபிலாசைகள் நிறைவேற வேண்டுமென இனவாதிகள் எதிர்பார்த் துக் காத்திருக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் ஒருவர் பதவி வகிப்பதை விரும்பாத இந்த இனவாதக் கும்பல் அவரை அந்தக் கதிரையில் இருந்து அகற்றிவிட்டுத் தம்மில்

(23 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் வீதியும் நல்லூரும்

நல்லூர் திருவிழாக் காலங்களில் அவ்வப்போது சீறிச் சினப்பதும் விருத்தாந்தங்கள் எழுந்து மறக்கப்படுவதாயும் ஆகிவிட்டது. முக்கியமாக பிறவூர் அடியார்கள் திரும்பும்போது அவர்கள் அல்லற்படுவதையும் பார்க்க எனக்கு ஏற்படும் மனவேதனை சொல்லொணாதது.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் நாவலர் வீதியும் ஒன்று. அத்துடன் அது அதிநீளமான வீதியுமாகக் கரு தப்படுகின்றத. இப்போது இந்த வீதியின் பாவனை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நல்லூர் திருவிழாக் காலங்களில் உச்சமடைந்து பின்னர் தணிவடைகின்றது.

இந்த நிலையில் அதிகாரிகளும் அரசியல் கனவான்களும் நலன்விரும்பிகளும் தூரநோக்குடன், கச்சேரி நல்லூர் வீதிக்கும் பலாலி வீதிக்கும் இடைப்பட்ட பகுதியையாவது இரும்புக் கரங்களைப் பிரயோகித்து அகலிப்புச் செய்வார்களேயானால், அது நல்லூர் அடியார்களுக்குச் செய்யும் புண்ணியச் செயலாகும்.

*ச.தி.சண்முகநாதன்,*
*152/8 கோயில் வீதி,யாழ்ப்பாணம்*

## கொக்குவில் இந்து மாணவனின் இறப்பு ஒரு ஆரம்பம்

விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிந்தவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களே ஆயின் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளே ஆவர்.

ஒன்றா இரண்டா பத்து, பதினைந்து வருடங்களாகப் பிள்ளை, தந்தை முகம் மறந்து, மனைவி, கணவன் துணை இன்றி, பெற்றெடுத்தவள் கண்ணீரில் மூழ்கி, இவர்களது வாழ்க்கையை (தமிழ் அரசியல் கைதிகளின்) பாழாக்கியது மட்டுமன்றி இவர்களது பிள்ளைகளது வாழ்வையும் ஏன் ஐயா பாழ்படுத்துகின்றீர்கள்.

எம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி இன்று எம் சகோதரனின் (செந்தூரனின்) இறப்பு ஆரம்பமே!!! இருந்தவர்கள் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா?.

*தமிழ்க் கைதிகள் விடிவுக்காய்*
*யாழ். இந்துவின் மைந்தன்*

## வெள்ளம் வடிந்து செல்வதற்கு முன்கூட்டியே திட்டமிடுவோம்

அண்மையில் பெய்த மழையால் வட பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர். இங்குள்ள சில பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து கொண்டதால் மக்கள் பொது இடங்களில் தஞ்சமடைந்திருந்தனர். வீதிகள் உயர்த்தப்பட்டதால் வெள்ள நீர் வழிந்தோட முடியாத நிலையில் வீட்டு வளவுகளில் தேங்கி நின்றதைக் காண முடிந் தது. இங்குள்ள அதிகாரிகள் மழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக முன் கூட்டியே சிந்திப் பதாகத் தெரியவில்லை. மழை பெய்து வெள்ளமும் வந்த பின்னர் தான் விழித்துக் கொள்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது பொது மக்கள்தான். ஆகவே வெள்ளம் வரும்போதே சிந்திப்பதை விடுத்து முற்கூட் டியே வெள்ளம் வடிந்து செல்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்திக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

*ம.பகீரதன், துஎழாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட ...

# மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆ...

# வாழ்த்து மலர் - 28 ந...



**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்த்து**


யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்பதை இட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். யாழ் மறைமாவட்டத்தை காலத்தின் தேவைக் கேற்ப கவனத்தோடும் கண்ணியத்தோடும் நடத்தி ஒரு பொற்காலத்தை நோக்கி நகர்த்திச் செல்வார் என்பதில் எந்த ஐயமும் இல்லை. சிறந்த நிர்வாகம் ஆழ்ந்த கல்வி யறிவு முழுமையான ஆளுமை முதிர்ச்சியான ஆன்மீகம் எனப் பன்முக ஆளுமைகொண்ட மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகசம் ஆண்டகையை யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக எமது வாரிசாக அமர்த்திச் செல்வதில் திருப்தியும் மனநிறைவும் மனமகிழ்வும் அடைகிறோம். இவரின் ஆளுமைகயில் யாழ் மறைமாவட்டம் புதிய சகாப்தத்தை நோக்கி இனிதே நகரட்டும் அவரின் பணி சிறக்க வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறேன்.



**நல்லை ஆதீன குருமணியின் வாழ்த்து**

யாழ் மறைமாவட்ட புதிய ஆயரான கலாநிதி மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கத்தோலிக்க திருச்சபையில் குருத்துவப்பணியை நீண்ட காலமாக நற்பணியாற்றி பலரது நன்மதிப்பையும் பெற்று அனைவரது அன்பையும் தனதாக்கியவர். இனிமையாகப் பேசுவதும் எழிமையாகப் பழகுவதும் அடக்கமான நன்நடத்தையும் கொண்டு கத்தோலிக்க திருச்சபைக்கு பெருமை சேர்த்துள்ளார். அனைத்து மதங்களுடனும் நல் இணக்கத்தை ஏற்படுத்தி ஏனைய மதத்தலைவர்களையும் கௌரவிக்கும் பண்பும் கொண்ட ஆண்டகை யாழ் மறைமாவட்ட அயராக பதவி ஏற்பது கிறிஸ்தவ மக்களுக்கு மட்டும் அன்றி ஏனைய மதத்தவருக்கும் மகிழ்ச்சியை தந்துள்ளது. ஆயர் அவர்கள் இறைபணியில் பல ஆண்டுகள் தொடர இறையாசியை மனப்பூர்வமாக வேண்டுகிறோம். வாழ்க வளமுடன். என்றும் வேண்டும் இன்ப அன்பு. **ஸ்ரீலஸ்ரீ.ஸ்வாமிகள் இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்தபரமாசாரிய சுவாமிகள்**









வண.கலாநிதி ஜஸ்ரீன் ஞானப்பிரகாசத்திற்கும் எனக்கு மிடையிலான தொடர்பு ஏறக்குறைய இருபத்தெட்டு வருடகால பழமை வாய்ந்தது. அவர் புனித கென்றியரசர் கல்லூரியில் அதிபராக இருந்த பொழுது நான் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராக இருந்தேன். வலிகாமம் பிரதேச அதிபர்கள் கூட்டத்தில் அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். அவருடைய நிர்வாகத்திறனையும் ஆழ்ந்த ஆங்கில புலமையையுங் கண்டு பிரமிப்படைந்தேன்.

ஆயர் ஞானப்பிரகாசமும் நானும் பல வருடங்கள் யாழ் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினர்களாகப் பணியாற்றியுள்ளோம். பேரவைக் கூட்டத்தில் ஜஸ்ரீன் அடிகளார் பேசத் தொடங்கினால் பூரணவமைதி நிலவும். அனைத்து உறுப்பினரும் அவருடைய கருத்தினை ஆர்வத்துடன் செவிமடுப்பர். பேரவையில் எல்லாராலும் மதிக்கப்பட்ட உறுப்பினராகத் திகழ்ந்தவர். இக்கால கட்டத்திலேதான் ஜஸ்ரீன் அடிகளாரும் நானும் இணைபிரியா நண்பர்களானோம்.அவருடைய பேச்சுத்திறனும் நிர்வாக ஆற்றலும் அன்புள்ளமும் என்னை பெரிதும் கவர்ந்தது.

புதிய ஆயருக்கு முன்னால் உள்ள சவால்கள் அனேகம். இந்து கிறிஸ்தவ உறவைப் பலப்படுத்துவது - தமிழ் சிங்கள உறவைக் கட்டியெழுப்புவது - தமிழ் மக்களின் மீள் குடியேற்றத்திற்கு வழிகாட்டுவது - மீனவர் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பது போன்ற பல பிரச்சினைகள் புதிய ஆயரை எதிர் நோக்கியுள்ளன. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆயர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசத்தை விட ஒரு சிறந்த தலைவரை கத்தோலிக்க திருச்சபை பெற முடியாது. அருமை நண்பர் ஜஸ்ரீன் அடிகளார் பல்லாண்டு காலம் திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் அரும் பணியாற்ற வேண்டு மென இறைவனை வேண்டுகிறேன்.

**அதி.வண.கலாநிதி.எஸ் ஜெயநேசன் முன்னாள்பேராயர் தென்னிந்தியதிருச்சபை**



புதிய ஆயர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகை நல்ல தலைவர் - நல்ல நிர்வாகி- நல்ல முகாமையாளர்-தரமான கல்வியியலாளன் - பொருத்தமான ஆலோசகர் - சிறந்த வழிகாட்டி எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல ஆயன் -நல்ல ஆன்மீக தலைவன்.

இளவாலையில் அருள்பணியாளராக இவர் ஆற்றியபணி மறக்கமுடியாதவை. அதிலும் மேலாக புனித யூதாததேயு பங்கின் பணிகள் மறக்கமுடியாதவை. பங்கு உருவாக்கம் முதல் வளர்ச்சி வரை கூடவே இருந்து இன்று வரை செயலாற்றுகிறவர்.இளவாலையை விட்டு அவர் வந்தபின்பும் பங்கு மக்கள் மத்தியில் நின்று நிலைத்திருப்பவர். எத்தனை பங்குத் தந்தையர்கள் வந்து சென்றாலும் இவரின் ஆணைக்காக வழிகாட்டல்,ஆலோசனைகளுக்காகவே புனித யூதாததேயு பங்கு மக்கள் காத்திருக்கின்றனர்.

ஜஸ்ரீன் சுவாமியின் வார்த்தைகள் மாற்ற முடியாதவை என்பதை உணர்ந்த பங்கு மக்கள் கேள்விக்கிடமின்றி அவரது வார்த்தைப்படியே நடப்பவர்கள். யூதாததேயு பங்கின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் மற்றுமொரு படிக்கல்லாக இருந்தவர்-இப்பவர் எங்கள் அன்புத் தந்தை. வழிகாட்டி ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும்.

நிர்வாகியாக தலைவராக துணி ந்து நின்று சவால்களுக்கு முகம் கொடுத்தவர். இவரது நடத்தையால் தான் சார்ந்தவர்களை தனது பாணியில் இழுத்துச் செல்லும் தன்மை கொண்டவர். இதனை கூறும் நானும் அவரது பாசறையைப் பின்பற்றியதினால் ஜஸ்ரீன் சுவாமியின் சாயல்தெரியும் நிர்வாகி என பலரால் இனம் காணப்பட்டேன்.

புதிய ஆயர் ஆண்டகைக்கு எனதும் இளவாலை புனித யூதாததேயுபங்கு மக்களினதும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்து இறையாசிகளை தினமும் வேண்டி நிற்கின்றோம்.

**க.பேணாட் ஓய்வு நிலை பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி வவுனியா**



பசுமையான நினைவுகளின் பின்புலத்தில் சாதனையாளர் அதிபர்.என்ற உயர்வின் சிறப்புடைய அதிபர் ஒருவராக ஆயர் அவர்களைக் கண்டேன்.

என் கல்லூரிப் பராயத்தில் 1979 ஆண்டு உயர்தரம் வர்தகப் பிரிவில் யாழ் புனித கென்றியரசர் கல்லூரியில் கால் பதித்தவேளையில் அதிபராகப் பணியாற்றியவர் மதிப்பான ஆயர் அவர்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்றமுப்பெரும் விதிகளுக்குள் பக்தி ஒழுக்கம் கல்வி ஆழுமை விருத்தி என்பவற்றை நோக்கி மாணவர்களை நெறிப்படுத்திய சிறந்த அதிபர். தலைமைத்துவம் முகாமைத்துவ திறன் தற்துணிவு என்பவற்றால் வினைத்திறன் மிக்க செயல் வீரராகத் திகழ்ந்தவர் எம் அதிபராகத் திகழ்ந்த ஆயர் அவர்கள்.

இத்தகைய சிறப்புத்தன்மைகளை தன்னகத்தே தங்கிய அதிபர் அவர்கள் எமது குடும்ப நண்பராகக் கிடைத்தமை நாம் செய்த பெரும் பாக்கியமே. ஆயரின் அன்பினால் கட்டுண்டு அவருக்காக எதையுமே தியாகம் செய்யு அளவிற்கு அன்பு கொண்டவராய் விளங்கிய எனது கணவர் நகை ச்சுவையாக கூறிவரும் வார்த்தை பாதரின் இந்த கறுப்புப்பட்டி விரைவில் நிறம் மாறவேண்டும் என்பதாகும்.இவர் எமது குடும்ப மேய்ப்பனாக விளங்கினார் என்றே கூறலாம்.

அதிபர் என்ற நிலையைக் கடந்து நல்ல நண்பர் வழிகாட்டி ஆலோசனையாளர் என்ற உறவுகளுக்கள் அவரைச் சந்தித்த எமக்கு யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் என்ற நிலையில் இருந்து அவர் யாழ் மறைமாவட்ட ஆயராக தெரிவு செய்யப்பட்டமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

யாழ் மறைமாவட்ட பணிகளுடன் கூடவே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காகவும் அமைதி சுபீட்சம் நீதி என்பவற்றுடன் இணைந்த சக வாழ்விற்காகவும் ஒலிக்கும் குரலாகத் திகழ இறைவனை பிராத்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க வாழ்க வாழ்கவே

**திரு.திருமதி ஜடா ஜெகன் சிவராதா புடவையக உரிமையாளர்**



எம் அன்புக்குரிய ஆயர் ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் என்ற வகையில் வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன். இளவாலை மண்ணிலே சமகாலங்களில் பல்வேறு சவால்களின் மத்தியில் பணியாற்றிய அனுபவங்களை இன்று எண்ணிப் பார்க்கின்றேன். எமது சகோதர பாடசாலையாம் யாழ் புனித கென்றியரசர் கல்லூரியின் அதிபராக - கொத்தணி அதிபராக - சற்குருவாக -சிறந்த ஆசானாக அறிவாளனாக - பண்பாளனாக - இளவாலை மண்ணையும் மக்களையும் சிறப்பாக மாணவ ஆசிரிய சமூகத்தையும் அன்பு செய்து பணியில் தன்னை அர்ப்பணித்த பெருந்தகையாக இவரை நான் பார்க்கின்றேன். கல்லூரிப்பணிகளுடன் அயல் கிராமங்களின் முன்னேற்றத்திலும் மறைமாவட்ட வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு உழைத்தவர் இவர்.எமது பணிக்காலம் போர்கள், இடப் பெயர்வுகளுடன் பின்னிப்பிணைந்த காலம். ஒரு வகை இரட்டை ஆட்சியில் கல்வி நிர்வாகம் முன்னெடுக்கப்பட்ட காலம். அன்றைய இக்கட்டான நிலைகளுக்கு முகம் கொடுத்து, நம் ஆயர் அவர்கள் ஞானத்துடனும், விவேகத்துடனும், உறுதியுடனும் எளிமையாக செயற்பட்டதை அனைவரும் அறிவோம். இளவாலை மண்ணிலும், இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலும் எம் மகாவித்தியாலய நலன்களில் கரிசனையோடு செயற்பட்டதை நினைக்கின்றேன். தற்காலிக பாடசாலை நடாத்த ஆற்றுப்படுத்தியமையை நம் வித்தியாலய குடும்பம் என்றுமே மறக்க முடியாது. கல்விப்புலத்தில் தனக்கே உரித்தான தகைமைகளும், பண்புகளும் வாய்க்கப்பெற்ற ஒருவர் நம் ஆயராகத் தேர்ந்து கொள்ளப்பட்டமை குறித்து பெருமைப்படுகின்றோம்.வரலாற்றின் இறைவன் என்றும் உங்களோடு வழி நடக்க வரம் பல வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி பொனவெஞ்சர் இம்மானுவேல் தி.கு.**



நான் வலிகாம வலயத்தின் கல்வி ப்பணிப்பாளராக இருந்த போது இவர் புனித கென்றி அரசர் கல்லூரியின் முதல்வராக இருந்து எல்லோரது கவனத் தையும் ஈர்த்துக் கொண்டார். அவரது சிறந்த நிர்வாக திறமையினால் மாணவர்களது கல்வி அறிவு மற்றும் ஒழுக்கம் உயர்வு நிலையடைந்தது மட்டுமல்லாமல் உதை பந்தாட்டம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் புனித கென்றிஅரசர்கல்லூரி சிறந்துவிளங்கியது. இவை அதிபரின் சிறந்த ஆளுமைப் பண்புகளான தலைமைத்துவம் விடாமுயற்சி மற்றும் வழிகாட்டல் போன்றவற்றின் வெளிப்பாடு என்றால் மிகையாகாது. புனித கென்றி அரசர் கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் சவால் மிக்க சூழ்நிலைகளில் பொருத்தமான தீர்மானங்களை மேற் கொண்டு கல்லூரியை தற்துணிவுடன் மீண்டும் அதன் சொந்த கட்டிடத்திற்கு நகர்த்தியமை எனைய கல்லூரி சமுகங்களிற்கு முன்னுதாரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

புனித கென்றி அரசர் கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் இளவாலை கத்தோலிக்க மறைக்கோட்டத்தில் கல்வி நடவடிக்கைகளிற்குப் பொறுப்பாகவும் இவர் செயற்பட்டு வந்தார். அச்சமயம் வலிகாம வலயபாடசாலைகளில் அதிபர் நியமனம் மற்றும் ஆசிரியர் இடமாற்றங்களில் சமயம் தொடர்பாக எழுகின்ற விடயங்களை கையாண்டதில் இவரது பங்களிப்பு காத்திரமானது.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஆன்மீக தலைவராக விளங்கும் ஆயர் அவர்களது தலைமைத்துவம் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட யாழ் திருச்சபைக்கும், கல்விப்புலத்திற்கும், அல்லல்படும் மக்களிற்கும் ஒரு விடிவெள்ளியாக விளங்க வாழ்த்தி நிற்கின்றேன்.

**வி.இராசையா அரியாலை ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர். யாழ்ப்பாணம் வடமாகாணம்**



மேதகு ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின்ஆயராகத் திருநிலைப்படுத்தப்படுவதையொட்டி மகிழ்ச்சியடைகின்றேன். இவர் உதவிப் பங்குத் தந்தையாகத் தனது இறைபணியை ஆரம்பித்து. பின் படிப்படியாகப் பணி நிலை வளர்ச்சி கண்டு, 40 வருட இறைப்பணியின் பின் இன்று ஆயராகப் பதவி ஏற்கின்றார். அடிகளார் தனது இறைஞானம், அறிவு, ஆற்றல், கடின உழைப்பு வழியாக நொந்து போயிருக்கும் தமிழ் மக்களுக்கு விடிவெள்ளியாக விளங்குவார். ஆயரிர் காலத்தில் ஆயரில்லத்தின் மக்கள் சேவையின் பங்களிப்பு மேலும் வலுப்படவேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பு. சர்வமதப் புரிந்துணர்வு கொண்ட அடிகளார் சமயங்களிடையே நல்லுறவை இணைந்து செயற்படும் போக்கையும் முன்னெடுக்கவேண்டும்.

பல்துறை விற்பன்னரான பேராயர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆயர்பணி சிறக்கவும் அதன்வழி மக்கள் வாழ்வில் புத்தொளி பிறக்கவும் இறையருள் கிட்டுமாக.

பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை வாழ்நாள் பேராசிரியர் **Phd- Durham**



இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் . இருபத்தாறு ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றி ஆயராகத் திருநிலைப்படுத்தப்படும் மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் என்றவகையில் கல்லூரிச்சமூகம் சார்பாகஉளமாரவாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். தலைவனாக எமது கல்லூரியை இவர் தாங்கி நின்ற காலப்பகுதியில் தலைமைத்துவப் பண்புமிக்க ஆளுமையுள்ள மாணவர்களை உருவாக்குவதில் ஆர்வத்துடனுழைத்தார். நற்பண்புகளுடன் மாணவர்களுக்கு ஞான அறிவையும் வளர்த்தார். மறையறிவு புகட்டும் அருள்தந்தையாக. கல்வியறிவூட்டும் நல்ல ஆசானாக, உயர் பண்புகளை ஆண்டு வழிப்படுத்தும் சிறந்த அதிபராகப். பல்வேறுபணி நிலைகளைப் பங்கேற்று ஆற்றிய அரும்பணி நல்ல ஆயனாக இவரைப் புடமிடும். தங்களின் பயணத்தில் இப்போதுபோல் எப்போதும் கென்றீசியன் சமூகம் கூடவரும் என்பதையும் மகிழ்வுடன் கூறிகிறேன். **அருள்தந்தை பே.அ.இ.சேசுதாஸ் அதிபர்-புனிதஹென்றியரசர் கல்லூரி,**



It is my great joy and privilege to extend the heartfelt congratulations to the Rt. Rev. Msgr. Justin B Gnanapragasam on behalf of Henricians United Kingdom on the occasion of his episcopal ordination. The new Bishop has in abundance the ability and qualities needed to lead the Diocese of Jaffna. As well as being an excellent communicator, his long *experience in education, parish ministry and diocesan administration have shown his unique ability to lead people and organisations and achieve success* for them. All this has prepared him well forthis office.All Henricians assure the new Bishop of our prayerful support as he begins his new episcopal ministry at Jaffna Diocese. May the good Lord grant the new Bishop all the gifts and graces he will need to carry out his apostolic office.

**Henry Camillus, President**
**Henricians United Kingdom**
**London 28 November 2015**



ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணிக்காலத்தின் கிட்டத்தட்ட அரைவாசிக் காலம் அவருடன் வாழ்ந்து அவருக்கு பணிபுரிந்து - இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு - அவரது கையால் செதுக்கப்பட்டவன் நான். பயனற்ற, யாவராலும் கைவிடப்பட்ட, பொருட்களையோ, ஜீவராசிகளையோ ஓரங்கட்டி விடாது அப்பொருளையோ,ஜீவராசிகளையோ அதன் சிறப்பு மிளிருமளவிற்கு வெளிக்கொணர்ந்து, உருப்பெறச் செய்யும் இயல்பு கொண்டவர். நொந்த உள்ளங்களைத் தேற்றி சமூகத்திற்கேற்ற ஒரு பயணாளியாக்கும் திறமை கொண்டவர். என்னையும் என்னைப் போன்ற பலரையும் உருவாக்கியவர் அவர். தட்டிக் கொடுப்பவர், அன்பு கொண்டவர், அதேவேளை கண்டிப்பானவர். இவரது கண்டிப்பு கலந்த அரவணைப்பு புரிந்து வாழ்பவன் வாழ்வில் முன்னேற்றமானவனாக, சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியவனாக, மதிக்கக் கூடியவனாக திகழ முடியும்.

**ஏ.ஆர்.சு.விஜயகுமார் முன்னாள் ஹென்றியரசர் கல்லூரி ஆசிரியர், இந்நாள் பகுதித் தலைவர், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.**



மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட முதல் நன்கு அறிவேன். அவரோடு பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் கூடைப்பந்து விளையாடிய அந்த இனிமையான நாட்களை என்றும் மறக்க முடியாது. அவர் அன்று முதல் இன்றுவரை எனதும் எனது குடும்பத்தினதும் நெருங்கிய நண்பராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகிறார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சில் அக்கறை கொண்ட அவர் இங்கிலாந்தில் உள்ள ஐயில் ஒவ் வைற் தீவில் உள்ள எனது கொட்டேல் மரியாவில் நடந்த ஒன்று கூடலின்போது பத்திரிசியார் கல்லூரிக்கென நிலையான நிதி ஒன்றை உருவாக்குவது பற்றிய தனது நீண்டகாலக் கனவை முன்வைத்தார். தூர நோக்குடன் காலத்தின் தேவைகளை கண்டுணர்ந்து தேவையான முடிவுகளைத் தேவையான நோத்தில் துணிவுடன் எடுத்து சிறந்த பணி ஆற்ற வாழ்த்துக்கிறோம்.

**அருளானந்தம் ஜெயராணா - புஸ்பம் ஜெயராஜா புனித பத்திரி சியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் இங்கிலாந்து**

பிறப்பு: 13 மே ...
தந்தை பெயர்: ...
தாய் பெயர்: ...
ஆரம்பக் கல்வி ...
. யாழ்பத்திரிசி...
1966-1969கண்டி...
1972-1974 பாப்பி...
ாரி - இந்தியா ...
குருத்துவ அரு...
24 ஏப்றில் 1974 ...
க்கல அன்னை ...
பணித்தளங்கள் ...
1974-1974: உ...
கிளிநொச்சி - ...
1975-1976:உத...
:உருத்திரபுரம் ...
உதவி இயக்கு...
நுட்பநிறுவனம் ...
1976-1979 :உ...
இளவாலை
1980-1985 :ப...
சன்கூடல்
1979-1980: முத...
-இங்கிலாந்து
1982-1984:விரி...
பல்கலைக்கழக...
கத்துறை
1981-1986: தலை...
கிறிஸ்தவ சம...
ஒன்றிப்பு ஆலை...
இளவாலை 12 ...
கொத்தணி அதி...
1991 : இலங்கை...
வகுப்புதரம்-1
1992 -2002 :தலை...
ட்ட கல்விஆலை...
1992 2006 : ...
சவேரியார் குரு...
1994 -2002 : இ...
ட்டமுதல்வர்
1994 -2002 : ...
ஆயரின் பேரவை...
1976-1989 : உ...
புனித கென்றி ...
1989 - 2002: ...
புனித கென்றி ...
1986 - 1988 : ...
இங்கிலாந்து
2002 - 2007: ...
த்திரிசியார் கல்...
1974 - 1999 - ...
1998 - 2014ய...
பேரவைஉறுப்பி...
2003 தலைவர் ...
மாணவர் ஒழுங்...
2002 - யாழ் ...
நிதிமற்றும் முத...
மதிப்பீட்டாளர்- ...
2003 கோப்பாய் ...
ரியின் ஆலோச...
2007 - 2015ய...
ஆயரின் பேரவை...
2007 - 2015 ...
குருமுதல்வர்-க...
அதிபர்- 2015யா...

மண்ணின் பாது...
புனித அன்ன...
மக்களோடும் ...
ஹென்றியரசர் ...
த்துடனும் இ...
புதிய ஆயரை ...
துகின்றேன்.இள...
மண்ணுடன் இ...
கல்வி நிர்வாக...
களை எல்லாம் ...
யாழ்த்திருச்சபை...
த்திலே ,அதிப...
பர்.பங்குத்தந்...
முதல்வர்,யாழ் ...
முதல்வர் என ...
ளில் அர்ப்பணி...
**திருமதி நா. ச...**
**அதிபர் யாழ்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மாவட்ட புதிய ஆயர்
# ...் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு
## ... - 28 நவம்பர் 2015






**யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் - கலாநிதி பி.ஜே ஜெபரட்ணம் அடிகளார்**



யாழ் மறைமாவட்டம் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த புதிய ஆயர் இப்போது தரப்பட்டுள்ளார். அறிவிலும், அனுபவத்திலும், ஆன்மீகத்திலும், நிர்வாகத் திறமையிலும் சிறந்தவரான ஒருவர்தான் ஆயராக நியமிக்கப்படவேண்டுமென்றால் அத்தனை அம்சங்களையும் கொண்டவராக விளங்குகின்ற மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைதான் மிகவும் பொருத்தமானவர். 40 ஆண்டுகளுக்கு மேலாக எமது மறைமாவட்டத்தின் குருவாகப் பல்வேறு நிலைகளில் அரும்பணியாற்றியஎமது புதிய ஆயர் எமது மறைமாவட்டத்தின்மீது கொண்டுள்ள அளவு கடந்த அன்பும், பாசமும், அக்கறையும் எல்லாரும் மிகத்தெளிவாக கண்டறிந்த விடயமாகும். மறைமாவட்டப் பணிகள், பங்குப்பணிகள், கல்விப்பணிகள், பொதுப்பணிகள் என அவர் ஆற்றாத பணிகளே கிடையாது என்பதை அவருடைய பணிவரலாற்றில் பார்க்கின்றபோது அவருடைய தகைமை வெளிப்படுகின்றது. நிறைவான ஆளுமையும், தெளிவான சிந்தனையும், நியாயமான கண்டிப்பும், ஒருவரின் தேவையை, பிரச்சனையை மிகச் சரியாகப் புரிந்து கொண்டவராக கரிசனையோடு அணுகும் பண்பும் புதிய ஆயரில் இரண்டறக் கலந்த பண்புகளாக இருப்பது எமது மறைமாவட்டத்துக்குக் கிடைத்த பாக்கியமென்றே கூறவேண்டும். இக்காலம் அவருக்கு மறைமாவட்டத்தில் பணியாற்றும் ஒவ்வொரு குருவும் எப்படிபட்டவர், மறைமாவட்டப் பங்குகள் எந்நிலையிலுள்ளன, மறைமாவட்ட மக்கள் ஓர் ஆயரிடம் என்னத்தை எதிர்பார்க்கிறார்கள், மறைமாவட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளென்ன போன்ற பல முக்கியமான கேள்விகளுக்கான பதிலைக் கொடுத்தகாலமாக அமைந்திருக்கின்றதனால் அவர் தொடர இருக்கின்ற ஆயர் பணியில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் விடை காண,. தீர்வுகாண முயற்சிப்பார் என்பது தெளிவானதாகும்.

**பயணப் பாதைகள்**

பிறப்பு: 13 மே 1948 - ஊர்காவற்துறை
தந்தை பெயர்: அ.ஞானப்பிரகாசம்
தாய் பெயர்: எமிலி தங்கமலர்
ஆரம்பக் கல்வி: புனித அந்தோனியார் . யாழ்பத்திரிசியார் கல்லூரி
1966-1969கண்டி குருத்துவக்கல்லூரி
1972-1974 பாப்பிறைகுருத்துவக் கல்லூரி - இந்தியா
குருத்துவ அருட்பொழிவு:
24 ஏப்றில் 1974 : யாழ் புனித அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயம்
பணித்தளங்கள் :
1974-1974: உதவிப்பங்குத் தந்தை: கிளிநொச்சி - வலைப்பாடு
1975-1976:உதவிப்பங்குத் தந்தை :உருத்திரபுரம்
உதவி இயக்குனர்: லோங் தொழில் நுட்பநிறுவனம்
1976-1979 :உதவிப்பங்குத் தந்தை: இளவாலை
1980-1985 :பங்குத் தந்தை:மாரீசன்கூடல்
1979-1980: முதுகலைமாணிப் பட்டம் -இங்கிலாந்து
1982-1984:விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை
1981-1986: தலைவர் யாழ்மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழ 1990 - 1994: இளவாலை 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபர்
1991 : இலங்கை அதிபர் சேவையின் வகுப்புதரம்-1
1992 -2002 :தலைவர் யாழ் மறைமாவட்ட கல்விஆணைக்குழ
1992 2006 : விரிவுரையாளர் புனித சவேரியார் குருத்தவக் கல்லூரி
1994 -2002 : இளவாலை மறைக்கோட்டமுதல்வர்
1994 -2002 : யாழ் மறைமாவட்ட-ஆயரின் பேரவை அங்கத்தவர்
1976-1989 : உப அதிபர் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி
1989 - 2002: அதிபர் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி
1986 - 1988 : கலாநிதிப் பட்டம் - இங்கிலாந்து
2002 - 2007: அதிபர் யாழ் புனிதபத்திரிசியார் கல்லூரி
1974 - 1999 - குருத்துவவெள்ளிவிழா
1998 - 2014யாழ் பல்கலைக்கழக பேரவைஉறுப்பினர்
2003 தலைவர் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒழுங்காற்று சபை.
2002 - யாழ் பல்கலைக் கழககலாநிதிமற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளர்- பரிசோதனையாளர்.
2003 கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினர்
2007 - 2015யாழ் மறை மாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவர்
2007 - 2015 யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்-கத்தோலிக்க அச்சக அதிபர்- 2015யாழ் மறைமாவட்ட ஆயர்



"THE ALMIGHTY HAS DONE GREAT THINGS FOR ME FOR HE HAS LOOKED UPON HIS LOWLY SERVANT"- WE THE BROTHERS AND SISTERS OF MSGR. JUSTIN BERNARD GNANAPRAGASAM ALSO REJOICE WITH MOTHER MARY. BUT THIS REJOICING HAS ITS CONSQUENCES. THE UNBEARABLE SUFFERING AT THE FOOT OF THE CROSS WHICH MOTHER MARY HAD TO FACE IN ACCEPTING THE ANGE'S MESSAGE.WE ALSO SHOULD BE AWRE OF THIS; TO HAVE A FIRM BELIEVE AS MARY DID AND BE CONFIDENT THAT GOD IS AT WORK IN OUR BROTHER'S LIFE.OUR PARENTS WERE MARRIED IN 1939 AND SOON AFTER THE SECOND THE WORLD WAR RAVAGED THE WHOLE WORLD. EVENTHOUGH WE DID NOT EXPERIENCE WAR SITUATION WE HAD TO GO THROUGH A DIFFICULT PERIOD BUT WITH THE END OF WAR IN 1945 PROSPERITY DAWNED. IN THE YEAR 1948 THE PROCLAIMING OF THE INDEPENDENCE BROUGHT ABOUT MUCH JOY TO THE PEOPLE. THE SINGING OF FREEDOM SONGS OF POET PARATHI WAS IN EVERY ONE LIPS. BUT OUR GREATEST JOY WAS 13TH OF MAY 1948 WHEN OUT BROTHER JUSTIN CAME INTO THE WORLD. HE WAS BIG IN EVERY WAY. MUMMY'S WOMB WAS QUITE LARGE AND THAT CAUSED GREAT CONCERN WHETHER IT WOULD BE TWINS, BUT HE CAME OUT INTO THE WORLD WITH TRUMPET BLAST. SO MUCH SO THAT HIS GRAND MOTHER AS SOON AS SHE SAW HIM NAMED THE BABY BERNARD AFTER HER OWN BROTHER WHO WE CAME TO UNDERSTAND WAS BIG IN STATURE. FROM HIS INFANCY HE WAS THE BOUNCING BABY BUT HEAVY. HIS BOISTEOUS CRYING WAS WELL KNOWN TO OUR NEIGHBOURS; IT WAS TO ANNOUNCE THAT JUSTIN IS AWAKE AND NEEDS EERY ONE'S ATTENTION. AT THE AGE OF TEN HE MADE KNOWN TO ALL THAT HE WANTED TO JOIN THE SEMINARY. OUR PARENTS ON 26TH JANUARY 1959 WITH A HEAVY HEART LED HIM TO THE THEN BISHOP OF JAFFNA HIS LORDSHIP DR EMILIANUS PILLAI,OMI WHO GLADLY ADMITTED HIM TO THE MARTINS MINOR SEMINARY. FROM THEN ON HIS LIFE WAS WITH THE LORD. WE SEE HIM OCCASIONALY AND ON APRIL 24TH 1974 HE WAS ORDAINED A PRIEST BY THE THEN BISHOP OF JAFFNA HIS LORDSHIP DEGOPILLAI. WITH THIS WE HAD TO PAINFULLY SAY BYE AS HE IS NOW WITH THE LORD AND THE PEOPLE. WE HAVE ALSO LOST ANOTHER BROTHER, WHOM WE HAVE NOT KNOWN AND HENCE NOT IN OUR MINDS. HE WAS CONCEIVED DURING THE TIME JUSTIN WAS EXPRESSING HIS DESIRE TO JOIN THE SEMINARY. MUMMY NAMED HIM GNANAKUMAR AFTER PAPA. HE WAS SEVENTH IN THE FAMILY AND WAS THE CAUSE OF OUR JOY FOR FOURTEEN MONTHS. GOD GAVE OUR PARENTS FIVE SONS AND THREE DAUGHTERS BUT HE CLAIMED ONE SON AS HIS OWN ANOTHER SON HE ANOINTED. THE DEATH OF GNANAKUMAR BROUGHT TEARS TO US. IT WAS THE ONE AND ONLY OCCASION I SAW MY FATHER CRY. BUT PROSPERITY FOLLOWED.WE HAVE LIVED WITH THE PSALMS 30:5- "TEARS MAY FLOW IN THE NIGHT, BUT JOY COMES IN THE MORNING"SO MUCH SOTHE TEARS OF OUR PARENTS THAT HAS BROUGHT ABOUT JUSTIN'S JOY OF THIS EPISCOPAL ORDINATION WE THANK AND PRAISE GOD FOR THIS CHOICEST BLESSING HE HAS FAVOURED US WITH.

MESSAGE FROM THE NEW BISHOP'S ELDER BROTHER
GNANARAGASAM ROSSI XAVIER KULENDRAN



புதிய ஆயர் ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு யாழ் பல்கலைக்கழகச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

ஆயர் பணியானது மிகவும்பொறுப்பு வாய்ந்த பலசவால்கள் நிறைந்த பணி யாகும். புதியஆயர் தமிழ் மக்கள் வாழ்வில் பல பிரச்சினைகள் நிறை ந்த வரலாற்றுப் பின்னணியில் தமது பொறுப்பை ஏற்றாலும் தமது பல்பரிமாண ஆளுமைத் திறமையினால் சிறந்த நிலையில் தமது தலைமைத்துவப்பணியை மேற்கொள்வார் என்பது எமது உறுதியான நம்பிக்கை ஆகும். இவர் கல்வித்துறையில் இருந்த ஈடுபாடுகாரணமாக கல்வித்துறைக்கு பலபங்களிப்பை வழங்கினார். இலங்கை,இங்கிலாந்து,இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள கற்று பலஉயர் பட்டத்தகமைகளைப் பெற்ற எமது ஆயர் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் மதிநுட்பத்துடன் அணுகி உரிய தீர்வுகளை முன்வைக்கும் திறமையுடையவர்.பல்வேறு பங் குகளிலும் மற்றும் பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்களிலும் ஈடுபாடு கொண்டு மக்களுக்க சிறந்த சேவையாற்றி யுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் மூதவை உறுப்பி னராகவும் யாழ் பல்கலைக்கழகக் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத் துறையின் வருகைதரும் விரிவுரையாளராகவும் உள்வாரி,வெளிவாரிபரீட்சராகவும் முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரை மேற்பார்வையாளராகவும் மதிப்பீட்டு பரீட்சகராகவும் மாணவர் ஒழுக்காற்று குழுத்தலைவராகவும் சிறந்த முறையில் பலபங்களிப்புக்களைச் செய்துள்ளார். இந்நன்னாளில் யாழ்பல்கலைக்கழகம் புதிய ஆயரின் பணிகளை நினைவுகூருவதில் பேருவகை அடைகிறது. நீண்ட பல ஆண்டுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் சமய சமூகத் தலைவராக இவர்பணி சிறக்க வாழ்த்துகிறேன். **முதுநிலை பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்.**



"அன்பர் பணி செய்ய எனை விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும்பராபரமே." மனிதரை மாண்புடையவராக மாற்றும் பான்மை கொண்டவை மதங்கள். மதம் என்ற போர்வை மதவெறி கொண்டு அலைவதற்கல்ல. மாற்றாக அலையும் மனதை ஒரு கட்டுக் கோப்புடன் அமைதிகாத்து சமாதானம் நிலை பெற மதம் பெருந்துணை செய்கிறது. உலக மதங்களில் கிறிஸ்துவ நெறி பல கோடி மக்களை தன் நல்நெறி மூலம் பண்புடையவர்களாக ஆக்கி வருகிறது. பண்புடையார் பட்டுண்டு உலகம் எனும் வள்ளுவர் வாக்குக்கி ணங்க பண்புடையவர்களை உருவாக்குவதன் மூலம் நல்ல சமூகத்தை, நல்ல நாட்டை, நல்ல உலகத்தை உருவாக்க முடியும். அதற்கான முயற்சிகளில் மக்களை ஆற்றுப்படுத்துபவர்கள் சமய குருமார்கள். சமயகுருமார்களின் தலைவர் மக்கள் தலைவராக உயர்ந்து நிற்கின்றார். இன்றைய இலங்கை - ஈழத்துப் பகைப்புலத்தில் சமூக அரசியல் தளத்திலும் அவர்கள் பங்கும், பணியும் சொல்லிட முடியாதவை அளவிடற்கரியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் வருகைதரு விரிவுரையாளராகவும் முதுதத்துவமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வேட்டு மதிப்பீட்டாளராகவும் தம் பணி புரிந்து நின்றார்.சமூகத்துக்கான கல்விப்பணியோடு தமது முதற் கடமையான ஆத்மிகப்பணியிலும் பணியாற்றி யிருந்தார். பல்வேறுபட்ட தளங்களிலும் பல தடங்களிலும் தம் பணி புரிந்து பலதரப்பட்ட மக்களுக்கான சேவைகளைச் செய்ததன் மூலம் பல்வேறுபட்ட ஆளுமை நிறைந்த தலைவராக மேலெழுந்து மீண்டும் ஆத்மீக தளத்தில் நின்று மக்கள் சேவையை முன்னெடுக்க இறைஅருள் பாலித்துள்ளார். அவரை வாழ்த்தி வரவேற்போமாக.**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், சிரேஸ்ரவிரிவுரையாளர், ஆங்கில மொழி கற்பித்தல்-இணைப்பாளர் மொழி பெயர்ப்புத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.**



மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பல்பரிமாண ஆளுமை: 1.**வீழ்ந்தோரைத் தாங்கும் தோள் கொண்டவர்:** எவராது நொ ந்திருந்தால் தேடிச் சென்று அவர்களை மீட்கும் நற்பண்டு கொண்டவர். குரு எவருக்காவது ஏதாவது துன்ப அனுபவம் என்றால் அவர் நேரம் பார்க்காது உடனே பயணம் செய்து வேண்டிய உதவிகளை வழங்கத் தயங்க மாட்டார்.2.**சிறந்த நிர்வாகத் திறனாளர்:** எதையும் சிறந்ததாக இயங்கவைக்கும் விருப்பு நிறைந்தவர். யாருக்கு என்னென்ன திறமை உண்டு என்பதை அடையாளம் கண்டு அவரை அத்துறையில் பணியாற்ற நியமிப்பது இவரது நிர்வாத்திறனின் தனித்துவம். இதுவே இவரது நிர்வாகத்தின் முது கெலும்பாகவும் விளங்கும்.3.**கருத்தாழம் மிக்க மறையுரையாளர்:** இவரது மறையுரைகள் சுருக்கமானதாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் விளங்கும். இவரது வாசிப்புப் பழக்கத்தின் விளைவையும் அதில் காணமுடியும். அத்தோடு நடைமுறை வாழ்வுக்குப் பயன்படும் கருத்துகளையே தருவார். உரையாக இருந்தாலும் சரி மறையுரையாக இருந்தாலும் சரி இத்தன்மைகளை அவற்றில் கான முடியும்.4.**சிறந்த ஆலோசகர்:** பல்வேறு வாழ்க்கை நிலைகளைக் கொண்டவர்கள் இவரிடம் ஆலோசனை பெற வரும்போது யதார்த்தமாகச் சிந்தித்துக்கடைப்பிடிக்கக்கூடிய நடைமுறைரீதியான தீர்வை முன்வைப்பது இவரது பட்டறிவின் வெளிப்பாடு.5.**தேர்ச்சி நாடுநர்:** இவர்சிறந்த நூல்கள், சிறந்த திரைப்படங்கள் என்பவற்றை வாங்கிப் பயன்படுத்தித் தன் அறிவை விசாலப்படுத்திக்கொள்ளுவார். இவர் தொடர்ந்து தேடலில் ஈடுபடும் மனப்பாங்கைக்கொண்டுள்ளார் 6.**சிறந்த கல்வியியலாளர்:** கல்வித் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றுச்சிறந்த அதிபராக விளங்கியதோடு, யாழ் பல்கலைக்கழகப் பேரவையில் பத்து வருடங்களாகச் சிறந்த பணிபரிந்தவர். **அருள்திரு இராஜேந்திரம் ஸ்ரலின், யாழ் பல்கலைகழக ஆன்மீகவழிகாட்டி**



எமது மக்களின் பிரச்சினைகள் தீர வேண்டுமாயின் இளைஞர்கள் தொழில் வாய்ப்புப் பெறவேண்டும். இது ஆண்டகை கூறிய முதற் செய்திகளில் ஒன்று என்மனைதத் தொட்ட ஒன்று ஏனென்றால் இந்த எண்ணம் இவரி டம் இருந்ததை 35 வருடங்களுக்கு முன்பே இவர்வாயினால் கேட்டவன். தனது குரு வாழ்வில் பெரும்பகுதியை எமது கிராமங்களில் ஆற்றியிருந்தார். படிப்பை இடையில் நிறுத்திய, படித்தும் பல்கலைக்கழகம் புகமுடியாத, இளம் பெண் பிள்ளைகள் வாழ்கையைமுன்னேற்றவேண்டு மென்று, எமது இளவாலைக் கிராமத்திலே ஒரு வர்த்தகக்கல்லூரியை உருவாக்கி திறம்பட நடாத்தியவர். அந்த நிர்வாக சபையில் செயலாளராக நான் பணியாற்றிய போது அவருடை நிர்வாகத்திறமையை, அவரது ஆளுமையை நேரில் கண்டவன். இந்துக்கள் கூட இவரை பெரிதும் மதித்தனர்.பங்குகளில் நிறபடும் பிரச்சினைகளை ஆண்டகை அவர்கள் தமது மதிநுட்பத்தினால், தீர்த்து சமாதானம் ஏற்படுத்துவதில் வல்லவர். முழு இளவாலைக் கிராமமுமே பெயருக்கேற்ப அவரது "ஞானம்" மந்தைகளாகிய எம்மேல் என்றும் "பிரகாசிக்க" நம்பிக்கையோடு வாழ்த்துவோம். [illegible]



யான் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது அண்டகை நேரில் வந்து என்னை வாழ்த்தினார். ஆண்டகை யாழ். பல்கலைக்கழகப் பேரவையிலும் உறுப்பினராக விளங்கியவர். மிக இக்கட்டான காலகட்டத்தில் எமது இனத்திற்குக் குரல் கொடுக்கும் சக்தியாக கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர்கள் இருந்து வந்துள்ளார்கள். அவ்வகையில் தங்களிடமுள்ள ஆளுமையை அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் நீதியின் பக்கமாக நின்று மக்களுக்கு நிம்மதியான வாழ்வைத் தேடிக் கொடுப்பதற்கு உதவுவீர்கள் என்பது எனது நம்பிக்கை.

"இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டாரை பெருமை பிறங்கி ற்று உலகு" என்ற வள்ளுவரின் அறம் பூண்டார் பெருமைக்குரியதாக தங்கள் பணி பிரகாசிக்க எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். **கலாநிதி.ஆறு.திருமுருகன்] தலைவர்-தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் - சிவபூமி அறக்கட்டளை, உபதலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்**



புதிய ஆயராக அருள் கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆயராக திருநிலை ப்படுத்தப் படுவதை இட்டு அவருடம் நீண்ட நாட்கள் குருத்துவ பயணத்தில் பயணித்தவன் என்றநிலை யில் நானும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆழ்ந்த கல்வியறிவும், ஆளுமை தோற்றமும், கொண்ட எமது ஆயர் எமது மறை மாவட்டத்திற்கு கிடைத்த பொக்கிசமாகும். பழமை வாய்ந்த எமது மறைமாவட்டத்தின் உயர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் இறைவனால் தக்க நேரத்தில் தேர்ந்து கொள்ளப்பட்ட கருவி இவரே. நான் வெளிநாட்டில் இருந்தபொழுது கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய ஆளுமைத்திறனை கண்ணோக்கி ஒரு காலத்தில் நீர் எமது மறைமாவட்டத்தின் ஆயராக வருவீர் என்று ஒரு சிறிய மோதிரம் ஒன்றை அன்பளிப்பு செய்தேன். அது இன்று நிறைவேறி இருக்கின்றது. எனது நீண்ட நாள் ஆசை நிறைவேறியிருக்கும் இத்தருணத்தில் இவர் தன்பணியை நிறைவாக செய்திடவும், எம்மக்களின் எல்லாவிதமான எழுச்சிக்கும் உழைத்திட இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.**அருள்பணி தோமஸ் மகேந்திரன் இராஜநாயகம்.**



மண்ணின் பாதுகாவலி புனித அன்னாளின் மக்களோடும் புனித ஹென்றியரசர் குடும்பத்துடனும் இணைந்து புதிய ஆயரை வாழ்த்துகின்றேன்.இளவாலை மண்ணுடன் இரண்டறக் கலந்தவர். கல்வி நிர்வாகத்தின் நெழிவு சுழிவுகளை எல்லாம் தேர்ந்து தெளிந்தவர். யாழ்த்திருச்சபையிலே, கல்விப்புலத்திலே ,அதிபர், கொத்தணி அதிபர்,பங்குத்தந்தை, மறைக்கோட்ட முதல்வர்,யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் என பல பதவி நிலைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் **திருமதி நா. சத்திய வாணி - பிரதி அதிபர் யாழ்கென்றியரசர் கல்லூரி**



புனித கென்றியரசர் கல்லூரியின் ஓய்வு நிலை ஆங்கில ஆசரி யராகிய நானும் புதிய ஆயரை வாழ்த்துகி றேன். இவர் கென்றி யரசர் கல்லூரி அதிபராகஇருந்த வேளையில் இங்கு ஓர் ஆங்கில ஆசிரியையாக பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை பெரும் பேறாகவே கருதுகிறேன். நான் புனைந்த "பெண்" என்ற ஆங்கிலக்கவிதைகளை இவர் வெளியீட்டு வைத்ததை நினைவுகூருகிறேன். இறை ஆசிக்காக நாம் இறைஞ்சுகின்றோம்.**செல்வி நாகநந்தினி சங்கரப்பிள்ளை ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை கென்றியரசர் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் பெண் பேசுகின்றேன்...

பெண், எனது பெயர், இனம் மற்றும் இன்ன பிற, இத்யாதிகள் எல்லாமே இது தான். எனக்கு பல கோடி முகங்கள். பல கோடிப் பெயர்கள். இயற்கையின் படைப்பில், விஞ்ஞான கண்டுபிடிப்பில் ஆண், பெண் எனப்பிறப்பது ஒன்றும் தனியொருவரின் சாதனையல்ல. பெண் ணாய்ப் பிறப்பது வரமா, சாபமா என்ற விதண்டா வாதங்களை விலக் கிவிட்டு நானும் சாதாரண மனிதப் பிறவியாகவே பார்க்கப் படவேண்டும். பெண் என்றால் சிசுக் கொலை, உடன் கட்டையேறுதல், கற்பழிப்பு, துன்புறுத் தல், வன்முறை என்ற வடிவங்களில் தான் நான் நூற்றாண்டுகளாய் எத் தனையோ நாட்டில், எத்தனையோ ஊரில் துன்புறுத் தப்பட்டேன். இன்றும் துன்புறுத்தப்படு கிறேன். எனது உடம்பை துன்புறுத்துபவர்கள் உள் ளத்தை சும்மா விடுவார்களா.

> நான் எழுதப் பட்ட சட்ட விதிகளால் பாது காக்கப் படுவதை விட எழுதப் படாத சமூக விதிகளால் அதிகம் ஆளப் படுகிறேன், அவஸ் தைப் படுகிறேன். காதலாகட்டும், கல் யாணமாகட் டும் பெண் எப்போதுமே வீட்டுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது ஓர் சமூகவிதி.

அதையெல்லாம் பட்டியலிட்டு மாளாது. என் உள்ளச்சுமைகள் என்னை அழுத்தினாலும் இதழ்களில் புன்னகையைக் கடை விரிக் கத்தவறுவதில்லை. எனது வலிகளை எனக்குள் புதைத்து நான் எப்போதுமே புன்னகைக்க வேண்டும். அப்படித்தான் எனக்கு எழுதப்படாத சமூக விதிகள், விழுமியங்கள் கற்றுக்கொடுத்திருக்கின்றன. எனது அறிவைப்பற்றியும் நான் கண்டிப்பாகசச் சொல்லியே ஆகவேண்டும். எனது கர்ப்பூர மூளை சட்டென்று பற்றிக்கொண்டால் பெண் என்று ஓரங்கட்டப்படுவேன். அதையே காற்றில் கரையவிட்டால் எல்லா சமூக சம்பி ரதாயங்களிலும் உள்வாங்கப்படுவேன். என்ன! எனக்குத்தான் வாயை, அறிவை மூடி வைக்க சிரமப்பட வேண்டியுள்ளது. மனிதன் மிருகங்கள் போல் வேட்டையாடித் திரிந்த காலங்களில் நான் ஆணுக்கு அடிமைச் சேவகம் செய்ததில்லை. எனது உடற்கூறா அல்லது சமூக கலாசார ஏற்பாடுகள், அடத்தங்கள் இவற்றில் எது எனது உரிமைகளை மட்டும் கால வெள்ளத்தில் மூழ் கடித்து எனது சடலத்தை மட்டும் கரையேற்றி யிருக்கிறது?

எனது தடைகளையெல்லாம் தாண்டி நூற் றாண்டு காலமாய் மெல்ல, மெல்ல கோழிக் குஞ்சாய் எனது ஓடுகளை உடைத்து வெளியேறி இப்போது நான் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன் என்று கொஞ் சம் சொல்கிறேன். ஆணின் உயிர்க்காற்று நான். அவனுக்காய் நான் மகளாய், தங்கையாய், அக்காவாய், தாயாய், தாரமாய், மற்றும் எல்லாமாகவும் ஆண்டாண்டு காலம் உடனிருக் கிறேன். வறுமைக்கோடு எனது வாழ்வில் ஓவியங்களை வரையவில்லை என்றால் எனது வாழ்விலும் பெரும் பாலும் சந்தோசங்கள் நிரம்பியிருக்கும்.

எனது பருவமும் ஹோர்மோன்களும் காந்தமாய் ஆண் என்ற இரும்பைக் கவர்ந்து அவனோடு காதலாகி, கல்யாணமாகி, அங்கேயும் நான் தான், பெண், அதிகம் காயப்படு கிறேன். ஆனாலும், விதிவிலக்காய் பெண் என்ற காந்தத்தை இரும்புகள் கவர்ந்திழுப்பதும் அதில் காந்தம் தன்னிலை மறப்பதும் பின்னர் கண்ணீர் வடிப்பதும் பெண்ணுக்கே உரிய பேதமைகள். நான் எழுதப்பட்ட சட்ட விதிகளால் பாதுகாக் கப்படுவதைவிட எழுதப்படாத சமூகவிதிகளால் அதிகம் ஆளப்படுகிறேன், அவஸ்தைப்படு கிறேன். காதலாகட்டும், கல்யாணமாகட்டும் பெண்எப்போதுமே வீட்டுக்குக் கட்டுப்பட வேண் டும் என்பது ஓர் சமூகவிதி. (தொடரும்)




## தீர்வுக்கு வழி உயிர்நீப்பதா?

சிந்திக்க வேண்டிய தருணம் இது. கல்லூரி மாணவன் ஒருவன் ரயில் தண்டவாளத் தில் படுத்திருந்து ரயில் ஏறி உயிரிழந்துள்ளார். சம்பவம் கேட்டு சோகமானது யாழ்ப் பாணம். தொடர்கின்றன ரயில் விபத்துக்கள். ஒரு ரயில் விபத்து நிகழ்ந்து அதன் கொடூரம் மனதில் இருந்து மறைய முன்னர் அடுத்த சம்பவம். ஆனாலும் மாணவன் தானாகவே உயிரை மாய்த்துக்கொண்டது கவலைக்குரியது. பாடசாலை மாணவன் சீருடையில் உடல் துண்டாகிக் கிடந்துள்ளான் கோண்டாவில் உப்புமடம் ரயில் கடவையில். சாவடைந்தவனுக்கு வயது 18. குறித்த மாணவனின் புத்தகப் பையில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வலியுறுத்தப்பட்டுள்ளது. இனி என்ன? இரங்கல் உரைகளோடு அவனது சாவு பற்றிய கதை முடிந்துவிடுகின்றது.

தீர்வுக்காக உயிரை மாய்த்தல் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதா? எக்காலத்திலும் இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம். குறித்த மாணவனின் இந்தச் செயல் கண்டு இளம் சமுதாயம் உணர்ச்சிவசப்பட்டுவிடக்கூடாது. தீர்வு வேணும் தான். அதற்காக போராடவேண்டும். உயிரை மாய்த்துக்கொள்வதைப் போராட்டத்தின் ஒரு பகுதி என்ன நினைத்துக்கொள்ள முடியவில்லை.

போராடிக் கிடைக்கும் வெற்றிக்கு தனி ருசி. அப்படி வெற்றி கிடைக்கும்போது அதனைக் கொண்டாட இவ்வாறு உயிரை மாய்த்தவர்கள் இருக்கமாட்டார்கள். கற்கும் வயதில் இந்தச் செயற்பாடு உணர்ச்சிவசத்தின் உச்சக்கட்டம் எனலாம்.

இளம் வயதினர் உணர்ச்சிவசப்படுவதில் சிந்திக்க வேண்டும். இந்த மாணவனின் இத்தகைய செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மாணவனின் பெற்றோர், உறவினர், நண்பர்கள் தான். ஒவ்வொரு பிள்ளைகளையும் பெற்று வளர்த்து ஆளாக்கப் பெற்றோர் எவ்வளவு கஷ்டப்படுகின்றனர். பிள்ளைகளுக்காக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் எப்போதாவது பெற்றோர் பற்றி சிந்தித்துள்ளீர்களா? அவர்களைப் பிற் காலத்தில் பார்ப்பது கூட பிள்ளைகளின் கடமைதான். அதற்குப் பிள்ளைகள் உயிருடன் இருக்க வேண்டும். இப்படி உணர்ச்சிவசப்பட்டு முடிவுகளை எடுத்தால் உங்கள் குடும்பத்தின் நிலை? இளைஞர் களின் அரசியல் நோக்கு வரவேற்கத்தக்கது. அதற்காக உயிரை மாய்த்துக்கொள்வதை அரசியல் என்றோ, போராட்டம் என்றோ கூற முடியாது. தீர்வுகள் எட்டப்பட வேண்டியவை கட்டாயம். அதற்காகப் போராட வேண்டும் என்பது எங்கள் தலை எழுத்தாக இருக்கின்றது. போராடியிருக்கலாம் இந்த மாணவனும். தன் கோரிக்கைகளைப் போராட்ட வடிவில் வெளிப்படுத்தியிருக்கலாம்.

இந்தச் சம்பவத்தோடு இளம் சமுதாயம் கொதித்தெழலாம். அதுதான் வேண்டாம். சிந்தித்துச் செயற்பட்டுச் சாதிக்க வேண்டிய காரியங்கள் பல உள்ளன. காலங்காலமாகப் போராடுகின்றோம். சாதித்தவை எல்லாம் போராடியதால் தான். இப்படி உயிரை மாய்த்துக்கொண்டால் யார் போராடுவது? எப்படிப் போராடுவது?

வாழ்வதற்கான போராட்டத்தில் மாணவன் தன் உயிரை மாய்த்துக்கொண்டமை கவலைக்குரிய விடயம் என்பதைக் கடந்த, சிந்திக்கத் தூண்டும் விடயமாகவே உள்ளது. அந்த மாணவன் அரசியல் கைதிகளுக்காக உயிரைக் கொடுத்தான் என்பது போக அவன் தன் குடும்பத்திற்காக என்ன செய்தான்? உயிரோடு இருந்திருந்தால் என்ன செய்திருப்பான்? அனைத்தும் யோசிக்கவேண்டியவை.

இளம் வயதினருக்குத் துடிப்பு அதிகம். போராட்ட குணம் அதிகம். இவை இயல்பு. அவற்றைச் சரியான விதத்தில் பிரயோகிக்க முடியும். அப்போதுதான் ஆக்கபூர்வமான தீர்வுகளைப் பெறமுடியும்.

போராடத்தான் வேண்டும். அது எங்கள் இனத்தின் சாபம். எங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடவேண்டும். நல்ல தீர்வொன்றுக்காகப் போராடவேண்டும். உயிரோடு இருந்து போராடவேண்டும். அதை விடுத்து உயிரை மாய்த்துக்கொள்வது சரி என்று இனியும் வாதாட முடியாது. காலத்தின் தேவையறிந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக இளம் சமுதாயத்தினர் இது தொடர் பில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். இழந்தது இழந் ததுதான். அது திரும்பி வராத, விலை மதிப்பற்ற ஒன்று. இனியாவது இழப் புக்களைக் குறைப்போம். இழந்தது போதும். இனி யும் இழப் புக்கள் வேண்டாம். இருக்கும் உயிர்கள் காத்திரமான முறையில் தங்கள் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேஸ் புக்கில் பிடித்தவை...

சுடுகாட்டில் மட்டுமல்ல,
முதியோர் இல்லத்திலும்
இருக்க வேண்டிய
வாக்கியம்...
இன்று நான் நாளை நீ




நேர்முகத் தேர்வில் கேட்கப்பட்ட
ஒரு வித்தியாசமான கேள்வி
"குறைவான பரப்பளவில் அதிகமாகப்
பெயிண்ட் அடிக்கும் இடம் எது".....?
பங்குபற்றிய இளைஞரின் உடனடிப்
பதில்
பெண்ணின் முகம்.....

நிலம் வாங்குறப்ப ரயில்வே ஸ்டேஷன் பஸ்
ஸ்டாண்டு, ஸ்கூல், காலேஜ், IT
கம்பெனி, எல்லாம் வருகுன்னு சொன்னிங்களே




ஆனா, "மழைத் தண்ணீர்" வருமுன்னு
சொல்லவே இல்லையே பா!

தான் அழகு என்பது மயிலுக்குத்
தெரியாது! தான் அழகில்லை
என்பது காக்கைக்குத் தெரியாது
பிரச்சினையெல்லாம்
நம்மகிட்டதான்!!!






# ஷங்கர் இயக்கத்தில் புதிய படங்கள்

இயக்குநர் ஷங்கர் தற்போது ரஜினியை வைத்து 'எந்திரன்' படத்தின் இரண்டாம் பாகத்தை எடுப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளார். இதற்கிடையில் ரஜினி 'கபாலி' படத்தில் நடிக்க ஒப்பந்தமானதால், அதற்குள் ஒரு படத்தை முடித்து விடலாம் என்று எண்ணி, விஜய் மற்றும் விக்ரமை வைத்து ஒரு புதிய படத்தை இயக்க முடிவு செய்துள்ளாராம். ஆனால், ஒரு சில காரணங்கள் அந்தப் படத்தை எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில், ரஜினி நடித்து வரும் 'கபாலி' படமும் இறுதிக்கட்டத்தை நெருங்கி வருவதால், அதற்குள் 'எந்திரன்' 2 ஆம் பாகத்தின் ஆரம்ப கட்டப் பணிகளை முடித்து விட வேண்டும் என்று எண்ணி, விஜயும் விக்ரமும் இணையும் படத்தை இயக்கும் திட்டத்தை கைவிட்டு விட்டாராம். எனினும், 'எந்திரன்' 2 ஆம் பாகம் முடிந்ததும், இவர்கள் இருவரையும் வைத்துப் புதிய படம் ஒன்றை ஷங்கர் இயக்குவார் என்று சினிமா வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அப்படி ஒரு படம் வந்தால், அது தமிழ் சினிமாவிலேயே வரலாறு படைக்கும் விதமாக அமையும் என்று கூறப்படுகிறது. ஷங்கர் ஏற்கெனவே விஜய்யை வைத்து 'நண்பன்' என்ற படத்தையும், விக்ரமை வைத்து 'அந்நியன்', 'ஐ' ஆகிய படங்களையும் இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



பிறர் உங்களைத் தவறாக கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலத் துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகள் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

கடந்த கால உழைப்பின் பயனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். வீடு, வாகனத்தில், புதிய மாற்றம் செய்வீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

பெற்றோரின் வார்த்தைக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும். பணியா ளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், தாய்வீட்டுப் பெருமையை நிலைநாட்டுவர்.

உற்சாகமுடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். நீண்ட நாள் பணக் கடனில் ஒரு பகுதி செலுத் துவீர்கள். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

நண்பரின் உதவியால் வாழ்வில் வளம் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

செயல்களில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம். பிள்ளைகளின் செயற்பாடு மனதை மகிழ்விக்கும்.

நல்லோரின் ஆலோசனையை ஏற்று செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத் தில், புதிய உத்தி மூலம் இலாபம் கூடும். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். குடும் பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

தாமதமான பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யால் இலாபம் உயரும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத் துவீர்கள். விருந்து உபசரிப்பில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப வளர்ச்சி கண்டு பெருமை கொள்வர். மாணவர்கள் திட்டமிட்டுப் படிதது சிறப்பர்.

பிறரிடம் குடும்ப கஷ்டத்தைப் பேச வேண் டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

வெகுநாள் திட்டமிட்ட செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | | 9 | |
| | 1 | 2 | | 4 | | 6 | | |
| 3 | | | 2 | | | | 5 | 4 |
| | 3 | | | 5 | 6 | | | |
| | 5 | | 3 | | 2 | | 4 | |
| | | | 4 | 8 | | | 3 | |
| 1 | 9 | | | | 4 | | | 8 |
| | | 3 | | 6 | | 4 | 7 | |
| | 4 | | | | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 | 4 | 7 |
| 7 | 5 | 8 | 1 | 3 | 4 | 6 | 9 | 2 |
| 4 | 7 | 3 | 2 | 8 | 5 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 6 | 7 | 1 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 2 | 7 | 5 |
| 1 | 3 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 |
| 9 | 8 | 2 | 3 | 4 | 6 | 7 | 5 | 1 |
| 6 | 4 | 7 | 8 | 5 | 1 | 9 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

குற்றச்சாட்டுகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உரிமைகள் தொடர்பில் ஆணைக்குழு கவலை வெளி யிட்டுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ள கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாத தடைச்சட்டத்தில் மற்றும் அவசரகால சட்டத் தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசி யல் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உடன டியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத மற்றும் நம்பகமான ஆதாரங் களை முன்வைக்க முடியாமல் வழக்குப் பதிவு செய்யாமல் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யப் பட வேண்டும். நீண்டகாலமாக தடுத்து அல்லது விளக்கமறியலில் வைக்கப்படல் கைதிகளின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என இலங்கை அரசியல் அமைப்பின் 72 மற்றும் 13 ஆகிய பகுதிகளில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சர்வதேச சட்டத்திலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

### புலம்பெயர் நாடு

புலிகள் அமைப்பில் இணைந்து போராடி – களமாடி, வீரச் சாவடைந்த மாவீரர்களை நினைவுகூரும் நாள் நேற்றாகும். தமிழீழ தேசத்தில், 2009 ஆம் ஆண்டு வரையில் – தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கச் செய்யப்படும் வரையில், மாவீரர் தினம் வெகு எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இந்த உணர்வுபூர்வமான செயற்பாடு, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், தாயக நிலப் பரப்பில் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்படுவதில்லை.

புலம்பெயர் தேசங்களில் ஒவ்வொரு ஆண்டும், மாவீரர் இல்லத்தைப் போன்று வடிவமைத்து – தாயகத்தில் மாவீரர் தினம் இடம்பெற்றதைப் போன்று அங்கு உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றனர். இதனடிப்படையில் நேற்றைய தினமும், தமிழர்கள் பரந்து வாழும் புலம்பெயர் தேசம் எங்கும் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர். இதே போன்று சுவிசிலும் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. சுவிசின் பிறிபேக் மாநிலத்தில் மாவீரர் தின நிகழ்வு உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

ஜேர்மனில், தமிழ் இளையோர் அமைப்பினால் மாவீரர் தின நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது. இதே போன்று ஏனைய நாடுகளிலும் மாவீரர் தினம் நினைவுகூரப்பட்டது.

இந்தியாவில், தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு, பேரெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றது.

(த-5)

### கடவையில்

உள்ள கடவையில் இடம்பெற்றது..

சங்கத்தானை சாரதா வீதியைச் சேர்ந்த நில அளவையாளரான சின்னத்தம்பி முருகேசு (வயது-75) என்பவர் ஏ - 9 வீதியுடன் உள்ள கடையில் பத்திரிகை வாங்கி செய்தியை வாசித்துக் கொண்டு ரயில் கடவையைக் கடந்த வேளையில் கொழும்பு சென்ற ரயிலினால் மோதுண்டு தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

### தாயகமெங்கும்

இல்லங்களில் உறவுகளும் மக்களும் உணர்வுபூர்வமாகத் தீபமேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்துவார்கள். எனினும் மாவீரர் துயிலும் இல்லங்கள் படையினரால் அழிக்கப்பட்டுப் படைமுகாங்களாக மா றியுள்ளன. இதனால் மக்கள் தமது பகுதிகளிலுள்ள பொது இடங்களில் இதனை அனுஷ்டித்தனர்.

குறிப்பாக, யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், அலுவலகங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி அலுவலகங்கள் உள்ளிட்ட பொது இடங் களில் பலர் கூடித் தீபங்கள் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் போராட்டம் மௌனித்த பின்னர், கடந்த மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மக்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தடை விதிக்கும் வகையில் படையினரையும் பொலிஸாரையும் பயன்படுத்தி அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

இதனால் 2009 ஆம் ஆண்டு முதல் கடந்த 6 வருடங்களாக மாவீரர் தினங்களை தமிழ் மக்கள் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் இரகசியமான இடங்களிலேயே அனுஷ்டித்தனர். அத்துடன் இதனை அறிந்த படையினர், குறித்த பகுதிகளைச் சுற்றிவளைத்து பலரைத் தாக்கியும் கைது செய்தும் இருந்தனர்.

இந்தநிலையில்விடுதலைப்போராட்டத்தில் களமாடிச் சாவடைந்த மறவர்களுக்கு நேற்று வடக்கு-கிழக்கு எங்கும் மக்கள் தமது உணர்வுபூர்வமாக நினைவுச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (த-வ)

### ஆற்றில்

தாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இமையாணன் உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த சுதாகரன் சங்கீர்த்தனன் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்ததாக வல் வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

தொண்டமானாறு ஆற்றில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஆற்றில் அடித்து செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

ஆழமான பகுதியில் நீரோட்டத்திற்குள் சிக்கியதனாலே குறித்த இளைஞன் நீரில் அடித்துச்செல்லப்பட்டு நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தியதோடு சடலத்தை மீட்டு ஊறணி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் நிமிர்த்தம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-109-108)

### மீள்குடியேற்றத்துக்காக

வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான உதவி வழங்குவதற்கு பிரிட்டன் கடமைப்பட்டுள்ளது. இலங்கையின் உறுதிப்பாடு, சுபீட்சம் ஏற்பட பிரிட்டனின் நீண்டகால அர்ப்பணிப்பில் தற்போது வழங்கப்படும் 6.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் ஒரு பகுதியாக அமையும்.

குறித்த பணம் பிரிட்டன் படைப் பிரிவினால் வதிவற்ற படையினருக்கான பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து 6 ஆண்டுகள் கடந்த போதும் போரில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு இன்னும் பொறுப்புக் கூறப்படாதது கவலையளிக்கின்றது.

மேலும் இலங்கையில் காணப்படும் ஊழல்களை முடிவுக்கு கொண்டு வரல் உள்ளிட்ட சீர்திருத்தங்களுக்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி வழங்கியுள்ளார் -என்றார். (த-வ)

### புலம்பெயர்

நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மாநகர மேயர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் கடந்த வியாழன் பிற்பகல் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஏ.பஷீர் மேற்படி தீர்மானம் தொடர்பான தனிநபர் பிரேரணையை முன்மொழிந்தார்.

பிரதி மேயர் ஏ.எல்.அப்துல் மஜீத் பிரேரணையை வழிமொழிய, மேயர் நிஸாம் காரியப்பர் உட்பட உறுப்பினர்கள் பலரும் இந்தப் பிரேரணையை ஆதரித்து உரையாற்றியதுடன் சபையில் ஏகமனதாகவும் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உறுப்பினர் ஏ.ஏ.பஷீர் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

இன்று இந்தச் சபையில் புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்களிக்கும் வசதிக்காக ஒரு பிரேரணையை முன்வைப்பதில் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

இந்த நாட்டையும், எமது பிரதேசத்தையும் பொருளாதார ரீதியாகத் தாங்கி நிற்கும் ஓர் உயிர்நாடி, புலம்பெயர் தொழிலாளர்களின் வருமானம் தான் என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஏறத்தாழ 20 லட்சம் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள், மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் நமக்காகவும், நமது உறவுகளுக்காகவும் பல தியாகத்துக்கு மத்தியில் பல தசாப்தங்களாக தொழில் புரிந்து வருகின்றனர். தமது முழு வாழ்க்கையையும் தமது குடும்பத்துக்காக அர்ப்பணித்தவர்கள். எமது குடும்பங்களில் யாராவது ஒருவர் இன்று வெளிநாட்டில் தொழில்புரியும் ஒரு சூழலை இப்போது காணக்கூடியதாக உள்ளது.

எமக்கெல்லாம் நன்கு தெரியும். கடல் கடந்து சென்று உறவுகளைப் பிரிந்து கஷ்டப்படும் இந்த ஏழைத் தொழிலாளர்கள், பல இன்னல்களுக்கு மத்தியில் தினமும் அங்கேயும் இங்கேயும் பல சமூக பொருளாதார இடர்பாடுகளை சந்தித்த வண்ணம் உள்ளனர். இவர்களுடைய சொல்லொணாத் துயரங்களை நாம், ஊடகங்களிலும், முகநூல்களிலும் தினமும் கண்டு வருந்தாத நாள்கள் இல்லை.

இவர்களுடைய அபிலாசைகள் காலம் காலமாக கிடப்பாற்றில் கிடப்பதை எம்மால் மறுக்க முடியாது. இதுவரை காலமும் நாம் அரசியலில் இருந்தும் இவர்களுக்காக குரல் கொடுத்தோமா? என்று எண்ணும்போது குற்றஉணர்வாக உள்ளது.

எமது புலம்பெயர் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் இவ்வாறு காலம் காலமாக தீர்க்கப்படாமல் தேங்கி நிற்பதற்கும் மற்றும் இவர்களுடைய அபிலாசைகள் எந்தவொரு அரசாலும் அரசியல் கட்சிகளாலும் முன்னுரிமை அளிக்கப்படாமைக்கும் ஒரு முக்கியமான காரணம் உண்டு.

எந்த விதத்திலும் எமது அரசியல் கட்சிகள், புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குகளில் தங்கி இல்லை என்பதே அந்த மறுக்க முடியாத உண்மையாகும். வாக்களிக்கும் வசதி எனும் பொறிமுறை இல்லாமையே இந்தப் புலம்பெயர் தொழிலாளர் சமூகத்தின் இன்னல்களுக்கும் பின்னடைவுக்கும் ஒரு காரணம் என்றே சொல்ல வேண்டும்.

ஆகவே வாக்களிக்கும் வசதி என்பது புலம்பெயர் சமூகத்தின் அபிலாசைகளின் திறவுகோல். இதுவே இந்தப் பிரச்சினைகளின் முற்றுப் புள்ளியாகும். எனவே இந்த வாக்குரிமை எனும் விடயத்தில் எமது புலம்பெயர் தொழிலாளர்களுக்காக உதவிக்கரம் நீட்டுவது இங்கே வாழும் உறவுகளாகிய எமக்கும் ஆட்சியாளர்களுக்கும் கடமையாகியுள்ளதை உணர்கின்றேன்.

ஆங்காங்கே காலத்துக்குக் காலம் சில அமைப்புகளாலும், அரசியல்வாதிகளாலும் பேசப்பட்டு மறந்துவிடும் ஒரு விடயமாக இந்தத் தேர்தல் வாக்களிப்பு வசதி என்பதை நாம் அவதானித்திருந்தாலும் இன்று புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்களிப்பு வசதியை முழுமையாக முன்னிறுத்திய ரகீப் ஜாபர் என்பவருக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் கூட்டணி என்கின்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு குரல் கொடுக்கப்படுகின்றமையை ஊடகங்களினூடாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. காலம் கடந்தாலும் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதாகும். தீவிரமாக வலுத்துவரும் இந்தக் கோரிக்கையை ஒரு தேசிய பேசு பொருளாக்கி, நாடாளுமன்றம் வரைக்கும் கொண்டு சென்ற ரகீப் ஜாபரின் தைரியத்தை நான் பாராட்டுகிறேன் நாம் சிந்திக்காததை எந்தவொரு அதிகாரமும் இல்லாமல் செயற்படுத்தியதற்கு நன்றி கூறுகிறேன்

ரகீப் ஜாபரினால் வழி நடத்தப்படும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் கூட்டணியின் வாக்குரிமைக் கோசத்துக்கு ஆதரவாக இந்தச் சபையும் இணைந்து, புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வாக்களிப்பு வசதியை செய்துகொடுக்க அரசைக் கோரவேண்டும் என இந்தச் சபையைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டால், தேர்தல் விஞ்ஞாபனங்களினூடாக அவர்களின் அபிலாசைகள் தீர்க்கப்படும் என்கின்ற அளப்பெரிய நம்பிக்கை உள்ளது. மேலும், இந்த நாட்டில் எந்த ஒரு சமூகமும் தனது வாக்குகளை மூலதனமாகக் கொண்டே தனக்குரிய ஜனநாயக உரிமையையும், ஆரோக்கியமான சமூக இருப்பையும் உறுதிப்படுத்துகின்றன. அந்த வகையில் வாக்களிக்கும் வசதி என்பது மூவின புலம்பெயர் தொழிலாளர்களினதும் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வித்தாகிவிடும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே புலம்பெயர் தொழிலாளர்களின் தேர்தல் வாக்களிப்பு வசதியை செயற்படுத்திக் கொடுக்க ஆதரவு அளிக்குமாறு இந்த சபையை மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

ரகீப் ஜாபரின் வாக்குரிமைக் கோரிக்கை இந்த கிழக்கு மண்ணிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும். ஏற்கனவே இந்த நாட்டில் வாழும் இன்னுமொரு பிரதான சிறுபான்மை இனமொன்றுக்கான அரசியல் முகவரி இந்த மண்ணிலிருந்தே விதைக்கப்பட்டு இன்று அது ஒரு விருட்சமாக வளர்ந்ததை நாம் எல்லோரும் காண்கின்றோம். அதேபோல இன்னுமொரு 20 லட்சம் தொழிலாளர் சமூகத்துக்கு விமோசனம் பெற்றுக்கொடுக்கும் உரிமைப் போராட்டத்துக்கு வலுவூட்டுவோர் இதில் இன, மத, மொழிப் பிரதேச பேதமில்லாமல் குரல் கொடுத்து ஓர் ஜனநாயக உரிமைக்காக தாகத்தோடு குரல் கொடுக்கும் ஒரு சமூகத்துக்கு உரம் சேர்ப்போம் இலங்கையர் என்ற ஒரே குரலில்.

ஆகவே இறுதியாக... எமது அரசு இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்களிப்பு வசதியை தாமதமில்லாமல் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த சபையில் பிரேரிக்கின்றேன் இந்தப் பிரேரணையை இந்தச் சபை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்பதையும் நமது கல்முனை மாநகரசபையில் பிரேரிக்கப்படும் வரலாற்று முக்கியத்துவமிக்க இந்தப் பிரேரணையை அதி உத்தம ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கௌரவ முதல்வரையும் கௌரவ பிரதிமுதல்வர் மற்றும் கௌரவ உறுப்பினர்களையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். - இவ்வாறு அவர் கூறினார்.

மேயர் உட்பட உறுப்பினர்கள் பலரும் பிரேரணையை ஆதரித்து சபையில் உரையாற்றியதைத் தொடர்ந்து, அது ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது.

(த-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளாத்துயரில் ஆண்டுகள் ஒன்பது



அமரர்

**சிவசாமி ரஞ்சன்**

முன்னாள் ஊழியர்-
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
யாழ்.)
(திதி:- திருதியை)

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
மாறவில்லை மனதினுள்
பதிந்த மதிமுகம்
துன்ப துயரங்கள்
நாளொன்றாய் வந்தாலும்
அப்பா போல் வருமா
ஆயிரம் பிறவி எடுத்தாலும்
மீண்டும் பிறப்புண்டேல்
பிள்ளைகளாய் வர வேண்டும்
நீண்ட ஆயுளில்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மண்ணில்
10.05.1959

விண்ணில்
07.12.2006

11/5, சேர்மனி வீதி,நல்லூர்.

குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் (J/72 கிராம சேவகர் பிரிவு )
திருமதி **மதிவதனி ஜெயக்குமார்** அவர்களின் பாசமிகு தந்தை

**செல்லையா கந்தசாமி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

(66378) (10.17)


# வெவ்வேறு விபத்துக்களில் எண்மர் காயம்

சாவகச்சேரி,நவ.28

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் இரண்டு பெண்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் கடந்த 23ஆம், 24ஆம் திகதிகளில் இடம் பெற்றுள்ளன. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கைதடி நாவற்குழிப் பகுதி ஏ 32 வீதியில் வேகமாக வந்த ஓட்டோவீதியில்திரும்ப முற்பட்டபோது, எதிரே வந்த 'பட்டா' வடி வாகனத்துடன் மோதி தலைகீழாகத் தடம் புரண்டது. ஓட்டோவில் பயணித்த மறவன்புலோ வைச் சேர்ந்த நபரும், வரணி கரம்பைக் குறிச் சியைச் சேர்ந்த நபரும் அயலவர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நாவற்குழி லேலண்ட் நிறுவனத்துக்கு முன்பாக ஏ 9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நின்ற சினைப்பட்ட பசு மாட்டை மோதியதில் மாடு சம்பவ இடத்தில் உயிரிழந்தது. மோட்டார் சைக்கிளோட்டியான தர்மபுரம்மேற்கைச் சேர்ந்த நபரும், பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் வருவதை அவதானிக்காமல் டச்சு வீதியிலிருந்து ஏ- 9 வீதிக்கு சைக்கிளில் வந்த வந்த வயோதிபரை ஏ -9 வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த அரச உத்தியோகத் தரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரில் இடம் பெற்றது.

மூன்று சக்கர மோட்டார் சைக்கிளில் வந்த மாற்றுத்திறனாளியை முந்திச்செல்ல முயன்றகார் சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாக மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மாற்றுத் திறனாளியான சாவகச்சேரியைச் சேர்ந்த நபர் ஒருவரும் காயமடைந்தார்.

கொடிகாமம் கச்சாய் வீதிப் பகுதியில் அத்துமீறி வீட்டி னுள் புகுந்த குடும்பத்தினர் வீட்டிலிருந்த தம்பதியை கற்கள், பொல்லு போன்றவற்றினால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(ஐ-9)


## மரண அறிவித்தல்

மலர்வு:- 17.04.1924

**சீ.சிவப்பிரகாசம்**

உதிர்வு:- 25.11.2015

(இளைப்பாறிய ஆசிரியர் யா/சிவப்பிரகாச வித்தியாலயம்)

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சீ.சிவப்பிரகாசம் 25.11.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சௌந்தரராஜன், கிருஷ்ணராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவதி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், கயினா, சுகுணா, விதுலா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் னர் கல்கிசை இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.சௌந்தரராஜன்
077 313 7308

வெள்ளவத்தை, கொழும்பு



## மரண அறிவித்தல்



**திருமதி இராசபூபதி சின்னத்துரை**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூபதி சின்னத்துரை நேற்று (27.11.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் சின்னத்துரையின் பாசமிகு மனைவியும் சுரேஸ், சுரேந்தினி (சுவிஸ்), சுதர்சன் (ராசன் குட்டி) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவாஜினி, கணேசலிங்கம், மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி, சரோஜினிதேவி காலஞ் சென்றவர்களான லோகநாதன், ஆனந்தராசா, சரஸ்வதி, இராஜேந்திரம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரஞ்சீபன், வனோஜி, நிதுஸ், தர்சி, சஞ்சயன், யதுசா, அனுத்தி, ஆரங்கன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2015)சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகநண்பகல் 12.00 மணியளவில் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சுரேஸ், ராசன்குட்டி
(மகன்மார்)

(66385)



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 27 ஆவது பிறந்த நாளும்



**செல்வநாயகம் கோபிநாத்**

திதி திருதியை 28.11.2015

தோற்றம்
26.11.1988

மறைவு
13.12.2011

உன் வரவைப்பார்த்த எம் கண்கள்
பூத்துப்போய் விட்டதடா
உன் காலடி ஓசை கேட்க இருந்த எம் காதுகள்
களை இழந்து விட்டதடா - நீ
வீற்றிருந்து ஆட்சிசெய்ய
எம் குடும்பராச்சியமோ ஏங்குதடா
உன்னை சுமந்து இவ் உலகிற்கு உற்பவித்து - இங்கு
எத்தனையோ கருவறைகள்
தவம் கிடக்கின்றதடா - நீ
எம் குலத்தில் ஓர் உயிராய் வந்து உதிர்த்திட்டா - நாம்
கூப்பிட்டவுடன் ஓடி வந்து
எம் முன் நிற்கும் - குட்டியாய்

நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

பிறப்பு
29
★
07
★
1923



இறப்பு
26
★
11
★
2015

**RT. சம்பந்தர்**

பட்டயக்கணக்காளரும், கிறிஸ்டன் எம்.என்.எஸ் இன் முன்னாள்பங்காளரும்

யா/தொண்டைமானாற்றை பிறப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற விரகத்திப்பிள்ளை இராஜரட்ணம், லட்சுமிப்பிள்ளையின் அன்பு மகன் RT சம்பந்தர் மலேசியா ஈபோவில் காலமானார். அன்னார் திலகராணியின் பாசமிகு கணவரும் Dr.மாலதி (மலேசியா) Dr.சுமதி. (மலேசியா), வசந்தி (மலேசியா). Dr.முரளிதரன். (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் Dr.பாலச்சந்திரன் (மலேசியா) Dr.ஆனந்தராஜ் (மலேசியா) தாரணியின் (அவுஸ்திரேலியா) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் மலேசியா ஈபோவில் இன்று 28.11.2015 நடை பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: msambanthar@hotmail.com



## அந்தியேட்டி நிகழ்வு



**தமிழினி**

அவர்களின் அந்தியேட்டி நினைவஞ்சலி நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் தாயாரின் இல்லமான இல.143, 8ஆவது ஒழுங்கை, சிவபுரம், பரந்தன் என்ற முகவரியில் நடைபெறும் என்பதனை அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(சி/20383)(11.15.17)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் ★ 11 . 11 . 1941

மறைவு ★ 29 . 10 . 2015

## ஆறுமுகம் குணலிங்கம்

கடந்த (29.10.2015) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (28.11.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து அமுதாம்பிகை மணிமண்டபத்தில் (வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் கோயில்) நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலும் அன்னாரின் திடீர் மரணச் செய்திகேட்டு உடன் வந்து உதவிகள் செய்த உறவினர்களுக்கும், ஆனைப்பந்தி வாழ் மக்களுக்கும், ஆனைப் பந்தி சந்தி ஆட்டோ சாரதிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் தொலை பேசி மூலம் இரங்கல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**298, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**மகன்-சபேசன்**
**(குணலிங்கம் பல் பொருள் வணிபம்)**
**T.P: 077 0376 428**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா ஜஸ்ரின்

தோற்றம் : *12.01.1945*



மறைவு : *27.11.2015*

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா ஜஸ்ரின் நேற்று (27.11.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதி செல்லாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராயப்பு, சின்னப்பு மற்றும் ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குருசுமுத்து ஜஸ்ரின் (ஆர்மி ஐயா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குருசு முத்து - எலிசபெத் தம்பதியினரின் அன்பு மருமகளும், றிச்சாட், றிச்மன், ஜனனி காலஞ்சென்ற றீகன் மற்றும் சாளினி ஆகியோரின் அன்புத்தாயாரும் சுரேக்கா, நிமலினி, ரியூறின், றஞ்சித்மோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோஷிகன், பபிஷிகன், பிரிந்திக்கா, பரத், அஜன், ரிஷானி, மெபின்ஷா, ஷாறா, ஷறோனி, ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க அராதனை *(30.11.2015)* திங்கட்கிழமை முற்பகல் *10.00* மணியளவில் நவாலி தேவர் கட்டு திருஇருதயநாதர் ஆலயத்தில் இடம்பெற்று ஆரியம் பிட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(66381)

**புலவர் வீதி,**
**நவாலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**T.P :077 412 0683, 021 225 5341**

# மரண அறிவித்தல்



## செல்லையா கந்தசாமி

(முன்னாள் அதிபர் - யா/ஸ்ரீநாரதா வித்தியாலயம் - கரவெட்டி, யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்-பருத்தித்துறை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், புலோலி மேற்கு, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி (ஓய்வு நிலை அதிபர்) நேற்று (27.11.2015) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இலக்குமிதேவியின் (ஓய்வுநிலை ஆசிரியை-யா/வட இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், மலர்விழி (தாதிய சகோதரி-போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), மதிவதனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), வளர்மதி (லண்டன்), குகநேசன் (சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி-சிலிங்கோ லைப்-நெல்லியடி), குகதாசன் (ஆசிரியர், மன்னார் கௌரி அம்பாள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானச்சந்திரன் (தாதிய உத்தியோகத்தர்-போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (வாகன மதிப்பீட்டு உத்தியோகத்தர் LOLC யாழ்ப்பாணம்) அன்ரன் பிரேமராஜன் (லண்டன்) நளினி (உரிமையாளர்-துளசி அழகுமாடம், நெல்லியடி) காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனும், கஜானன் (மாணவன், யா/இந்துக் கல்லூரி) யாதவி, கபிலேஷ், சிந்துஜன் (மாணவர்கள்-யாழ்/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), கானுஜன், டிலான் (லண்டன்), தமிசா (லண்டன்) தேனுஜன் ஆகியோரின் அன்புப் பாட்டனும், தவமணி தேவி (கொழும்பு) கோதைநாயகி (ஜேர்மனி) சோபிதமணி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம் சிவானந்தம் மற்றும் ரவீந்திரன் (அமெரிக்கா) கமலாம்பிகை, சீதாதேவி (ஓய்வுநிலை அதிபர், யா/சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை) பார்பதிதேவி (லண்டன்) சுப்பிரமணியம் (பொறியியலாளர், சிங்கப்பூர்) காலஞ்சென்ற மயில்வாகனம், ருக்மணிதேவி (ஓய்வுநிலை பிரதி அதிபர் - சாவகச்சேரி மகளிர் கல்லூரி) மகேஸ்வரி (உரிமையாளர்-லிபேர்டி மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவசுப்பிரமணியம், பத்மநாயகி மற்றும் சதாசிவம், இராசரத்தினம் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்-சாவகச்சேரி) பத்மநாதன் மணிமேகலை ஆகியோரின் சகலனும், தவானந்தம் (கனடா), சோமசுந்தமூர்த்தி (ஜேர்மன்), ஜீவானந்தம் (கொழும்பு) சர்வானந்தம் (கனடா), மதன் (ஜேர்மன்) மதனி (கனடா) மதிபூசணன், அனுஷன் சாருகேசி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.30 மணிக்கு சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26/4, 1ஆம் கட்டை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.**
**தொ.பே:- 021 226 4790**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி/20384) (10.17)

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 13.11.2015 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
அமரர்

### கணபதிப்பிள்ளை தியாகராஜா

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (28.11.2015) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

39, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டின் நீங்கா நினைவுதனில்....



### அமரர் தம்பையா கார்த்திகேசு

தோற்றம்
03.08.1933

மறைவு
27.11.2007

திதி: திருதியை

எண்ணி! எண்ணி! எட்டு ஆண்டுகள் ஆனதுவே
எட்டாத் தூரம் சென்றீரோ எண்ணாமல் நாம் வாழ்ந்திருந்தோம் உம்முடனே
எண்ணமெலாம் உமது எட்டாம் நினைவுதனில்

என்றென்றும் உங்கள் நினைவில்
(உங்கள் நிழலில்) வாழும் மனைவி,
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20.04.1953

உதிர்வு
20.11.2013



அமரர்

### விஸ்வகீர்த்தி லயன் குழந்தைவேலு நடராசா

திதி: கார்த்திகை திருதியை (28.11.2015)

ஆண்டிரண்டு ஆனதுவே-
துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாமின்று
நிர்க்கதியாய் தவிக்கின்றோம்
வாராயோ இன்னொருகால்
எம்மோடு வாழ்வதற்கு.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"நகுலகிரி"
கச்சாய் றோட், கொடிகாமம்.
077 6679 391

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



அமரர்

### இராஜேஸ்வரி சிவகுகதாசன்

தோற்றம்
11.11.1935

மறைவு
31.10.2015

கடந்த 31.10.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் இராஜேஸ்வரி சிவகுகதாசன் அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கீரிமலையில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
021 205 5057

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தாமோதரம்பிள்ளை லோகநாதன் (ரமணா)

மலர்வு : 1946.02.24 உதிர்வு : 2015.11.27

யாழ். கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகநாதன் (ரமணா) அவர்கள் நேற்று (27.11.2015) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுபத்திரா (சுகன்யா), சியாமா (லண்டன்) காலஞ்சென்ற கோகுலன் (கவாஸ்கர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலசுந்தரன் (வரதன் - சாவகச்சேரி ஓய்வு பெற்ற ISA) அவர்களின் மூத்தசகோதரனும் அலெக்ஸ் நிக்சன் (ஆசீர் வணிக நிலையம்), செல்வரூபன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ரெக்ஸ் ஹரிஸ் (யாழ் இந்துக் கல்லூரி), அக்ஷயா, ரோஷன், ரேஷ்மி(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)அபிலாஷ், அபிஷா, அபிஷன் (லண்டன்) ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/11, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 4546, 077 772 1740

தகவல்:
அலெக்ஸ் நிக்சன் - மருமகன்
(ஆசீர்வணிக நிலையம்)
202, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(66382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சரஸ்வதி - விக்னேஸ்வரா ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான தொடரில் நேற்று வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி, விக்னேஸ்வரா அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

முதல் பாதியில் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தது விக்னேஸ்வரா அணி. உரும்பிராய் சரஸ்வதி அணியினர் பதில் கோலை பதிவு செய்ய பல முறை முயன்ற போதும் எவையும் பயனளிக்கவில்லை. இதனால் 1-0 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா அணியின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.

ஆதிக்கத்தைத் தொடரும் முனைப்பில் விக்னேஸ்வரா. பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் சரஸ்வதி. ஆரம்பமாகியது ஆட்டத்தின் மறு பாதி. சரஸ்வதியின் வீரன் லயன்டக்சன் வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்த கோல் கணக்கு சமனானது. மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

# சமபோச உதைபந்தாட்டத் தொடர் யாழ். மாவட்டத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 28
15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான சமபோச கிண்ணத்துக்கான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடர் இம்முறை யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் டிசெம்பர் 3 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள இந்தத் தொடருக்கான ஆரம்ப நிகழ்வுகள் அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்டப் பயிற்சித் திடலில் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆரம்ப நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், விளையாட்டுத்துறை பணிப்பாளர் அபயரெட்ண, வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் தெய்வேந்திரராசா, வட மாகாண உடற் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், சமபோச நிறுவனத்தின் பொது முகமையாளர் ஐ.எம்.கான், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர். எஸ். அன்ரனிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# முதலாவது ரி-20 ஆட்டத்தில் பாகிஸ்தான் பரிதாபத் தோல்வி



இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் கேல்ஸ். முழுமையாக மூன்று பந்துப் பரிமாற்றங்கள் முடிவதற்குள் இருவருமே ஆட்டமிழந்து விட்டனர். மொயின் அலி டக்குடன் பவிலியன் திரும்பினார். வின்ஸ், மோர்கன் இருவரும் இங்கிலாந்தின் சரிவை சரிசெய்தனர். மேலதிக இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. 95 ஓட்டங்களாக இருந்த போது ஆட்டமிழந்தார் வின்ஸ். 200 இற்கும் அதிகமான சராசரியில் விளையாடி ஓட்டங்களைச் சடுதியாக தூக்கி நிறுத்தினார் பில்லிங்ஸ். மோர்கனும் தனது பங்குக்கு ஆரம்பிக்க இணைப்பாட்டம் பலம்பெற்றது. அரைச்சதம் கடந்தார் பில்லிங்ஸ். 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் இங்கிலாந்து 160-5. 120 பந்துகளில் 161 ஓட்டங்கள். எட்டக்கூடிய இலக்குத்தான். ஆனால், அதற்குரிய ஆரம்பம் பாகிஸ்தானிடம் இல்லை. அகமட், கபீஸ், ரிஸ்வான் மூவரும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க பாகிஸ்தானின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியானது. மொகமட் நிலைத்து நின்றார். ஆனால் எதிர்கொண்ட பந்துகளை விட எடுத்த ஓட்டங்களின் எண்ணிக்கை குறைவு என்ற காரணத்தால் இதுவும் ஒரு வகையில் பாகிஸ்தானுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது. வேடிக்கை காட்ட முற்பட்ட மக் சூட்டை அசாத்தியமான ஸ்டம்ஸ் செய்து வெளியேற்றினார் பில்லிங்ஸ். இறுதி நம்பிக்கையாக களத்தில் அப்ரிடி. ஒரு ஓட்டத்தைத் தானும் அவரால் பெற முடியவில்லை. முடிவில் 146 ஓட்டங்களில் சுருண்டு தோல்வியடைந்தது பாகிஸ்தான். (ம)

# அப்ரிடியின் விருப்பம்

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் இலங்கையில் நடைபெற கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. இருப்பினும் இன்றைய தினமே இரு நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளும் தொடர் தொடர்பாக தமது இறுதி அறிவிப்பை வெளியிடுகின்றன. இந்த நிலையில் இந்திய அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பம் தெரிவித்துள்ளார் அப்ரிடி.

இந்தியா பாகிஸ்தான் தொடர் தொடர்பாக அப்ரிடி தெரிவிக்கையில்:- அரசியலுக்கு அப்பாற்பட்டு இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட வேண்டும். கிரிக்கெட் வேறு அரசியல் வேறு. இரண்டும் நேர் எதிர் போக்கை உடையவை. இலங்கையில் இந்தியா-பாகிஸ்தான் தொடரை நடத்த ஏறக்குறைய முடிவு செய்யப்பட்டாயிற்று. ஆனால் பாகிஸ் தானுக்கு வந்து இந்தியா விளையாடினால் நான் மகிழ்ச்சி அடைவேன். மேலும் இது போன்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இந்தியா பாகிஸ்தானுக்கு வந்து விளையாடினால் அது மிகப்பெரிய சந்தோசமான விடயமாக இருக்கும். பாகிஸ்தானை ஆதரியுங்கள் இங்கு விளையாடுங்கள். இந்தியாவுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பாகிஸ்தானில் நூறு வீதம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ம)



# அதிருப்தியான நாக்பூர் ஆடுகளம்

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றுவரும் நாக்பூர் ஆடுகளம் முழுவதுமாக சுழலுக்கு ஒத்துழைக்கக் கூடியது என்பதனால் முதல் இரு நாள்களிலுமே 32 இலக்குகள் சரிக்கப்பட்டன. இந்த நிலையில் குறித்த ஆடுகளம் தொடர்பாக அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர் கிரிக்கெட்டின் பிரபலங்கள் பலர்.

**மைக்கேல் வாகன்:** இது மிகவும் கொடூரமான ஆடுகளம். இதை 5 நாள்கள் வரை ஆட்டம் நீடிக்க தயாரிக்கப்பட்டது என்று கூறமுடியுமா?

**மக்ஸ்வெல்:** இந்த ஆடுகளம் மோசமானது. முதல் ஒரு மணி நேரத்தில் 9 இலக்குகள் வீழ்த்தப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது.

**கைடன்:** டெஸ்ட் கிரிக்கெட்டின் தரம் நாம் இப்போது பார்க்கும் அளவுக்கு சீரழிந்துள்ளது ஏமாற்றமளிக்கிறது.

**அக்ரம்:** உலகம் முழுவதும் டெஸ்ட் ஆடுகளங்களைத் தயாரிப்பதில் ஐ.சி.சி. முனைப்பு காட்டுவது அவசியம். அல்லது அணியின் தரநிலையை பாதிக்கும் வண்ணம் புள்ளிகளைக் குறைக்க வேண்டும்.

**ஜோன்சன்:** 215 ஓட்டங்களை எடுத்த பிறகு இந்தியா 136 ஓட்டங்கள் முன்னிலை. நடுவர்களின் அறிக்கையை படிக்க ஆசையாக இருக்கிறது. என்று தமது ஆதங்கங்களைப் பதி விட்டுள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க ஆடுகளத்தில் பேய்கள் இல்லை . வீரர்களின் மனநிலையும் திறனுமே ஆட்டத்தைத் தீர்மானிக்கிறது. நாக்பூர் ஆடுகளம் டெஸ்ட் ஆட்டங்களுக்கு பொருத்தமானது அல்ல என்றால் அம்லா 2011 ஆம் ஆண்டு இந்த மைதானத்தில் இரட்டைச் சதத்தைப் பெற்றது எவ்வாறு என்று கேள்வி எழுப்புகிறார் கவாஸ்கர். (ம)



# பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் விளையாட இந்திய வீரர்கள் அனுமதிக்கப்படலாம்

## *சுக்லா தகவல்*

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் விளையாட இந்திய வீரர்களை அனுப்புவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகளில் ஒருவரான ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போல பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் பி.எஸ்.எல். எனப்படும் ரி-20 தொடரை நடத்த உள்ளது. இதில் இந்திய வீரர்களும் இடம்பெற வேண்டும் என்று சமீபத்தில் பி.எஸ்.எல். தலைவர் நஜம் சேத்தி விருப்பம் தெரிவித்திருந்தார். பாகிஸ்தான் சூப்பர் லீக் டோகாவில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தொடரில் வெளிநாட்டு வீரர்களை ஒப் பந்தம் செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. சுமார் 80 வெளிநாட்டு வீரர்களை சேர்க்கத் திட்டமிட்டுள்ளனர். இந்தத் தொடரில் பங்கேற்பதற் காக தீவுகளின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அணுகி உள்ளது. இருப்பினும் இந்திய வீரர்கள் எவரும் இதில் இடம்பெறவில்லை. இந்திய வீரர்கள் பாகிஸ்தான் தொடரில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் சபை இதுவரை அனுமதி வழங்காமல் உள்ளது.

ஆனால், தற்போது இந்திய கிரிக்கெட் சபையின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டால் இந்திய வீரர்களுக்கு அனுமதி தருவது குறித்து பரிசீலிப் போம் என்று ஐ.பி.எல். தலை வர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். (ம)

# நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சை

கரணவாய், நவ. 28
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் மூன்றாம் தர நடுவர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை இன்று பிற்பகல் 3மணிக்கு வவுனியா கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து 60 இற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். எழுத்துப்பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் பின்னர் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-108)

# அஞ்சல் ஓட்டம் பிற்போடப்பட்டது

கரணவாய், நவ. 28
யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தால் இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த மாவட்ட மட்ட அஞ்சல் ஓட்ட நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத் தலைவர் எம்.இளம்பிறையன் அறிவித்துள்ளார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தை வீழ்த்துவோம்

**- மத்தியூஸ்**

நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரில் சிறப்பாக செயல்பட்டு தொடரைக் கைப்பற்றுவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ்.

இலங்கை அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதன் முதல் டெஸ்ட் ஆட்டம் அடுத்த மாதம் 10ஆம்திகதிதொடங்குகிறது. இந்த நிலையில் நியூசிலாந்து அணிக்கு எதிரானதொடரைக்கைப்பற்றுவோம் என்று இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் நாங்கள் சிறப்பாகச்செயல்பட்டோம். ஆனால் நியூசிலாந்தில் நிலைமை வேறு விதமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அங்கு நிலவும் தட்பவெட்ப நிலையும் எங்களுக்கு சவாலாக இருக்கும். நியூசிலாந்து அணி சவால் கொடுக்கும் வகையில் சிறப்பாக செயல்படும். சொந்த மண்ணில் மட்டும் இல்லாமல் வெளிநாட்டு மண்ணிலும் மிரட்டும். அதனால்கண்டிப்பாக இந்தச்சுற்றுப்பயணம் எங்களுக்கு சவால்நிறைந்ததாக இருக்கப் போகிறது. நாங்கள் சிறப்பாக செயல்படும் பட்சத்தில் அந்த அணியை எளிதாக வீழ்த்த முடியும். நிச்சயம் நியூசிலாந்தை வீழ்த்துவோம். என்று தெரிவித்தார். (ம)





# வரலாறு படைத்தது இந்திய இளம் படை

## தென்னாபிரிக்காவின் வெற்றி நடைக்கு நாக்பூரில் வைக்கப்பட்டது முற்றுப்புள்ளி

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளாகிய நேற்று இந்திய அணி 124 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்மூலம் கடந்த பத்து வருடமாக அன்னிய மண்ணில் தொடரை இழக்காமல் வலம்வந்த தென்னாபிரிக்காவின் வெற்றி நடைக்கு இந்திய அணி முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் இன்னிங்ஸிற்காக 215 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக முரளி விஜய் 40 ஓட்டங்களையும் ஜடேயா 34 ஓட்டங்களையும் சகா 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக கார்மர் 4 இலக்குகளையும் மோர்கல் 3 இலக்குகளையும் ரபாடா, எல்கர், தகீர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பம் இந்த ஆட்டத்திலும் சறுக்கவே செய்தது. ஒருவர் பின் ஒருவராக ஒற்றை இலக்கத்துடன் பவிலியன் திரும்ப 79 ஓட்டங்களில் தென்னாபிரிக்கா சுருண்டது.

அஸ்வின் 5 இலக்குகளையும் ஜடேயா 2 இலக்குகளையும் மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் இன்னிங்ஸ் 173 ஓட்டங்களில் முடிவு கண்டது. தாகீர் 5 இலக்குகளையும் மோர்கல் 3 இலக்குகளையும் கார்மர், டுமினி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது கைகொடுக்க தென்னாபிரிக்காவுக்கு இலக்காக 310 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. 32-2 என்ற நிலையில் எல்கர் 10 ஓட்டங்களுடனும் அம்லா 3 ஓட்டங்களுடனும் நேற்றைய மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். தென்னாபிரிக்கா 40 ஓட்டங்களில் இருந்தபொழுது வீழ்ந்தார் எல்கர். அஸ்வினின் பந்தில் சிக்கினார் வில்லியர்ஸ். அம்லாவும் பிளாஸிஸும் இணைந்து நீண்ட நேரம் தாக்குப் பிடித்தனர். 250 பந்துகளுக்கும் மேலாக இருவரும் தாக்குப் பிடித்தனர். இருப்பினும் ஒவ்வொரு பந்தையும் வாழ்வா? சாவா? என்ற பதட்டத்துடனேயே எதிர்கொண்டனர். இணைப்பாட்டமாக 72 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. இந்த ஆட்டத்தின் ஆகச் சிறந்த இணைப்பாட்டம் இதுதான். அம்லா, பிளாஸிஸ் இருவரையும் அடுத்தடுத்து வீழ்த்தி தென்னாபிரிக்காவின் தோல்வியை உறுதி செய்தார் மிஸ்சா. பின்வரிசை வீரர்கள் வரிசையாக அஸ்வினிடம் விழ முடிவில் 124 ஓட்டங்களால் இந்தியா வெற்றிபெற்றது. இதனால் அடுத்த ஆட்டத்தின் முடிவு எதுவாக அமைந்தாலும் கிண்ணம் இந்தியாவிடம் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வெற்றியின் மூலம் கடந்த 10 வருடங்களாக அன்னியமண்ணில் ஆதிக்கம் செலுத்தி வந்த தென்னாபிரிக்காவின் வெற்றிநடை முடிவுக்கு வந்தது. மொத்தமாக 12 இலக்குகளைச் சரித்த அஸ்வின் ஆட்டநாயகனானார். (ம)


# வோலெபேக் நிறுவனத்தின் தயாரிப்பில் வீரர்களை அமைதிப்படுத்தும் உடை

இங்கிலாந்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கான உடை தயாரிக்கும் வோலெபேக் நிறுவனம் பிரபல உளவியலாளரான அலெக்ஸாண்டர் ஸ்காஸ் என்பவரின் ஆராய்ச்சியை அடித்தளமாகக் கொண்டு போட்டிக்கு முன்னர் விளையாட்டு வீரர்களை அமைதிப்படுத்தும் மேலாடையைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

முகம், தலை மற்றும் கைகளை முழுமையாக மறைக்கும் வகையில் தயாராகியுள்ள இந்த மேலாடை இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ளது. பல்வேறு ஆய்வுகளில் இதயத் துடிப்பின் வேகத்தைக் குறைக்க இளஞ்சிவப்பு நிறம் உதவுவதாகத்தெரியவந்துள்ளது. முகத்துக்கும் திரையுள்ள இந்த உடையை முழுமையாக அணிந்துகொண்டு அதன் விழித்திரை வழியே பார்க்கும்போது, அதிகபட்சமாக இளஞ்சிவப்பு நிறமே தெரியும். இதனால் இதயத் துடிப்பின் வேகம் சீரடையும். அத்துடன், இதை அணிந்த பின்னர் மூக்கின் வழியே மட்டுமே இயல்பு நிலையில் மூச்சு விட முடியும். ஆகவே, விளையாட்டுக்கு முன்னர் வீரர் அமைதியுடன் தயாராக இந்த உடை உதவும் என தெரிவித்துள்ளனர்.

மற்ற நிறுவனங்கள் விளையாட்டு வீரர் எதுபோன்ற உடையை விரும்புவார்? என்ற யோசனையில் தமது உடைகளைத்தயாரிக்கின்றனர். ஆனால், ஒரு விளையாட்டு வீரருக்கு எது அவசியம்? என்ற நோக்கில்தான் இது படைக்கப்பட்டதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உடை ஒன்றின் விலை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 60ஆயிரம் ரூபாய்கள் ஆகும்.

அடுத்த வருடம் சர்வதேச ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள் நிலையில் இந்த உடையின் அறிமுகம் ஒலிம் பிக் வீரர்களின் கவனத்தை ஈர்க்கும் விதமாக அமைந்துள்ளது. (ம)



# பரிசளிப்பு நிகழ்வு

மாங்குளம், நவ. 28

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் காலை 9மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 6வயது, 8வயது, 10வயது, 12வயது, 14வயது, 16 வயது, 18வயது மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட பிரிவில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசில்கள் வழங்கப்படும். வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)


# இளஞ்சிவப்பு நிறப் பந்தில் இரு அணிகளும் தடுமாற்றம்

கிரிக்கெட் வரலாற்றின் முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டமான ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதலாவது நாளில் நியூசிலாந்து 202 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததுடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலியா நாள் முடிவில் 54-2 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பகலிரவு டெஸ்ட் ஆட்டத்துக்கு என்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட இளஞ்சிவப்புப் பந்தில் முதலாவது சர்வதேச பந்துப்பரிமாற்றத்தை ஆரம்பித்தார் ஸ்ராக். ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் குப்தில். லாதமும் வில்லியம்சனும் இணைய மேலதிக இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. நிலைக்கவில்லை வில்லியம்சன். ரெய்லர் 21 ஓட்டங்களுடனும் மக்கலம் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க மறுமுனையில் அரைச்சதம் கடந்த லாதத்தின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. ஸ்ரான்நெர் போல்ட் ஆனார். பின்வரிசை வீரர் களும் பெரிதாக இல்லை. 202 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது நியூசிலாந்தின் இன்னிங்ஸ்.

பந்துவீச்சில் ஸ்ராக், கசில்வூட் இருவரும் தலா 3 இலக்குகளையும் சிடில், லையன் இருவரும் தலா 2இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியாவுக்கு கடந்த ஆட்டங்களில் சதங்களாக விளாசிய வோணர் ஓர் ஓட்டத்துடன் வெளியேறி ஏமாற்றினார். பிரஸ்வெல்லிடம் போல்ட் ஆனார் பேர்ண்ஸ். நாள் முடிவில் ஆஸ்திரேலியா 54-2 (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக பளுதூக்கல் தொடர் சீன வீராங்கனை சாதனை



அமெரிக்காவில் நடைபெற்று வரும் உலக பளு தூக்குதல் தொடரில், சீன வீராங்கனை வெய் டெங் புதிய உலக சாதனை படைத் துள்ளார். 22 வயதான வெய் டெங்,பெண்க ளுக்கான 63 கிலோ எடைப்பிரிவில் கிளீன்அண்ட்ஜெர்க் முறையில் 146 கிலோ எடையை தூக்கி உலக சாதனை படைத்தார். அத்து டன் ஸ்னாட்ச் முறை யில் 113 கிலோவை யும் சேர்த்து மொத் தம் 259 கிலோ தூக்கிதங்கம் வென் றார். கடந்த ஆண்டு தைவானைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் கிளீன் அண்ட் ஜெர்க் முறையில் 145 கிலோ தூக்கியதே இதுவரை சாதனையாக இருந்தது. (ம)

**British College of Higher Studies**
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி

Student, Migration Visa மூலமாகUK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் ஜெகநாதன்



(ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

சந்தைவீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் ஜெகநாதன் புதன் கிழமை 25.11.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பூமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஜெகநாதனின் அன்பு மனைவியும், இரத்தினசாமி, யோகம்மா ஆகியோரின் சகோதரியும், விமலநாதன் (வவா), விஜிதா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவலோகநாதன் மற்றும் லோகநாதன், காலஞ்சென்ற நாதன் மற்றும் பரமேஸ்வரி, நாகராசா, அம்பிகாதேவி ஆகியோரின் மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(66342)(11,15)

தகவல்:
குடும்பத்தினர்.
021 226 4297

### திருமதி சின்னத்தங்கம் பரமநாதன்



தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 42, பலாலி வீதி, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் பரமநாதன் (ஓய்வு பெற்ற செயலாளர் (கணிதம்) கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - கொழும்பு, ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை) 26.11.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின்(உடுவில்) அன்பு மருமகளும், சுப்பிரமணியம் பரமநாதனின் (செயலாளர், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கு மான மக்கள் குழு) அன்பு மனைவியும், கலாநிதி தயாபரனின் (முன்னாள் விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்,அமெரிக்கா) அன்புத் தாயும், விஜிதாவின் (அமெரிக்கா) அன்பு மாமி யும், காலஞ்சென்ற தங்கமுத்து, செல்லமுத்து மற்றும் பாக்கியலட்சுமி, பாலசிங்கம், இராசமணி (நோர்வே), சிவசுப்பிரமணியம் (லண்டன்) முருகையா ஆகியோரின் சகோதரியும், பத்மாதேவி, நடேசன், பத்ம நாதன் (சுதிர்), காலஞ்சென்ற கமலாதேவி (மீனா), பாலநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலக்கம்-42, 'காஞ்சி இல்லம்'
பலாலி வீதி, உரும்பிராய்.
021 2230909, 077 860 8048

தகவல்:
சுப்பிரமணியம்
பரமநாதன்



நடைபெற்றுவரும் லாலிகா தொடரில் நாளை இடம்பெறவுள்ள யுனைற்றட் அணிக்கு எதிரான ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபடும் ரியல் மட்ரிட் வீரர்கள். (ம)

## சுழல் வீரர் என்றால் அது அஸ்வின்தான்

### விராட் கோக்லி புகழாரம்

தற்பொழுது உலகில் உள்ள சிறந்த சுழற் பந்து வீச்சாளர் என்றார் அது அஸ்வின் தான் என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோக்லி.

இலங்கைத் தொடரில் அசத்திய அஸ்வின் 21 இலக்குகளைக் கைப்பற்றி தொடராட்ட நாயகன் விருதை வென்றார். தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் அசத்தி வரும் அஸ்வின் இது வரை 24 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். இதனால் நடை பெற்றுவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் அஸ்வினே தொடராட்ட நாயகனாக வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ளன.

இந்த நிலையில் அஸ்வின் தொடர்பாக கோக்லி தெரிவிக்கையில் -அஸ்வின் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்துவீச்சாளர். வெற்றிக்கு நல்ல ஒரு வழியை அமைத்துக் கொடுப்பவர். தற்போது அவர்தான் உலகின் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக இருக்கிறார். ஒரு சுழல் பந்துவீச்சாளரால் என்னவெல்லாம் சாதிக்க முடியுமோ அதையெல்லாம் அஸ்வின் சாதிப் பார். டெஸ்ட் ஆட்டங்களில் சிறந்த தருணத்திற்காக பொறுமையாக காத்திருக்க வேண்டும். அந்த வகையில் மிஸ்ரா நல்ல சமயத்தில் 2 இலக்குகளை (அம்லா, பிளாசிஸ்) கைப்பற்றினார். அந்த இலக்குகள்சவாலானவை. துடுப்பாட்ட வீரர்களும் சிறப் பாக செயல்பட்டனர். தொடரை முழுமையாக கைப்பற்றுவது என்பது முக்கியமான ஒன்று. அந்த வகையில் டெல்லி ஆட்டமும் கைகொடுக்கும் என நம்புகிறோம் என்றார். (ம)

## அழைப்பு

சாமிநாதன் விமல் மொழிபெயர்த்த
**உபுல் சாந்த சன்னஸ்கல** அவர்களின்
**அம்மா** நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலும்
**வ.ஐ.ச.ஜெயபாலன்** அவர்களின்
மூன்று குறு நாவல்களின் சிங்கள மொழிபெயர்ப்பான
**செக்கு கொனா நூலும்** வெளியிடுதல்
மற்றும் **தென்னிலங்கை எழுத்தாளர்களால்**
**யாழ்ப்பாணப் பொது சன நூலகத்துக்கு வழங்கப்பட்ட**
**பத்தாயிரம் நூல்களைக் கையளிக்கும் நிகழ்வு**
**2015**ஆம் ஆண்டு **நவம்பர்** மாதம் **29**ஆம் திகதி
**ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30** மணிக்கு
**யாழ்ப்பாணப் பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில்**
இடம்பெற உள்ளது.



**இந்த நிகழ்வில்**
**கலந்துகொள்ளுமாறு**
**தங்களை**
**அன்புடன் அழைக்கின்றோம்**

**உபுல் சாந்த சன்னஸ்கல**
எழுத்தாளர்

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org